கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4278 Fax: 0181-903 0827
Mobile: 0958 248580



France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 4 12 - 18 மார்ச் 1998 முழக்கம்: 165



மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126


## மூதூர் - பச்சனூர்

# பொலிஸ் முகாம் தாக்கி அழிப்பு

## பொலிஸ் கொமாண்டோக்கள் தப்பி ஓட்டம்



மாங்குளம் நோக்கி அங்குலம் அங்குலமாக... பக்கம் - 6

(09.03.98)

இன்று அதிகாலை 2.10 மணியளவில் மூதூர் — பச்சனூர் பொலிஸ் முகாம் விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணிகளால் தாக்கி கைப்பற்றப்பட்டது. பத்து நிமிடநேர கடும் சமரின் பின் புலிகளின் படையணிகள் பொலிஸ் காவலரண்களை கைப்பற்றி முகாமினைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

சுமார் 60 விசேட பயிற்சிபெற்ற பொலிஸ் கொமாண்டோக்கள் இம் முகாமினுள் நிலைகொண்டிருந்தனர். புலிகளின் தாக்குதல்கள் ஆரம்பமாகி சில நிமிடங்களுக்குள் இப் பொலிஸ் கொமாண்டோக்கள் பொலிஸ் முகாமைவிட்டு தப்பியோட ஆரம்பித்தனர்.

முகாமினைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அங்கிருந்த ஆயுத தளபாடங்களையும், உணவுப் பொருட்களையும் கைப்பற்றிய பின்னர் முகாமினை தீயூட்டி எரித்தனர்.

(☞ 2ம் பக்கம்)

# குருநகர் மீது பீரங்கித் தாக்குதல்

## புலிகள் - படையினர் தொடர் மோதல்கள்

(08.03.98)

யாழ். குடாவில் இன்று மூன்று முனைகளில் சிறீலங்காப் படைகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை தொடுத்துள்ளனர். இன்று மதியம் சாவகச்சேரிக்கு தென்கிழக்கே உள்ள கச்சாய்ப்பகுதியில் இராணுவ ரோந்து அணியொன்றினை இடைமறித்த விடுதலைப் புலிகள் அதன் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இதன் போது ஏற்பட்ட சேதவிபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை இன்றுகாலை வடமராட்சி குடத்தனைப்பகுதியில் சிறீலங்கா படைகளின் ரோந்து அணி ஒன்றின் மீது மற்றுமொரு தாக்குதலை நடாத்தப்பட்டுள்ளது.

யாழ் குருநகர் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா படைகளுக்கும் இடையே இன்று அதிகாலையும் கடுமையான துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து குருநகர்ப் பகுதியை நோக்கி சிறீலங்காப் படைகளின் பீரங்கிகள் கடும் தாக்குதல்களை தொடுத்துள்ளன.

இதேவேளை, வட்டுக்கோட்டைப் பகுதியில் சனிக்கிழமை (07.03.98) அன்று இரவு சிறீலங்கா படை ஒன்றுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் மோதல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

## ஆவணங்களை வெளியிட அமெரிக்கா மறுப்பு

விடுதலைப் புலிகளுக்கோ அல்லது அவர்களது சட்ட நிபுணர்கள் குழுவிற்கோ தமது இரகசிய ஆவணங்களை தாம் காட்டப்போவதில்லை என அமெரிக்க இராஜாங்க அமைச்சு அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட விசேட அதிகாரங்களைக் காரணம்காட்டி விடுதலைப் புலிகளின் கோரிக்

(☞ 2ம் பக்கம்)

## நயினாமடுவில் தாக்குதல்கள்

### 15 படையினர் பலி; 2 வாகனங்கள் அழிப்பு

ஒலுமடுப் பகுதியில் கடந்த 4-ம் திகதி விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் கேர்ணல் ஜெயசூரியா படுகாயப்படுத்தப்பட்டதன் பின்னர், நயினாமடுப் பகுதியில் தொட

(☞ 2ம் பக்கம்)

## பா.ஜ.கட்சி கூட்டணி 258 இடங்களில் வெற்றி

(புதுடெல்லி மார்ச் 9)

ஜம்மு காஷ்மீர் தொகுதியில் கிடைத்த வெற்றியையடுத்து பாரதீய ஜனதாக் கட்சி மக்களவைத் தேர்தலில் வென்ற இடங்களின் எண்ணிக்கை 258 ஆக உயர்ந்துள்ளது.

இந் நிலையில் வடகிழக்கு பிராந்திய அரசியல் கட்சிகளின் தூதுக்குழு ஞாயிற்றுக்கிழமை வாஜ்பாயை சந்தித்து, தங்களது பகுதியைச்சேர்ந்த 5 உறுப்பினர்களின் ஆதரவு அவருக்கு வழங்குவதாகக் கூறியது. அருணாசல காங்கிரசின் 2 எம்.பிகள், சிக்கிம் ஜனநாயக முன்னணியின் 1 எம்.பி., மிசோராமைச் சேர்ந்த சுயேட்சை உறுப்பினர்கள் ஆகியோரே பாரதீய ஜனதாவுக்கு ஆதரவளிப்பதாகக். கூறியவர்கள். இவர்களுடைய எண்ணிக்கையும் சேர்த்தால் பா.ஜ.க.வின் பலம் 263க்கு உயர்கிறது.

(☞ 2ம் பக்கம்)

## 300 புலிகள் விசேட பயிற்சி

### கிழக்கில் படைகள் உசார்நிலையில்

விடுதலைப் புலிகளின் படையணிகளைசேர்ந்த 300 போராளிகள் விசேட இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாக இராணுவ உளவு வட்டாரங்கள் அரசை எச்சரித்துள்ளன.

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை பயிற்சி முகாமில் இவ் விசேட பயிற்சிகள் புலிகளின் சிறப்பு படைப் பிரிவுத் தளபதிகளின் கண்காணிப்பில் இடம்பெற்று வருவதாகவும்; இதனால் கிழக்கில் இராணுவ முகாங்களும், அதிரடிப்படைத் தளங்களும் உசார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.


லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.00 P.M.
Sunday 12.00 Noon - 6.00 P.M.

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.
**RCS PARIS**
B 399 673 110 (95B01491)
**Directeur de la publication:**
P. Velupillai
**Redacteur:**
P. Sivaguru
**Impression:**
IMPRIMERIE MEAULLE
நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
Tel: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83
டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546
சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374
லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718
இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527
நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

# ஒலுமடுவில் துருப்புக்காவி அழிப்பு!

மாங்குளத்தை நோக்கி முன்னேற பகீரதப்பிரயத்தனம் செய்து வரும் இராணுவத்தரப்பினர் விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதல்களால் பலத்த இழப்புக்களைச் சந்தித்து திணறி வருவது, வெளி உலகிற்கு எல்லாம் தற்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. ஆனாலும் சிறீலங்காவின் இராணுவப் பொய்ப் பிரச்சாரப் பீரங்கிகள் தொடர்ந்தும் தவறான செய்திகளை பிரச்சாரப் படுத்தி வருகின்றன. வன்னிகள நிலையமைப்பு கடந்த 3-ம் திகதி விடுதலைப்புலிகளின் மோட்டார் தாக்குதல்களில் சிறீலங்காப் படையினரின் பிரதான துருப்புக்காவி ஒன்று முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

மாங்குளத்தின் கிழக்குப்பகுதியை நோக்கி இராணுவ அணியொன்று முன்னேற முயன்ற போதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் தாக்குதலில் சேதமடைந்த பாரிய துருப்புக்காவி தொடர்ந்தும் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்படவே, படையினர் மட்டூர்தி (புல்டோசர்) ஒன்றின் உதவியுடன் துருப்புக்காவியை தமது நிலைக்கு கட்டியிழுத்துச் செல்ல முயன்றனர்.

அந்த வேளையில் விடுதலைப் புலிகள் மீண்டும் தமது எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். எறிகணை ஒன்று துருப்புக்காவியின் மீது நேராக வீழ்ந்து வெடித்தமையால் அது முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. இதன்போது சில படையினரும் காயமடைந்துள்ளனர்.

# கொழும்பில் 23 கரும்புலிகளை தேடி மேஜர் ஜெனரல் தலைமையில் படை

கொழும்பு நகரில் 23 கரும்புலிகள் தங்கியிருப்பதாக கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகையான 'சண்டே லீடர்' செய்தி வெளியிட்டுள்ளது. பொருளாதார மையங்கள் மீதும், அரச பிரமுகர்கள் மீதும் தாக்குதல் நடாத்துவதற்கெனவே இக் கரும்புலிகள் ஊடுருவியுள்ளதாக தெரிவித்துள்ள இப் பத்திரிகை, இக் கரும்புலிகளைத் தேடி பெருமெடுப்பிலான தேடுதல் நடவடிக்கையினை இராணுவம் நடாத்தி வருகின்றதெனவும் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டம் தற்போது ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அவ் ஆறு வலையங்களுக்கும் மேஜர் ஜெனரல் ஜாலிய நமுணி நியமிக்கப்பட்டு அவரது நேரடி பணிப்புகளின் பெயரிலேயே இத் தேடுதல்கள் நடாத்தப்பட்டுவருகின்றன. இச்செயற்பாட்டிற்கு உதவியாக சிறீலங்கா பொலிசாரும் கடமையாற்றுகின்றனர்.

வெடிமருந்து மோப்ப நாய்களுடனான விசேட வீதித்தடைகள் யாவும் பெருமளவில் கொழும்பில் தற்போது அமைக்கப்பட்டுள்ளன. கடந்த வெள்ளியன்று (6-ம் திகதி) இவ்வாறான தேடுதல் நடவடிக்கையில் 50 தமிழர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

# 56 - 3 படையணி உயரதிகாரி படுகாயம் இராணுவ வலையத்தினுள் தாக்குதல்

சிறீலங்கா இராணுவத்தின் 56 — 3 கனரக படையணியின் கட்டளை அதிகாரியும் ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் பிரதான வழிநடத்துனர்களில் ஒருவருமான கேர்ணல் ஜெகத் ஜெயசூரியா கடந்த 4ம் திகதி ஒலுமடுப்பகுதியில் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட கண்ணிவெடித்தாக்குதல் ஒன்றில் படுகாயப்படுத்தப்பட்டுள்ளார். இவரது மெய்ப்பாதுகாவலர்கள் இருவரும் இத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.


கொழும்பு இராணுவ வைத்திய வட்டாரங்கள் காயமடைந்த கேர்ணல் ஜெயசூரியவின் நிலை ஆபத்தாக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளன.

ஒலுமடுப்பகுதியில் சிறீலங்காப் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் இராணுவ வலையப் பகுதியில் வைத்து இக் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டமை முழு இராணுவ வட்டாரத்தையுமே அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

'லான்ட்றோவர்' வாகனமொன்றில் கேர்ணல் ஜெயசூரியாவும் அவரது மெய்ப்பாதுகாவலர்களும் இராணுவ கொமாண்டோ வாகனங்களுடன் இராணுவ முன்னரங்க நிலையினை நோக்கி சென்ற வேளையிலேயே பல வாகனங்களுடன் சென்ற அந்தவாகனத்தைக் குறிவைத்து கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

கண்ணிவெடியில் சிக்கிய வாகனம் பலத்த சேதமடைந்துள்ளது. இறந்தவர்கள் போக காயமடைந்தவர்கள் உலங்கு வானூர்தி மூலம் அனுராதபுரம் இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

1994ம் ஆண்டிலிருந்து கேர்ணல் ஜெயசூரிய 56 — 3 படையணி கட்டளை அதிகாரியாக பதவிவகித்து வருபவர். அத்துடன் 'ஜெயசிக்குறுய்' படைநகர்வின் பிரதானமான செயற்பாட்டாளர்களில் ஒருவராகவும் கடமையாற்றிவந்தவர். தற்போது இவர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளமை இராணுவத்தரப்பிற்கு பெரும் இழப்பினைக் கொடுத்துள்ளது.



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 08.03.98 அன்று பாரீசில் தமிழ் பெண்கள் அமைப்பினரால் நடாத்தப்பட்ட 'எழுச்சிமாலை' கலைநிகழ்வில் ஒரு காட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## பொலிஸ்...

இத் தாக்குதலின் போது தமது தரப்பில் எதுவித இழப்புக்களும் இல்லை என விடுதலைப் புலிகள் இன்று அறிவித்துள்ளனர். கிடைக்கப்பட்ட செய்திகளின்படி தப்பியோடிய பொலிஸ் கொமாண்டோக்கள் இன்னமும் தமது தலைமைப் பீடத்துடன் தொடர்புகொள்ளவில்லை. மூன்று பொலிசார் முகாமினுள் கொல்லப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினால் 60 மி.மீ மோட்டார், அதற்கான எறிகணைகள், 5 ரீ 56 ரக ரைபிள்கள் உட்பட ஆயுத தளவாடங்கள் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## பா.ஜ.கட்சி...

அசாமைச் சேர்ந்த 3 எம்.பி. களின் ஆதரவும் விரைவில் பா.ஜ.க.வுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே தெலுங்குதேசம் காங்கிரசுக்கு ஆதரவளிப்பதில்லை எனத் தெரிவித்துவிட்டது. இந்த நிலையில் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் பாரதீய ஜனதா வெல்வது உறுதி செய்யப்படுகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## ஆவணங்களை...

கையை மறுத்துள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சு, தமது செயலாளர்நாயகம் தமது தீர்மானத்தை நீடியான அதே வேளை, மீள் பரிசீலனை செய்யக்கூடிய விதத்திலேயே தெரிவித்துள்ளதாக கூறியுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## நயினாமடு...

ரான கிளைமோர் தாக்குதல்களைப் புலிகள் நடத்திவருகின்றனர். இக் கிளைமோர் தாக்குதல்களில் மொத்தம் 15 சிப்பாய்கள் பலியாகியதுடன் இராணுவத்தினரின் இரண்டு வாகனங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

முதலாவது தாக்குதல் கடந்த 6-ம் திகதி மேற்கொள்ளப்பட்டது. உழவு இயந்திரமொன்றில் பயணம் செய்த சிப்பாய்களே இத்தாக்குதலுக்கு இலக்கானார்கள். இதில் 5 சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இரண்டாவது தாக்குதல், மறுநாளான 7-ம் திகதி மேற்கொள்ளப்பட்டது. சுமார் 18 கடற்படையினரை ஏற்றிவந்த உழவு இயந்திரத்தினை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டது. இதில் 9 கடற்படையினர் ஸ்தலத்திலேயே பலியாகினர். ஆறு பேர் படுகாயப்படுத்தப்பட்டனர். மதியாமடுவிற்கும் — நயினாமடுவிற்கும் இடையிலேயே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய வரவு
IATA
உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,600 Frs. |
| Singapour | - | 3,400 Frs. |
| Madras | - | 3,450 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 1,990 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 07 45 01 37
(ADV)

# கப்பல்கள் மூழ்கிய பின்னரும் கடற்புலிகள் தேடுதலை நடாத்தினர்

## - உயிர் தப்பிய சிப்பாய்கள் பேட்டி -

பருத்தித்துறை கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களில் ஒன்றான 'வலம்புரி'யில் பயணம் செய்த கடற்படைச் சிப்பாய்களில் நான்கு பேர் மாத்திரம் உயிர் தப்பியுள்ளனர். உயிர்காப்பு மிதவையுடன் கடலில் தத்தளித்த இவர்களை இந்திய மீனவர்கள் காப்பாற்றி இந்தியக்கரைக்கு கொண்டு சென்றுள்ளனர். பின்னர் அவர்கள் சிறீலங்கா தூதரகத்தினால் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்.

உயிர்தப்பியவர்கள் தமக்கு நேர்ந்த அனுபவங்களை பத்திரிகைகளுக்கு தெரிவித்தனர்.

புஸ்பகுமார: சம்பவதினம் எமது கடற்பயணத்தின் போது. பருத்தித்துறை கடற்பரப்பு ஊடாக சென்று கொண்டிருந்தோம். இரவு 7.00 மணியளவில் தூரத்தே வெடியோசைகள் கேட்கத் தொடங்கிய போதிலும் 7.50 மணியளவில் புலிகளுடனான உக்கிரமான சண்டை மூண்டது. எம்மை எல்லாம் பாதுகாப்பு தேடும்படி உயர் அதிகாரி பணித்த போது, எனது வலக்காதில் துப்பாக்கிரவை ஒன்று காயத்தை ஏற்படுத்தியது. நான் ஒருவாறு ஒரு நீர்ப்பாதுகாப்பு மிதவையை எடுத்துக்கொண்டு கப்பலின் பின்பகுதிக்கு உருண்டு சென்றேன். அந்த வேளையில் பாரிய வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. கப்பல் பெரிதாக ஆட்டமும் கண்டது. சக சிப்பாய்கள் வீரிட்டுக் கத்திக்கொண்டே கடலில் குதிப்பதைக் கண்டேன். நானும் அறை யன்னல் ஒன்றை உடைத்துக் கொண்டு கப்பலில் குதித்தேன்.

அப்போது கடலில் நான்கு படகுகள் தென்பட்டன. அப் பகுதியில் இருந்து டோர்ச் லைட் வெளிச்சம் கடலில் பாய்ச்சப்பட்டு எதனையோ படகுக்காரர்கள் தேடினர் அவ்வேளை அப் படகுகளிலிருந்தவர்களால் 'என்ட, என்ட (வாருங்கள், வாருங்கள்) என்று சிங்களத்தில் அழைப்பது கேட்டது. எம்மை மீட்க கடற்படையினர் வந்து விட்டார்கள் என்ற மகிழ்வில் எம்மில் சிலர் அப் படகுகளை நோக்கி நீந்திச் சென்றனர். ஆனால் அது விடுதலைப்புலிகளின் படகு என்பது அவர்களுக்கு தெரியாது. போனவர்கள் போனது தான்.

நானும் கரைப்பகுதியை நோக்கி நீந்தினால் விடுதலைப் புலிகளின் கடற் புலிகள் சுட்டுக்கொல்வார்கள் என்பது தெரிந்து அவ்வாறு செல்லவில்லை. நீரில் நெடுநேரம் கிடந்தேன். கடுமையாக கடற் குளிர் என்னை வாட்டியது. சூரிய உதயத்தின் பின்னர் நீரில் மிதந்த எனது சகாக்கள் இருவர் என்னைக் கண்டுவிட்டு என்னை நோக்கி நீந்தி வந்தனர். எனக்கு கொஞ்சம் தைரியம் வந்தது. நாம் ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டே நீரில் கிடந்தோம். பிற்பகல் வேளையிருக்கும். ஒரு இயந்திரப்படகின் ஒலி கேட்டது. எம்மைக் காப்பாற்றுமாறு பலமாக கத்தினோம். ஆனாலும் அப் படகுகள் அதனை சட்டை செய்யாது சென்றுவிட்டது.

சிறிது நேரத்தின் பின்னர் மீண்டும் படகுகளின் ஒலி கேட்டது. ஆனாலும் எமக்கு அப்பாற் சென்ற அவை மீண்டும் எம்மை நோக்கி வந்தன. அவை தமிழ் நாட்டு மீனவரின் மீன்பிடிப் படகுகள். நாம் அவர்களிடம் எம்மை காப்பாற்றும்படி கோரினோம். அவர்களும் எம்மை தமது படகுகளில் ஏற்றினர். எமக்கு ஏற்பட்ட பசியை அவர்களிடம் நாம் சொல்லவே, சோறும் கடலையும் எமக்குத் தந்து எமக்கு படுக்கவும் இடம் தந்தனர். உண்மையிலேயே அவர்கள் எம்மை நன்றாக பராமரித்து கரை சேர்த்தனர்.

உயிர் தப்பிய மற்றொரு சிப்பாயான வசந்த விஜேபண்டார:

எமது 'வலம்புரி'யை கரும் புலிகள் தாக்கிவிட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன்.. கப்பல் மெதுவாக மூழ்கத் தொடங்கியது. அந்த நேரம் பயங்கர வெடியோசையினால், எனது வலது காதின் செவிப்பறை கிழிந்து இரத்தம் வடியத் ததொடங்கியது. இந்த வேளையில் கடலில் குதித்த நான் எனது நண்பர்கள் பலரும் தத்தளிப்பதை கண்டேன். புலிகளும் தொடர்ந்து தாக்குதலை நடாத்தியதால் அவர்களில் பலர் கொல்லப்பட்டனர்.

புலிகளின் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக நானும் நீருக்குள்ளே சில நிமிடங்கள் மூழ்கிக் கிடந்தேன். நீருக்கு வெளியே தலையைக்காட்ட பயமாகவிருந்தது. பின்னர் நீந்திக் களைத்து நீரில் கிடந்தவேளை இந்திய மீன்பிடிப் படகுகள் காப்பாற்றின.

உயிர் தப்பியவரான இந்திகா சமரக்கோன்:

'எனக்கு உயிர்ப் பாதுகாப்பு மிதவை அணிய நேரமிருக்கவில்லை. அதனால் கடலில் பாய்ந்த நான் மூழ்கத் தொடங்கினேன். அந்தவேளை எனது சக நண்பர்கள் என்னை காப்பாற்றினார்கள்.

ஆனாலும் தூரத்தே விடுதலைப்புலிகள் தேடுதலை நடாத்திக் கொண்டிருந்தது எமக்கு பெரும் பீதியைக் கொடுத்தது.' என்று தெரிவித்தார்.

# புழுதியில் தோய்ந்த சந்திரிகா

சந்திரிகாவும், ஏனைய அரச பிரமுகர்களும் இருப்பதை அறியாத சிறீலங்கா வான்படை உலங்குவானூர்தி ஒன்று, தரையிறங்க முற்பட்டதால் ஏற்பட்ட புழுதியில் சந்திரிகா மூடப்பட்டு பெரும் அவஸ்தைக்கு உள்ளான சம்பவம், கடந்த வெள்ளியன்று போகம்பரை மைதானத்தில் இடம்பெற்றுள்ளது.

போகம்பரையில் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றிற்காக சந்திரிகாவும் ஏனைய அமைச்சர்களும் மேடையில் அமர்ந்திருந்தனர். இதனை அறியாத சிறீலங்கா வான்படை உலங்கு வானூர்தியொன்று போகம்பரை மைதானத்தில் இறங்க எத்தனித்தது.

இதனால் பரபரப்படைந்த சந்திரிகாவின் பாதுகாப்பு அதிகாரிகள் அந்த உலங்கு வானூர்தியை இறங்கவேண்டாமென உடனடியாக எச்சரித்ததால், உலங்கு வானூர்தி அவசரமாக மேலெழும்பியது. இதனால் எழுந்த பாரிய புழுதி மூட்டம் சந்திரிகாவையும் ஏனைய அமைச்சர்களையும் மூடிக் கொண்டதால் பாதுகாப்பு படையினர் மிகவும் பரபரப்பு அடைந்து சிறிது நேரம் ஓடித் திரிந்துள்ளனர். புழுதி மூட்டம் கலைந்ததும் தூசு படிந்த நிலையில் சந்திரிகா காணப்பட்டுள்ளார்.

# இரத்மலானை தளத்தில் விமானம் தீப்பிடித்தது

லயன் எயாருக்கு போட்டியாக ஆரம்பிக்கப்பட்ட சிறீலங்காவின் இன்னொரு தனியார் விமான நிறுவனமான மொனரா விமானச்சேவையின் அன்டனோவ் ரக விமானமொன்று கடந்த 5-ம் திகதி இரத்மலானை விமானத்தளத்தில் தீப்பிடித்து பெருஞ் சேதமடைந்துள்ளது.

இவ் விமானம் யாழ்ப்பாணத்திலிருந்து தனது பறப்பை ஆரம்பித்து இரத்மலானை விமானத்தளத்தில் தரையிறங்க முயற்சித்த வேளை அதன் இயந்திரங்களில் தீப் பிடித்துக் கொண்டது. அவ்வேளை விமானத்தினுள்ளே 25 பயணிகள் இருந்துள்ளனர்.

பலத்த பிரயத்தனத்தின் பின்னர் இத் தீ அணைக்கப்பட்டது. பினனர் ஓடு பாதையிலிருந்து விமானம் கட்டியிழுக்கப்பட்டு அப்பாற் கொண்டு செல்லப்படுள்ளது.

மருதானை குண்டுவெடிப்பு செய்திப் பரபரப்பில் விமானம் தீப்பிடித்த செய்தி அமுங்கிவிட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச ஆதரவாளர்களை இருவர் நீர்கொழும்பில் சுட்டுக் கொலை

மேற்கு மாகாணசபை பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரான 'நந்ன மென்டிசின்' வீட்டிற்கு சென்றுவிட்டு வாகனமொன்றில் திரும்பிக்கொண்டிருந்த பொதுஜன முன்னணி ஆதரவாளர்கள் இருவர் கடந்த செவ்வாயன்று நீர்கொழும்பு சோவில் வீதியில் வைத்து இனந்தெரியாத ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் சீனத் தயாரிப்பு T-56 ரக துப்பாக்கியினாலேயே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். பொதுவாக இத் துப்பாக்கி இராணுவத்தினரின் பாவனையில் உள்ளதாகும். நீர்கொழும்பு பகுதியில் நடைபெற்றுவரும் அரசியற் கலவரங்களில் இக் கொலைகளும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

# சீதாராம் கேசரி பதவி விலகல் அறிவிப்பு

## சோனியா பதவிக்கு வருவாரா ?

09.03.98

இந்தியப் பொதுத் தேர்தலில் அறுதிப்பெரும் பெரும்பான்மை பெறத் தவறிய காங்கிரஸ் கட்சியின் தலைவரான சீதாராம் கேசரி தான் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து பதவி விலகுவதாக இன்று அறிவித்துள்ளார்.

இவ் அறிவிப்பைக் கொடுத்த கேசரி, தலைமையைப் பொறுப்பேற்க சோனியா காந்தி வர வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார். ஆயினும் சோனியாகாந்தி இதுவரை எதுவும் இதுபற்றித் தெரிவிக்கவில்லை. கேசரியின் தலைமைத்துவம் தொடர்பாக பல சர்ச்சைகள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

நித்தி வாகன சேவை

வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், ஐரோப்பிய நாடுகளுக்குமான சகல போக்குவரத்துக்கான வாகன வசதிகளுக்கும் இன்றே நாடுங்கள்

உங்கள் தொடர்புகட்கு- நித்தி

Tel: 01 48 05 02 14 / 01 43 03 07 08,

(Répondeur) 01 49 23 97 32

அவசரத்தொடர்புகளுக்கு. 06 07 34 80 51

# யாழ் குடாவில் ஈ.பி.டி.பியும் பாலியல் வன்முறையில்

சிறீலங்கா இராணுவத்தினருடன் இணைந்து யாழ். குடாவில் பெரும் அடாவடித்தனங்கள் புரிந்து வரும் ஈ.பி.டி.பி தமிழ் குழுவின் உறுப்பினரொருவர், 21 வயதுள்ள யாழ்.குடா யுவதி ஒருவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியுள்ள அதிர்ச்சியான செய்தி வெளிவந்துள்ளது.

எஸ்.புஸ்பலதா என்ற இந்த 21 வயது யுவதி, ஈ.பி.டி.பியினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில், அக் குழுவின் உறுப்பினரான கோ.சிவநாதன் என்பவரால் பாலியல் வல்லுறவு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

பின்னர் இவர்களின் பிடியிலிருந்து தப்பிய இவ் யுவதி தனக்கு நேர்ந்த கதி பற்றி யாழ். நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்து நீதிபதி மேற்படி ஈ.பி.டி.பி உறுப்பினரை கைதுசெய்யும்படி பணித்துள்ளார்.

ஆயினும் அவர் தலைமறைவாகிவிட்டதாக தெரியவருகிறது.

# பாராளுமன்ற பகிஷ்கரிப்பால் சிறீலங்கா ஜனநாயகம் அழிகிறதே !

## -நீலனின் கவலை-

சிறீலங்காவின் ஐக்கிய தேசியக் கட்சியினர் சிறீலங்காப் பாரளுமன்றத்தை பகிஷ்கரிக்க எடுத்துள்ள முடிவானது, நாட்டின் ஜனநாயக அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறதே என தமிழர் விடுதலைக் கூட்டணி தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான நீலன் திருச்செல்வம் கவலை தெரிவித்துள்ளதுடன் ஐ.தே.க. விற்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான உறவுகள் சீர்படுமெனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஆனால் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் இது பற்றி தெரிவிக்கையில், பாராளுமன்றத்தினை பகிஷ்கரிக்க ஐ.தே.க. எடுத்த முடிவு சரியானது என குறிப்பிட்டுள்ளார்.

# டென்மார்க்கில் தமிழர் ஆதரவு மகாநாடு

## தமிழர் சுயநிர்ணய உரிமைக்கு முன்னாள் பிரதமர் ஆதரவு

டென்மார்க்கின் தலைநகரம் கோப்பன்ஹேகனில் 07.03.98 அன்று தமிழர்களின் உரிமைப் போராட்டம் பற்றி விளக்கும் கருத்தரங்கொன்று டென்மார்க்கில் உள்ள தமிழ்ச் சங்கங்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வரங்கில் அரசசார்பற்ற நிறுவனங்கள் பல கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், முன்னாள் பிரதமர் அங்கர் யோர்கன்சன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு விழாவை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். அவர் பேசுகையில் டென்மார்க்கில் தமிழர்களுக்கு நடந்த ஓர் வஞ்சகச் செயல் ஒன்றை மேற்கோள் காட்டினார். 1980 களின் நடுப்பகுதிக்குப் பின்னர் டென்மார்க்கிற்கு அகதிகளாக வந்து குடியனுமதி கிடைத்தவர்களின் குடும்பங்கள் இங்கு வருவதற்கு அரசாங்கம் தடையாக இருந்ததனால் அவ் அரசாங்கம் ஆட்சியில் இருந்து கவிழ்க்கப்பட்டதையும் தமிழர்களுக்கு இழைத்த அநீதியை சோதனை செய்து ஏழு கொழுத்த புத்தகங்களாக அறிக்கை தயாரித்துவிட்டதையும் அவர் எடுத்துக்காட்டாக கூறினார்.

தமிழர்களின் நியாயமான போராட்டத்திற்குத் தோள் கொடுக்கவேண்டும் என்றும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு உதவ வேண்டும் என்றும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார். சிங்கள அரசுகள் எப்படித் தமிழர்களை அடக்குமுறைக்கு ஆளாக்குகின்றது என்றும் விரிவாக எடுத்துரைத்துத் தனது உரையை முடித்துக்கொண்டார்.

தற்போதைய பிரதமர் இக் கருத்தரங்கிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், தமிழர்களின் சுயநிர்ணய போருக்கு தாமும் குரல்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம் என்று தெரிவித்துள்ளார். தேர்தல் வேலைகள் மும்முரமாக நடந்துகொண்டிருப்பதால் அவர் கருத்தரங்கில் கலந்துகொள்ள முடியாமல் போனதாகவும் அவர் காரணம் காட்டியிருந்தார்.

அரசவை நாடகப் பேரொளி கீட்டா நோபி அவர்கள் இக் கருத்தரங்கினைச் சிறப்பிக்கும் வண்ணம் Hans Christian Andersen அவர்களின் நட்புப் பற்றி எடுத்துரைக்கும் ஒரு கதையை வாசித்து Johannes V Jensen அவர்களின் கவிதை ஒன்றையும் வாசித்து சிறப்பித்துச் சென்றார்.

வணக்கத்திற்குரிய Dr. S.J. Immanuel அடிகளார் விடுதலைப் போராட்டத்தில் எப்படிக் குருமார்கள் பங்கெடுத்துக் கொள்கின்றனர் என்பதை விளக்கமாகக் கூறியதுடன் வந்திருந்த டென்மார்க்கினருக்கும் இலங்கையில் நடக்கும் அநீதிகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

இலண்டனைத் தளமாகக் கொண்ட மனித உரிமை பிரச்சாரகரான டெய்ட்ரி மைக்கொனெல் அவர்கள் இலங்கையில் மீறப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றி தெளிவாக எடுத்து விளக்கினார்.

அனைத்துலகத் தமிழரின் ஒன்றியத்தின் தலைவர் James Karan அவர்கள், ஆட்சிக்கு மாறிமாறி வந்த சிங்கள அரசாங்கங்கள் எப்படித் தமிழர்களை வாக்குறுதி கொடுத்து ஏமாற்றின என்றும் தெளிவாக தெரியப்படுத்தினார்.

இலண்டனை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் தமிழ்ச் சங்கத்தின் தலைவி செல்வி மான் அவர்கள், இலங்கை அரசு பெண்களின் மேல் பாலியல் வன்முறையை எப்படியொரு போராயுதமாக தமிழர்களுக்கெதிராக பாவிக்கின்றது என்று தெளிவாக விளக்கம் கூறினார். மேலும் அவர் ரஜினி, கிருஷாந்தி போன்ற பெண்களின் மேல் பாலியல் வன்முறையை இலங்கையின் கட்டாக்காலி இராணுவம் கட்டவிழ்த்துவிட்டு அவர்களைக் கொலை செய்தது பற்றியும், மட்டக்களப்பில் வாழ்ந்த கோணேஸ்வரியை பாலியல் ஆய்க்கினைகளுக்கு தொடர்ந்து உட்படுத்திய பின்னர் அவர் காடையர்களால் மிதிக்கப்பட்டு அவரது பெண்ணுறுப்பில் வெடிகுண்டு வைத்து வெடிக்கப்பண்ணி அவரை சின்னாபின்னமாக்கியது பற்றியும் கூறினார். இது பற்றிக் கூறிக்கொண்டிருக்கும்பொழுது உணர்வு மேலீட்டால் அவரது நா தழுதழுத்ததுடன் சற்று நேரம் தாமதித்து தனது தழும்பும் உணர்வுகளை அடக்கிக் கொண்டு மேலும் பேசித் தனது உரையை முடித்தார்.

இக் கருத்தரங்கில் அமைந்த பேச்சாளர்களில், மிகவும் குறிப்பாக இலங்கையின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மெண்டிஸ் என்கின்ற கதாசிரியரும் மனித உரிமைப் பிரச்சாரகருமானவர் ஆற்றிய உரையும், இலங்கையில் எப்படி பெரும்பான்மைச் சிங்களவர் தமிழர்களைப் பார்க்கின்றனர் என்றும், சந்திரிகா எப்படி பொய் முகங்கள்கொண்டு தனது மக்களையும் தமிழ் மக்களையும் வெளியுலகையும் ஏமாற்றுகின்றார் என்றும் மிகவும் சுவாரசியமான முறையில் எடுத்துக்கூறினார்.

அனைத்துலக மனித உரிமைச் சங்கத்தின் தலைவர் Lars Norman Jorgensen என்பவர் இலங்கையில் அரசாங்கம் செய்கின்ற அத்துமீறல்களைப் பற்றி தெளிவாகக்கூறினார். அதன் பின்னர் புலிகளும் அத்துமீறுவதாகக் குற்றம் கூறினார். அதற்கு ஆட்சேபனை தெரிவித்து கருத்தரங்கிற்கு வந்திருந்த மகேசுவரன் என்பவர் விளக்கம் அளித்தார். அவர் விளக்கமளிக்கையில் நான் இவ்வளவு காலமும் அறிந்ததன்படி சிங்கள மீனவர்களையோ, சிப்பாய்களையோ கேவலமாகப் புலிகள் நடாத்தவில்லை. இதை நான் சொல்லவில்லை. அண்மையில் புலிகளிடம் இருந்து விடுதலையாகிச் சென்ற சிங்கள மீனவர்கள் இலங்கையின் தென்பகுதியில் அதாவது அரசாங்கத்தின் பகுதியில் நின்றுகொண்டு தங்களை தங்களின் சகோதரர்கள் போல் நடத்தினார்கள் என்று பத்திரிகைக்கு செய்தி அளித்ததைத் தெரியப்படுத்தினார்.

இடதுசாரிக் கட்சிகளில் ஒன்றான சோரன் சுண்டகோ என்பவர் தனது உரையில், இலங்கை அரசு எவ்வகையில் தமிழர்களின் உரிமைகளையும் மனித உரிமைகளையும் மீறுகின்றது என்று உதாரணங்களுடன் தெளிவுபடுத்தினார். மற்றும் இப்படியான கருத்தரங்களின் முக்கியத்துவத்தையும் தெளிவாக எடுத்தியம்பினார்.

கடைசியாக 'கேள்வி பதில்' மேடையில் பல விடயங்கள் அலசி ஆராயப்பட்டன. அகதிகள் திருப்பி அனுப்பப்படும் பிரச்சினைகள்; இலங்கைக்கு மேற்கு நாடுகள் செய்கின்ற உதவிகளை நிறுத்துவது பற்றிய வேண்டுகோள்கள், இப்படிப் பல விடயங்கள் கேள்விகளாகக் கேட்கப்பட்டு கருத்தரங்கம் நிறைவாக முடிவடைந்தது. இக் கருத்தரங்கத்தினை மேலும் சிறப்பிக்கும் வண்ணம் மூன்று தமிழ்ச் சிறுமிகள் அழகாக நடனமாடியதுடன் நடனம் பற்றி டென்மார்க் நாட்டு மொழியில் அழகான விளக்கம் கொடுத்ததும் குறிப்பிடத்தக்கது. அழகான கலாச்சார அம்சங்களைக்காட்டி அவர்கள் விழாவை சிறப்பித்தனர் என்று சொன்னால் அது மிகையாகாது.

**கெ. ஏகாம்பரம்**

# மருதானைக் குண்டுவெடிப்பு சந்திரிகா தொடர்பு துண்டிப்பு

மருதானையில் நடைபெற்ற குண்டுவெடிப்பினை அடுத்து சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா அவசர அவசரமாக தேசிய பாதுகாப்பு சபையினைக் கூட்டி கொழும்பு பாதுகாப்புநிலை பற்றி ஆராய்ந்துள்ளார்.

இம் மகாநாட்டில் சந்திரிகா மிகவும் பதட்டமாகக் காணப்பட்டதுடன் கொழும்பு பாதுகாப்பில் அசட்டையாக இருப்பதாகப் படை அதிகாரிகளையும், பொலிஸ் அதிகாரிகளையும் குற்றஞ்சாட்டியதாகவும் கூறப்படுகிறது.

குண்டுவெடிப்பு நிகழ்ந்த ஒரு சில கணங்களின் பின்னர் ஜனாதிபதி மாளிகைக்கும், சந்திரிகாவின் அதிகாரிகளுக்குமிடையேயான தொலைத்தொடர்புகள் அரைமணி நேரமாக துண்டிக்கப்பட்டமை குறித்தும் சந்திரிகா அப்போது விளக்கம் கோரியபோதிலும், அதற்கான காரணத்தை எந்த அதிகாரியும் விளக்கமாக தெரிவிக்கவில்லை.

இதேவேளை சிறீலங்கா பொலிஸ் தரப்பு இக் குண்டு வெடிப்பு பற்றி மிகவும் குழப்பமான நிலையிலேயே இருந்து வருகிறது. குண்டு பொருத்தப்பட்ட வாகனத்தின் இலக்கு எதுவெனத் தெரியவில்லை எனவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புப் பத்திரிகைகளோ இக் குண்டின் இலக்கு, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை எனவும், சந்திரிகா எனவும் வேறு வேறான செய்திகளை பிரசுரித்துள்ளன.

# தூதரக அதிகாரிகளிடம் ஐ.தே. கட்சி முறையீடு

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் தம்மீது அவிழ்த்து விடப்பட்டுள்ள காடைத்தனங்கள் குறித்து ஐ.தே. கட்சி தூதுக்குழு மேற்குலக நாடுகளின் தூதர்களைச் சந்தித்து எடுத்துரைத்துள்ளது.

பிரித்தானியா, இந்தியா, அமெரிக்கா ஜப்பானிய தூதுவர்களைச் சந்தித்த மேற்படி தூதுக்குழு, அண்மைக்காலமாக பொதுஜன ஐக்கிய முன்னணியினரால் ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் தாக்குதலுக்கு இலக்காவது குறித்து எடுத்துரைத்துள்ளது.

ஐ.தே.கட்சி தூதுக்குழுவிற்கு கொழும்பு மாநகர முதல்வர் கரு. ஜெயசூரிய தலைமை தாங்கினார். இதே காரணத்திற்காக பாராளுமன்றத்தை ஐ.தே.கட்சி ஒருமாதகாலம் பகிஷ்கரிக்க முடிவு செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

# உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு வருடாந்தப் பொதுப் பரீட்சை

சுவிஸ் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கல்விச் சேவை, மாணவர்களுக்கான வருடாந்தப் பொதுப் பரீட்சையை எதிர்வரும் சித்திரை மாதம் 04-ம் திகதி (04.04.98) சுவிஸ் அனைத்து மாநிலங்களிலும் நடாத்தவுள்ளது. 31.01.98 அன்று நடைபெற்ற சுவிஸிலுள்ள தமிழ் பாடசாலைப் பொறுப்பாளர்கள், ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடலில் கலந்தாலோசிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவிற்கு அமையவே இது நடைபெற்றுள்ளது. 01.01.93 ற்கு பின்னர் பிறந்த மாணவர்கள் பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். தமிழ்ச் சிறுவர் பாடசாலையில் கல்வி கற்காத தனிப்பட்ட மாணவர்களும் பரீட்சையில் பங்குபற்ற அனுமதி வழங்கப்படும். இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி 18.03.1998 வரை என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

பரீட்சைக்குழு உலக தமிழர்
ஒருங்கிணைப்புக் குழு
Posfach -2257
8037 Zurich.

# சிறீலங்கா பாராளுமன்றத்தை ஐ.தே.கட்சி பகிஷ்கரிப்பு

சிறீலங்கா பாராளுமன்ற அமர்வுகளில் ஒரு மாதத்திற்கு கலந்துகொள்ளப்போவதில்லை என சிறீலங்கா பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடந்த 3-ம் திகதி அறிவித்துள்ளது. பாராளுமன்றத்தில் இதனை அறிவித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கா தமது உறுப்பினர்களுடன் உடனடியாக சபையை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து பாராளுமன்றச் சபை கலைந்துள்ளது.

ஐ.தே.க.வின் இப் பகிஷ்கரிப்பிற்கு, முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் விஜயபால மெண்டிசின் குடியுரிமையை ரத்துச் செய்ய பொதுஜன ஐக்கிய முன்னணி எடுக்கும் நடவடிக்கையே காரணம் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எதிர்வரும் 17ஆம், 18 ஆம் திகதிகளில் இக் குடியுரிமை நீக்கப் பிரேரணை, அரசினால் சமர்ப்பிக்கப்படத் திட்டமிடப்பட்டிருந்த வேளையிலேயே ஐ.தே.க. யினர் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இதேநேரம் எப்பாவலைப் பகுதியில் நடைபெற்ற ஐ.தே.க. கட்சிக் கூட்டத்தின் மீது அரச குண்டர்களால் நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து கடந்த 3 ஆம் திகதி ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றக் கட்டடத்திற்கு முன்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

## யாழ்ப்பாணச் செய்திகள்

# மீன் பிடித்தடை நீக்காவிட்டால் உண்ணாவிரதம்

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள மீன் பிடித் தடையினால் ஏராளமான மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டது தெரிந்ததே.

இவ்வாறு சுளிபுரம் கடலில் விதிக்கப்பட்டுள்ள மீன்பிடித் தடையினால் சுளிபுரம் மேற்கு கடற்தொழிலாளர் ஊட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 150 ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மிகவும் கஷ்டங்களுடன், எவ்வித வருமானமும் நிவாரணமும் அற்று வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் சிறீலங்கா இராணுவத்தால் விதிக்கப்பட்டுள்ள மீன் பிடித்தடையை நீக்கக்கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

சுமார் 25 வருடங்களாக தாம் சவுக்கடி, புளியந்தீவு, திருவடிநிலை கடற் பிரதேசங்களில் மீன் பிடித்து வந்ததாகவும் கடந்த டிசம்பர் மாதம் 22-ம் திகதி இராணுவத்தினரால் விதிக்கப்பட்ட தடையினால், கடலில் தாம் போட்டு வைத்துள்ள வலைகள் தெப்பங்கள் எதனையும் மீட்கமுடியாது உள்ளது. தொடர்ந்து இவ்வாறு தடை இருக்குமானால் தமது வருமானத்தை மட்டுமல்ல ஆயிரக்கணக்கான பெறுமதியுள்ள தொழில் உபகரணங்களையும் இழக்கவேண்டி வருமென அம் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## பொருட்கள் விலையேற்றம்

யாழ். குடாநாட்டில் சீனி, அரிசி, எரிபொருட்கள் போன்ற பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. சீனி கிலோ 50 ரூபாவாகவும் பெற்றோல் லீற்றர் 170 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனைவிட கறுப்புச் சந்தையில் இவை கூடுதல் விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க முத்திரைக்கும் பெருந்தட்டுப்பாடு நிலவி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. பிரதான தபால் அலுவலகங்களில் கூட முத்திரை, வான் கடிதம், தபால் உறைகள் கையிருப்பில் தீர்ந்துபோயுள்ளதால் பல உப தபால் நிலையங்கள் இயங்கமுடியாத நிலைக்குச் சென்றுள்ளன. இத் தட்டுப்பாடு பற்றி சிறீலங்கா தபால்மா அதிபருக்கு அறிவித்துள்ளபோதிலும் பயனெதுவும் கிடைக்கவில்லை என தெரியவருகிறது.

இதேவேளை இத் தட்டுப்பாடுகளினால் தோன்றியுள்ள கறுப்புச் சந்தையினால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பிட்ட பொருளின் விலையினை விட பல மடங்கு செலுத்தியே பொருட்களை விற்பனை செய்யப்பட்டு வருவதால் பல அத்தியாவசியத் தேவைகளைக்கூட நிறைவுசெய்ய முடியவில்லை என மக்கள் கவலைகொண்டுள்ளனர்.

பொருட்களின் விலை இவ்வாறு அதிகரித்துச் செல்ல மறுபுறம் மரக்கறிகளின் விலை மிகவும் வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கொழும்புக்கான ஏற்றுமதி தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாலேயே இவ்விலை வீழ்ச்சிக்கான காரணம் எனவும் கூறப்படுகிறது.

## அபிவிருத்தித் திட்டங்கள் அத்திவாரத்துடன் நிற்கின்றன

சிறீலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள குடாநாட்டில் அபிவிருத்திகளை மேற்கொள்ளவென கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு வேலைகள் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இராணுவ நடவடிக்கைகளினால் அழிக்கப்பட்ட பல கட்டடங்களில் சிலவற்றைத் திருத்தி அமைக்கும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் பல இடங்களில் அத்திவார வேலைகளுடனேயே நிறுத்தப்பட்டு பல மாதங்களாகிவிட்டன என குடாநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு வைத்தியசாலைகளும் பாடசாலைகளும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நிதி பற்றாக்குறையால் இடைநடுவில் நிறுத்தப்பட்டுவிட்டதாக கூறப்படுகின்றது.

இதேவேளை வடக்கு கிழக்கிற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் 18 கோடியே 67 இலட்சம் ரூபா பயன்படுத்தப்படாமல் மீண்டும் சிறீலங்கா திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என மாகாண திட்டமிடல் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அபிவிருத்திக்குப் பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பப்பட்ட செய்தியை பல அரச அதிபர்கள் அறிந்து கவலையும், கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

## மாணவியை கொலை செய்த இராணுவத்தினர் விடுதலை

யாழ்.குடாவில் இராணுவ வாகனத்தால் மோதிக்கொல்லப்பட்ட மாணவி மீதான வழக்கு கடந்த புதனன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

1996 செப். 7-ம் திகதியன்று பாடசாலை சென்றுகொண்டிருந்த ஆனந்தி கணநாதன் என்ற மாணவியின் துவிச்சக்கரவண்டியை தமது இராணுவ பவள் வாகனத்தால் மோதி அவரை கொலைசெய்த இராணுவத்தினருக்கு எதிரான வழக்கு ஓராண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்தது.

கடந்தவாரம் அச் சிப்பாய் மாணவியைக் கொலை செய்ததற்கான சாட்சிகள் போதவில்லை என்ற காரணத்தினால் யாழ்.மாவட்ட நீதிபதி ஏகநாதனால் தள்ளுபடிசெய்யப்பட்டு இராணுவத்தினரும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## புலிகளைக் காட்டிக் கொடுக்காததால் பொதுமக்கள் இராணுவத்தால் தாக்கப்பட்டனர்

நாவற்குழி, மறவன்புலோலியில் உள்ள பொதுமக்கள் கடந்த வியாழனன்று சிறீலங்கா இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். மறவன்புலோலிப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடமாடியதாகக் கிடைத்த தகவலையடுத்து அப் பகுதிகளுக்குச் சென்ற இராணுவத்தினரே 'விடுதலைப் புலிகள் நடமாடியதைப்பற்றி தமக்கு இங்குள்ள பொதுமக்கள் யாரும் தகவல் தரவில்லை' என்று கூறியே இவ்வாறு கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இவ் இராணுவத்தின் தாக்குதலினால் காயமடைந்த பலர் சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை சிறீலங்காவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை கொழும்பில் கூட்டமொன்றில் பேசுகையில் 'குடாநாட்டில் இன்னும் பத்துவீதமான பகுதி புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலேயே உள்ளது. அதனையும் மீட்டெடுக்க படையினர் போராடி வருவதாகவும்' குறிப்பிட்டுள்ளார்.

## பொலிசாரால் தடுத்து வைத்திருந்த பெண் சுயநினைவிழந்த நிலையில்

சிறீலங்காப் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் சுயநினைவற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். செல்லையா தவமணி என்ற இவ் 55 வயதுப் பெண்மணி கடந்த சில மாதங்களின் முன் தனது கைப்பையினுள் சில முக்கிய புகைப்படங்களை வைத்திருந்ததாகக் காரணம் கூறி சிறீலங்காப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட இப் பெண்மணி இதற்கு முன்பும் ஒருமுறை நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை இவரை மேலதிக விசாரணைக்கென அநுராதபுரம் கொண்டுசெல்வதற்கென பொலிசார் எடுத்த முயற்சியும், இவர் சுய நினைவை இழந்ததால் தடைப்பட்டுள்ளதென தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாதுகாப்பின்றி நுகர்வோருக்கு உணவு விற்பனை

குடாநாட்டில் மருந்தகங்களிலும், சில உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் கடைகளிலும் மிகவும் நச்சுத் தன்மை கொண்ட எலிப்பாசாணம் போன்ற பொருட்களும் விற்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விவசாயத் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகள் விற்பனை செய்யப்படும் கடைகளில் மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இம் மருந்துகளை விற்பனை செய்பவர்கள் உரிய பாதுகாப்புகளின்றி இவற்றினைக் கையாள்வதால் உயிராபத்துக்களும் ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு. எனவே விற்பனை செய்தவற்றினை தடை செய்து பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவேண்டியது அவசியம் என யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் அண்மையில் வெளியிட்டுள்ள தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## அங்கவீனமுற்றவர்களுக்கு உதவ ஜெய்ப்பூர் தொழிற்சாலை

வடக்குக் கிழக்கில் உள்ள அங்கவீனமுற்ற மக்களுக்கு செயற்கைக் கால் வழங்கி உதவ யாழ்ப்பாணத்தில் உள்ள ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை முன்வந்துள்ளது.

குடாநாட்டிலும் கிழக்குப் பகுதிகளிலும் மிதிவெடிகளினால் தினமும் ஏராளமான பொதுமக்கள் தமது அவயவங்களை இழந்து வருகின்றனர். அவர்களுக்கு உதவி செய்வதற்கு தாம் தயாராக இருப்பதாக அந்நிறுவனத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள அங்கவீனமுற்ற மக்கள் இத் தொழிற்சாலையுடன் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு செயற்கை அவயவங்களை வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிவந்துவிட்டது

**பாலம்**

**உங்கள் பிரதிகளுக்கு இன்றே பாலம் முகவர்களுடன் தொடர்புகொள்ளுங்கள்**

## இராணுவத்தினரால் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட தென்னைமரங்கள் அழிப்பு

யாழ். குடாவினை ஆக்கிரமித்துள்ள சிறீலங்கா இராணுவத்தினர் பல இலட்சக்கணக்கான பயன்தரும் மரங்களை வெட்டி அழித்து வருகின்றனர். விடுதலைப் புலிகள், மரங்களின் பின்னே மறைந்திருந்து தாக்குதல்களை நடாத்திவிட்டு தப்பிச் செல்வதாலேயே மரங்கள் அழிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் இராணுவத்தினரால் 2 இலட்சங்களுக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பல வீதியோர நிழல் மரங்கள், பனை மரங்கள் என்பன தறிக்கப்பட்டு அவர்களின் பாதுகாப்பு அரண்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இணுவிலில் அநாதரவாக கிடந்த பெண்ணின் சடலம்

இணுவில் காரைக்கால் சிவன் கோவில் பகுதியில் வயோதிபப் பெண்ணொருவரின் சடலம் அநாதரவான நிலையில் கடந்த மாதம் 24-ம் திகதியன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள பொதுமக்களால் அடையாளம் காணமுடியாததால் அப்பெண்ணின் சடலம் யாழ். வைத்தியசாலையின் சவச் சாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

# மாங்குளத்தை நோக்கி அங்குலம் அங்குலமாக...

*('ஜெயசிக்குறுய்' போர்க்களம் தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் ஆற்றலைப் புலப்படுத்தும் களமாக உருவாகி வருகிறது. இதனைப் படிப்படியாக சிங்களப் பத்திரிகையாளர்கள் ஏற்றுக்கொண்டு வருகின்றனர்.*

*இக் கட்டுரை Sunday Leader பத்திரிகையில் சிங்களப் பத்திரிகையாளர் றோய் டெனிஸினால் எழுதப்பட்டது. புளியங்குளம் - கனகராயன்குளம் - மாங்குளம் என்பன புலிகளின் கோட்டைகளாகத் தொடர்ந்து விளங்குகின்றன என்கிறார் இப் பத்திரிகையாளர்)*

வவுனியா விமானப் படைத் தளம் காலை 8.00 மணி:

சத்தமிடும் ரெலிப் பிரிண்டர்களும் வரைபடங்கள் மாட்டப்பட்ட சுவர்களும் கொண்ட அந்த நெரிசலான அறையினுள் 'மாங்குள பயணம் 224466" எனத் தலைப்பிடப்பட்ட ரெலிப் பிரிண்டரில் வந்த செய்தியை விமானப் படை சார்ஜன்ட் விமானியிடம் கொடுத்தார். இது விமானியினுடைய மாங்குளம் மீதான திட்டத்தையும் மாங்குளம் கிழக்குப் பகுதியில் போர்ராளிகளின் நகர்வையும் காட்டும் செய்தியாகும்.

1980களில் விமானப் படை விமானிகளின் பறக்கும் திட்டங்கள் அவர்களாலேயே சுயமாக வரையப்பட்டன. ஆனால் இன்று கால நிலை மற்றும் விமானத்தின் தகமைகளை கணினிக்குள் செலுத்தி அதனூடாக சாத்தியமான அனைத்து பாதையூடாகவும் பரீட்சார்த்தமாகப் பறப்பதற்கான திட்டம் தீட்டப்படுகின்றது.

கடந்த வாரம் 'மைக் ஒஸ்கார்' மற்றும் 'மைக் பிறவோ' (MI24) ஆகிய கலங்களைச் சேர்ந்த 4 ஓட்டிகளிடம் இவ் ரெலிப் பிரிண்ட் செய்திகள் கொடுக்கப்பட்டன. இவ்விமானிகள் மாங்குளத்திற்குக் கிழக்காக அமைந்திருந்த காப்பரண்களில் உள்ள புலிகள் மீது புலிகளைத் எதிர்கொண்டு, ஒலுமடுவில் இருந்து தரைப்படையினர் மாங்குளம் நோக்கி செல்வதற்கான பாதையை திறப்பதற்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலிற்கு "ஒப்பரேசன் டிஸ்ற்றொய்"" எனக் குறியீட்டுப் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. பிறவோவும் ஒஸ்காரும் சரியாக 8 மணியளவில் தமது விமானப் பயணத்தை ஆரம்பித்தன. ஆனால், LTTE போராளிகள் இந்த மழை போன்ற ஏவுகணை மற்றும் கனத்த துப்பாக்கிச் சூடுகளை தைரியமாக எதிர்கொள்ளத் தயாராகி விட்டனர். அந்த விமானிகளுக்குத் தெரியாமல் முன் தினம் இரவே விடுதலைப் புலி போராளிகள் இரவோடு இரவாக கனத்த கொங்கிறீட்டுகளை போட்டு தமது நிலைகளைப் பலப்படுத்திவிட்டனர். இலக்குகளை தாக்குவதற்கு முன்னர் அப்பகுதிக்கு மேலால் சில நிமிடங்கள் பறந்த விமானிகள் அதன் மூலம் எந்தவித ஏவுகணைகளும் அப்பிராந்தியத்திற்குள் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர். சில நிமிட வேவுபார்த்தலின் பின்னர் ஏவுகணைகளையும் கனரக ஆயுதங்களையும் விமானிகள் பிரயோகித்தனர். பின்னர் அவர்கள் தளம் திரும்பி தமது தள அதிகாரிகளுக்கு தமது விஜயம் வெற்றிகரமானது என அறிவித்தனர். விமானப்படை விமானிகளின் இத்தாக்குதல் தரைப்படை கொமாண்டோக்களுக்கு அறிவிக்கப்பட்டது. இத்தரைப் படைக் கொமாண்டோக்கள் நகர்வதற்குத் தயாராக இருந்தனர்.

அரசாங்கம் தனது நடவடிக்கையை ஆரம்பித்த நாட்களில் இருந்து, போராளிகள் பெருமளவு அழிக்கப்பட்டுவிட்டதாக ஒரு தவறான கருத்து நிலவியது. ஆனால், அது அவ்வாறானது அல்ல. விடுதலைப் புலி உறுப்பினர்கள் எண்ணிக்கையளவில் குறைவாக இருந்தாலும் கிளிநொச்சி - வவுனியாவை இணைக்கும் A9 நெடுஞ்சாலையில் ஏராளமான பகுதிகளை இன்னமும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

கடந்தவாரம் அரசாங்கம் மற்றுமொரு தோல்வியைச் சந்தித்தது. கனரக பிரிகேட் படைப்பிரிவின் தளபதி கோர்ணல் ஜெகத் ஜெயசூரிய புலிகளினால் இயக்கப்பட்ட கண்ணிவெடியில் சிக்கிக் காயமடைந்தார். இதன்போது இரு படையினர் கொல்லப்பட்டு கோர்ணல் உட்பட மூவர் காயப்படுத்தப்பட்டனர். இப் பிரிகேட் கொமாண்டர், இராணுவ தொடர் ஒன்றிற்கு வழிகாட்டியாக முன்னணி போரரங்குகளிற்கு கரிப்பட்டுமுறிப்பிலிருந்து பயணம் செய்தபோது ஒலுமடுவில் நடாத்தப்பட்ட தாக்குதலில் காயப்பட்டார்.

"வெற்றி நிச்சயம்" நடவடிக்கை இதுவரை 9 மாதங்கள் 28 நாட்கள் இடம்பெற்றுள்ளது. படையினர் அங்குலம் அங்குலமாகப் புளியங்குளம் வரை முன்னேறினர். ஆனால், புளியங்குளம் நகரில் இருந்து சில கிலோ மீற்றர்கள் தூரத்தில் வைத்து பயணம் வழிமாறி கிழக்குப் பகுதியூடாக நகர்ந்தது.

கடந்த 6 மாதகாலமாக புளியங்குளத்தை அரச துருப்புகளினால் விடுவிக்க முடியவில்லை.

**கடந்த 6 மாதகாலமாக புளியங்குளத்தை அரச துருப்புகளினால் விடுவிக்க முடியவில்லை. நகரில் இருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் புலிகள் படையினர் முன்னேறுவதைத் தடுப்பதற்காக தமது நிலைகளைப் பலப்படுத்தியுள்ளனர்.**

நகரில் இருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் புலிகள் படையினர் முன்னேறுவதைத் தடுப்பதற்காக தமது நிலைகளைப் பலப்படுத்தியுள்ளனர். புளிங்குளத்தை தீர்க்கமாகக் கைப்பற்றும் திட்டத்தினை புலிகள் தோற்கடித்ததனால் படையினரின் 53ம், 55ம் பிரிவுகள் பெரியமடு, நயினாமடுவூடாக புளியங்குளத்தைச் சுற்றிவளைக்க முற்பட்டனர். ஆனால், அம்முயற்சி பயனற்றது என நிருபிக்கப்பட்டது. புதூரில் இருந்து கனகராயன் குளத்தைக் கைப்பற்றுவதே படைகளுக்கு மிஞ்சியிருந்த ஒரே தெரிவாகும். படையினர் பல பகுதிகளை கைப்பற்றும் முயற்சியில் தோல்வி கண்டதினால் புளியங்குளத்திலிருந்து A9 நெடுஞ்சாலையின் கிழக்கு மேற்குப் பகுதிகளுக்கு பிரிந்து சென்றனர். மேற்குப் பகுதியினூடாக புதூர் வரை அவர்களால் நகர முடிந்தது. கிழக்குப் பகுதியினூடாக கருப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் மற்றும் கனகராயன்குளத்தின் புறநகர் பகுதிகள் என்பனவற்றில் அவர்களால் நிலைகொள்ள முடிந்தது.

மாங்குளம்

தற்போது யுத்தம் மாங்குளத்தை மையமாக வைத்து இடம்பெறுகின்றது. மாங்குளத்தை அடைவது என்பது படையினருக்கு இலகுவான விடயமல்ல. ஏனெனில், அது அடர்ந்த காடுகளால் சூழப்பட்டது. மாங்குளத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் புலிகள், மாங்குளத்தின் தரையமைவிற்கு நன்கு பரிச்சயமானவர்கள். கடந்த சில வாரங்களாக காடுகளினூடாக உள்நுழைந்து ஒலுமடு மற்றும் கரிப்பட்டுமுறிப்பு பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் படையினர் மீது தாக்குதலை மேற்கொள்கின்றார்கள். படையினரால் ஒலுமடுவில் முழுமையாக தமது நிலைகளைப் பலப்படுத்த முடியவில்லை. ஏனெனில், புலிகள் தமது எறிகணைகள் அங்கு வீசுகின்றார்கள் கனரகப் பீரங்கிகளை அப் பகுதிகளை நோக்கிக் குறிவைக்கின்றார்கள்.

மாங்குளம் ஒலுமடுவிலிருந்து 4 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. கடந்த வருடம் படையினர் ஒலுமடு ஊடாக மாங்குளத்திற்கு தமது கனரக பீரங்கிகளையும் தளவாடங்களையும் நகர்த்துவார்கள் என எதிர்பார்த்த புலிகள், அதற்கு முன்னைய நடவடிக்கையாக கனகராயன்குளம் ஆற்றுக்கு மேலான ஒரு பிரதான பாலத்தை தகர்த்தனர்.

மாங்குளத்தைக் கைப்பற்றுவதான நடைமுறைக் கடினங்களை அரசாங்கம் உணர வேண்டும். போராளிகளுடன் போரிடும் படையினர் அப்பகுதியின் தரையமைவை நன்கு அறிந்திருக்கவில்லை.

பிற மாகாணங்களில் வசிக்கும் பொது மக்களுக்கு இப்போர் தொடர்பான தெளிவான படத்தை அரசாங்கம் இன்னமும் காட்டவில்லை. கடந்த 3 வருடங்களாக எந்த பத்திரிகையாளரினாலும் போர்ப்பிரதேசங்களுக்குச் செல்ல முடியவில்லை. இரு வாரங்களுக்கு முன்னர் அரசாங்கம் வெற்றிகரமான தகவல் தொடர்பு பிரச்சாரத்தை நடாத்தியது. ஆனால், எந்தப் பத்திரிகையாளர்களும் உண்மையான போர் முனைக்கு அழைத்துச் செல்லப்படவில்லை.

அரசாங்கம் கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்குமான ஒரு பிரதான விநியோகப் பாதையை திறப்பதற்காக இந்த யுத்தத்தை ஆரம்பித்தது. படையினரால் இந்நெடுஞ்சாலையை சிலவேளை கைப்பற்ற முடியும். ஆனால், விடுதலைப் புலிகள் காடுகளுக்குள் சென்று கனத்த தாக்குதலை இராணுவத்தினர் மீது நடாத்தமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு?

**இரு வாரங்களுக்கு முன்னர் அரசாங்கம் வெற்றிகரமான தகவல் தொடர்பு பிரச்சாரத்தை நடாத்தியது. ஆனால் எந்தப் பத்திரிகையாளர்களும் உண்மையான போர் முனைக்கு அழைத்துச் செல்லப்படவில்லை.**

அரச படைகளுக்கும் LTTE துருப்பினருக்கும் இடையிலான சண்டை ஆரம்பித்த நாட்களில் இருந்தே வன்னி, போராளிகளின் பலமான பிரதேசமாகக் காணப்படுகின்றது. புலிகளை தம்மால் முழுமையாக அழிக்க முடியும் எனப் பெருமைப்பட்டுக்கொண்டு சிறீலங்காவுக்கு வந்த இந்திய ஜவான்கள் புலிகளினால் தோற்கடிக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் A9 நெடுஞ்சாலையின் கிழக்குப் பகுதிகளில் பலமானவர்கள். ஆனால், தற்போது கிடைக்கும் செய்திகளின்படி மேற்குப் பகுதிகளிலும் கூட விடுதலைப் புலிகள் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றார்கள். அரச படைகளினால் நெடுஞ்சாலையின் கட்டுப்பாட்டை கைப்பற்ற முடிந்தாலும்கூட படையினர் இரு பக்கங்களினூடாகவும் தாக்குப்படுவார்கள் என்பது நிச்சயமானது.

தரையில் இவ்வாறான கயிறிழுக்கும் போட்டி நடந்துகொண்டிருக்கும்போது கடற்படையினர் இன்னமும் பிரச்சினையான கடலூடாகவே பயணம் செய்கின்றனர். படையினரைக் காவிச் சென்ற 2 கடற்படைக் கப்பல்கள் பருத்தித்துறைக்கு 2 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் மூழ்கடிக்கப்பட்டன. கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன. ஆனால், இதற்கான தவறை யாரிழைத்தார்கள் என்ற விசாரணை மட்டும் இழுபட்டுச் செல்கின்றது.

கடற்படைப் படகுகள் 2, 37mm துப்பாக்கிகளையும், 4, 22mm துப்பாக்கிகளும், RPGயும் பொருத்தப்பட்டனவாகும். கடற்புலிகள் விரைவு வேகப் படகுகள், 2, 20mm துப்பாக்கிகளும், 2, 14.5mm துப்பாக்கிகளும், 5 இயந்திரத் துப்பாக்கிகளும் பொருத்தப்பட்டனவாகும். தாக்குதல் இடம்பெற்ற அன்று கடற்புலிப் படகுகளில் 14.5mm துப்பாக்கியே பொருத்தப்பட்டிருந்தது. இதனை கடற்படைக் கலங்களால் அழிக்கலாம். 250HP மோட்டார்கள் பூட்டப்பட்ட விரைவுப் படகுகளே கடற்புலிகளின் ஒரேயொரு சாதக அம்சமாகும்.

விசாரணையாளர்கள் எவ்வாறு கடற்புலிகளினால் கடற்படைப் படகுகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் என கருதப்படும் பிரதேசங்களில் இருந்து தாக்க முடிகின்றது என தீர்மானிக்க முயல்கின்றனர்.

யாழ்ப்பாணத்தை அரச படைகள் கைப்பற்றிய பின்னர் படையினரும் தளபாடங்களும் கடலினூடாக பாதுகாப்பாக போக்குவரத்துச் செய்யலாம் என அறியத்தரப்பட்டிருந்தது. ஆனால், கடந்த வாரத் தாக்குதல்கள் இது பிழையானது என்பதை நிருபித்தது. இராணுவ தரப்பினருக்கு ஒரு சங்கடமான நிலைமையாகும்.


## தமிழில் சாரதி பயிற்சி

### பேராசிரியர் சக்திப்புயல்

வாகனசாரதிப் பத்திரம் பெற முடியாமல் வாடுகிறீர்களா? பிரெஞ்சு மொழி அதற்கொரு தடையாக இருக்கிறதா? பாடம் படிக்க நேரம் இல்லையா? இனி இந்தக் கவலையே வேண்டாம்.

மிக எளிதாகத் தமிழிலேயே கோட் கற்பித்து, தேர்வில் உங்கள் அருகிலேயே இருந்து மொழிபெயர்ப்பு உதவி செய்து சாரதிப் பத்திரம் பெறுவதற்கு உத்தரவாதம் அளிக்கிறார் பேராசிரியர் சக்திப்புயல் அவர்கள்.

**கடந்த ஆறு மாதங்களாக இவருடைய மாணவர்கள் தொடர்ந்தாற்போல் 100 சதம் பாஸ் செய்து வருகிறார்கள்.**

**நீங்களும் பாஸ் செய்வது உறுதி. இன்றே அணுகுங்கள்.**

**6, Rue Demarquay, 75010 Paris.**

**Métro: Gare du Nord**

தொலைபேசி: 01 34 24 12 82 / 01 42 05 48 11 / 06 60 97 57 33

Pub

## தமிழீழச் செய்திகள்

# யாழ். குடாவில் ஏற்புவலி மரண அபாயம்

யாழ். குடாநாட்டிற்குத் தேவையான ஏற்பு வலி மருந்துகள் சிறீலங்கா சுகாதார அமைச்சினால் இதுவரை அனுப்பிவைக்கப் படவில்லை. 1998 இன் ஆண்டின் முற்பகுதி மருந்து தேவைகளில் மிகவும் முக்கியமான இந்த ஏற்புவலி எதிர்ப்பு மருந்து வகைகள் இல்லாமையினால் யாழ். குடாவில் ஏற்புவலி மரண அபாயம் எழுந்துள்ளது.

ஏற்கனவே குடாநாட்டில் மலேரியா, செப்ரிசிமியா போன்ற நோய்கள் பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்திவரும் இந்த வேளையில், ஏற்பு வலிக்கான மருந்துகளும் சிறீலங்கா சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்படாமை யாழ்.போதனாசாலை வைத்திய அதிகாரிகளுக்கு பெரும் அதிர்ச்சியினை அளித்துள்ளது.

இதேவேளை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக யாழ். மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சிறிதளவு மருந்து வகைகளில் முக்கியமான மருந்து வகைகள் எவையும் இருக்கவில்லை என்பது தெரிந்ததே.

# காந்தரூபன் அறிவுச்சோலை தடகள விளையாட்டுப் போட்டிகள்

காந்தரூபன் அறிவுச்சோலை இல்லத் தளகட விளையாட்டுப் போட்டிகள் கடந்த 28-ம் திகதியன்று அறிவுச்சோலை விளையாட்டு அரங்கில் நடைபெற்றன. சிறப்பு விருந்தினர்களாக காந்தரூபன் அறிவுச்சோலை அறங்காவலர் குழுத் தலைவர் பிரான்சிஸ் ஜோசப் அடிகளார், செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி ஆகியோரும், பிரதம விருந்தினராக தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசனும் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கினை செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி, உதவிக் கல்விப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். மேஜர் காந்தரூபன் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஈகைச்சுடரை பா. நடேசன் ஏற்றி வைத்தார். பாடசாலைக் கொடியை அதிபர் ப. கலைச்செல்வனும், தேசியக் கொடியை பா. நடேசனும் ஏற்றி வைத்தார்கள். ஒலிம்பிக் தீபம் செல்வன் மோகன காந்தரூபனால் ஏற்றப்பட்டது. 'உறுதி' உரையையும் அவரே நிகழ்த்தினார்.

அறங்காவலர் குழுத் தலைவர் வி. கதிரவேலு நன்றியுரையை நிகழ்த்தினார். போட்டிகளில் 248 புள்ளிகளைப் பெற்று பண்டாரவன்னியனின் இல்லம் முதலாம் இடத்தையும், 193 புள்ளிகளைப் பெற்று எல்லாளன் இல்லம் இரண்டாம் இடத்தையும், 162 புள்ளிகளைப் பெற்று சங்கிலியன் இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றன.

நடைபெற்ற இப்போட்டிகளுக்கு பெருமளவான பொது மக்கள் வருகைதந்து மாணவர்களை உற்சாகப்படுத்தி சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# செங்கலடியில் 3 ரெலோ உறுப்பினர்கள் பலி

மட்டக்களப்பு செங்கலடியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலொன்றில் ரெலோ கும்பலைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த நான்காம் திகதி காலை 10 மணியளவில் செங்கலடி 10-ம் கட்டைப் பகுதிக்கு வந்த ரெலோ குழுவினர் அங்குள்ள மக்களிடம் பலவந்தமாக நிதிசேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இந்தப் பலவந்த நிதி சேகரிப்பு பற்றிய செய்தி அப் பகுதியில் நிலை கொண்டிருந்த விடுதலைப் புலிகளுக்கு தெரிவிக்கப்படவே, அப் பகுதிக்கு விரைந்த புலிகளின் படையணிகள் ரெலோக்கும்பலைச் சுற்றிவளைத்து தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன்போது மூன்று ரெலோவினர் கொல்லப்பட, ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர். அவர்களிடம் இருந்த ஆயுதங்களும் புலிகளினால் கைப்பற்றப் பட்டுள்ளன. புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காட்டு மிருகங்களின் தர்பார்

வன்னிக் காட்டுப் பகுதிகளில் சிறீலங்காப் படையினர் மேற்கொள்ளும் குண்டுவீச்சுக்களின் காரணமாக அங்கு வசிக்கும் மிருகங்கள் காட்டினை விட்டு மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்து பெரும் தொல்லைகளை மேற்கொள்கின்றன. குறிப்பாகப் பயிர்ச் செய்கை நிலப் பரப்புகளையும் பயன்தரும் மரங்களையும் இவை பெரும் அழிவுக்குட்படுத்துவதால் இப்பகுதிகளில் வாழும் மக்கள் துன்பங்களையும் பெரும் பொருளாதார இழப்பையும் அடைந்து வருகின்றனர்.

# ஈ.பி.டி.பி உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் விடுவித்தனர்

ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மூவர் கடந்த நான்காம் திகதி வன்னிப்பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்டு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஈ.பிடி.பி. குழுவினரால் பலவந்தமாக அவ் அமைப்பில் இணைக்கப்பட்ட இவ்விளைஞர்கள் மூவரும் முன்னதாக ஒரு சம்பவத்தில் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டிருந்தனர். ஆயினும் தேசியத் தலைவரின் மனிதாபிமான ரீதியான பணிப்புரையின் பேரில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டு செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக அவரவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தடுப்புக் காவலில் இருந்த வேளையில் இவ் ஈபிடிபி. உறுப்பினர்கள் கடந்த காலங்களில் தாங்கள்விட்ட தவறுகளுக்கு மனம்வருந்தி விடுதலைப் புலிகளிடம் மன்னிப்பு கோரியதாகத் தெரியவருகிறது.

# மன்னார் மீன் பெட்டிகள் மதவாச்சியில் மாயம்

மன்னார்ப் பகுதி மீனவர்களால் கொழும்பிற்குப் பார வண்டிகளில் (லொறிகள்) அனுப்பி வைக்கப்படும் மீன் பெட்டிகள் பலவும் மதவாச்சிப் பகுதியில் வைத்து மாயமாகப் போய்விடுவதாக மன்னார் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மீன் பெட்டிகள் காணாமல் போகும் சம்பவங்களுடன் சிறீலங்கா பொலிசார் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

மன்னார்ப் பகுதியிலிருந்து மீன்களுடன் இப் பாரவண்டிகள் மதவாச்சிப் பகுதியில் இடைமறிக்கப்பட்டு பாதுகாப்புப் படையினரால் சோதனை செய்யப்படுவது வழக்கம். பார வண்டிகளிலிருந்து இறக்கப்படும் மீன் பெட்டிகள் அனைத்தும் கடுமையாக சோதிக்கப்பட்ட பின்னர் மீளவும் வண்டிகளில் ஏற்றப்படும் வேளையிலேயே சில பெட்டிகள் காணாமல் போய்விடுகின்றன. மீன் பெட்டிகள் சோதனை செய்யப்படும் இடத்தில் உலாவும் காடையர் கூட்டம் ஒன்றே இத் திருட்டுகளிற்கு காரணம் என வர்த்தகர்கள் கூறுகின்றார்கள்.

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரி கணினிகள் பொலநறுவைக்கு

யாழ். பல்தொழில்நுட்பக் கல்லூரிக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட பதினைந்து கணினிகள் பொலநறுவையில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள தொழில் நுட்பக்கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களின் பலவருடகால மான வேண்டுகோளைத் தொடர்ந்து இவர்களுக்கெனப் பதினைந்து கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஆனால் பொலநறுவையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தொழில்நுட்பக் கல்லூரிக்காக இவையாவும் சிறீலங்கா உயர்கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே யாழ் தொழில் நுட்பக்கல்லூரி, தளபாட உபகரணப் பற்றாக்குறைகளுடன் இயங்கி வருகின்ற போதிலும் 10 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பொலநறுவைத் தொழில் நுட்பக் கல்லூரிக்கு மேற்படி கணினிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை, யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

# முரசுமோட்டை தேவாலயம் குண்டு வீச்சினால் பெரும் சேதம்

கடந்த மூன்றாம் திகதி முரசுமோட்டைப் பகுதியில் சிறீலங்காப்படையினர் நடத்திய வெறித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்களினால் புனித சகாயமாதா தேவாலயம் பெரும் சேதம் அடைந்துள்ளது.

இக்குண்டுவீச்சுத் தாக்குதலைப் 'புலிகளின் குரல்' வானொலியும் உறுதி செய்துள்ளது.

இப்பகுதிக்கு, வந்த கிபீர் ஜெட் விமானங்களே இத் தாக்குதலை நடாத்தியுள்ளன. விமானங்களில் இருந்து வீசப்பட்ட 250 கிலோ எடையுள்ள குண்டுகள் நேரடியாகவே தேவாலயம் மீது வீழ்ந்து வெடித்து இப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், தேவாலயம் முற்றாக இடிந்து விழும் அபாய நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இத் தேவாலயத்திற்குள் செல்வது அபாயகரமானதென்று விடுதலைப் புலிகள் அப்பகுதி மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

# கிளாலியில் எறிகணை வீச்சு

கிளாலிப் பகுதியில் சிறீலங்கா கடற்படை இறங்குதுறை மீது, அண்மையில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து பீதியடைந்துள்ள படைத்தரப்பு கிளாலிப் பகுதியை நோக்கி அடிக்கடி எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டு வருகின்றது.

இதே நேரம் புலோப்பளை கடலில் மீன்பிடிக்கச் செல்வதற்கு மீனவர்களுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. யாழ். குடா இராணுவத் தலைமையகமே இவ்வுத்தரவினைப் பிறப்பித்துள்ளது. இத்தடை உத்தரவு காரணமாக ஏழை மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இலண்டனில்
நகைத் தெரிவுகளுக்கு
ராஜஸ்ரீ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181-903 4887

விற்பனைக்கு
முடிதிருத்தும் இடம்
Nena Salon
சூரிச் கிரைஸ் 5—ல் அமைந்துள்ளது.
தொடர்புகளுக்கு: 01/2715872

# பா.ஜ.க.வுக்கு தமிழகம் வழங்கிய அங்கீகாரம்

தமிழக மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணி 30 இடங்களில் வெற்றி பெற்றாலும் உண்மையான வெற்றி என்பது 4 இடங்களை வெற்றி கொண்டுள்ள பா.ஜ.கவுக்குத்தான்.

இத் தேர்தலில் அக் கூட்டணியில் இடம் பெற்றிருக்கும் மற்ற கட்சிகள் அனைத்தும் மாநிலக் கட்சிகள். திராவிடக் கட்சிகள் செல்வாக்குப் பெற்றிருக்கும் தமிழ் நாட்டில் திராவிடக்கட்சிகளின் உதவியுடனேயே 3 இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றிருப்பது அக் கட்சிக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி. 12-வது மக்களவைத் தேர்தலில் தென் சென்னை, நாகர்கோயில், கோவை, திருச்சி, நீலகிரி ஆகியவற்றில் போட்டியிட்ட பா.ஜ.க 3 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. தமிழ் நாட்டில் கடந்த தேர்தலில் நாகர்கோவிலைத் தவிர இதர தொகுதிகளில் 50 ஆயிரம் வாக்குகள் கூட பெறமுடியாத நிலையில் இருந்த பா.ஜ.க. தற்போது தமிழ்நாட்டில் கால் பதித்துவிட்டதை இவ் வெற்றி காட்டுகின்றது.

1984-ம் ஆண்டு தேர்தலில் 1 இடமும், 1989-ல் 3 இடங்களும், 1991-ல் 15 இடங்களிலும், 1996-ல் 37 இடங்களிலும் வேட்பாளர்களை தனித்து நிறுத்திய பா.ஜ.க.வால் வெற்றி பெறமுடியாத நிலை இருந்தது. திராவிடக் கட்சிகளுக்கு எதிரான கட்சி பா.ஜ.க. அக் கட்சியுடன் உடன்பாடு வைத்துக் கொள்ளக் கூடாது என்ற கருத்து வலிமையாக இருந்தது. மக்களவைத் தேர்தல்களில் தொடர்ந்து திராவிடக் கட்சிகளுடன் உறவு வைத்து வெற்றி பெற்ற காங்கிரசின் இடத்தைத் தமிழகத்தில் பிடித்துக்கொள்ளும் வகையில் தேசிய அளவில் பா.ஜ.க வளர்ந்திருப்பது தற்போதைய வெற்றியில் தெரிகின்றது.

1996-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் நாகர்கோவில் தொகுதியில் பா.ஜ.க வேட்பாளர் பொன். ராதாகிருஷ்ணன் பெற்ற வாக்குகள்- 1,69,885. தற்போது அவர் பெற்ற வாக்குகள் - 2,67,426. த.மா.கா வேட்பாளர் டென்னிஸைவிட 29,185 வாக்குகள் குறைவாக பெற்று அவர் தோல்வியடைந்துள்ளார். நாகர்கோவில் தொகுதியில் மார்க்சிஸ்ட் கட்சி தனது வேட்பாளரைத் திரும்பப் பெற்றதால் த.மா.காவின் வெற்றி சாத்தியமானது. இடதுசாரி அணிகள் வலுவாக இருக்கும் மேற்கு வங்கத்திலும், திராவிடக் கட்சிகள் வலுவாக இருக்கும் தமிழ்நாட்டிலும் பா.ஜ.க. இத் தேர்தலில் தான் காலூன்றியிருக்கின்றது. மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜியுடனும், தமிழ் நாட்டில் ஜெயலலிதாவுடனும் உருவாக்கிக் கொண்ட கூட்டணி தான் பா.ஜ.கவின் வெற்றிக்கு காரணம் என அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# தமிழகத்தில் 21 புதுமுகங்கள்

தமிழகத்தில் இருந்து முதல் முறையாக 21 புதுமுகங்கள் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் வடசென்னையில் வெற்றி பெற்ற தி.மு.கவைச் சேர்ந்த சி.கே.குப்புசாமியைத் தவிர அனைவரும் அ.தி.மு.க கூட்டணியைச் சேர்ந்தவர்கள்.

அவர்களின் விவரம்: அ.தி.மு.க - கே.வேணுகோபால் (ஸ்ரீபெரும்புதூர்), பி.ராஜரத்தினம் (பெரம்பலூர்), ராஜா பரமசிவம் (புதுக்கோட்டை), எஸ். முருகேசன் (தென்காசி), நடிகர் ராமராஜன் (திருச்செந்தூர்), வி.சத்தியமூர்த்தி (ராமநாதபுரம்), சி.கோபால் (அரக்கோணம்), டாக்டர் வி.சரோஜா (ராசிபுரம்), கே.பழனிச்சாமி (திருச்செங்கோடு), வி.கே.சின்னசாமி (கோபிசெட்டிபாளையம்), எம்.தியாகராஜன் (பொள்ளாச்சி), ம.தி.மு.க - வைகோ (சிவகாசி. இவர் ஏற்கனவே மாநிலங்களவை உறுப்பினராக இருந்துள்ளார்) எ.கணேசமூர்த்தி (பழனி), செஞ்சி ராமச்சந்திரன் (திண்டிவனம்), பா.ம.க - தலித் எழில்மலை (சிதம்பரம்), கே.பாரிமோகன் (தர்மபுரி), என்.டி.சண்முகம் (வேலூர்), எம்.துரை (வந்தவாசி), பா.ஜ.க - சி.பி.ராதாகிருஷ்ணன் (கோவை), ஆசிரியர் மாதன் (நீலகிரி) ஆகியோர் இடம் பெற்று இருக்கின்றனர்.

## இந்தியச் செய்திகள்

# காங்கிரசிருந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைய வேண்டும்

### - தங்கபாலு -

காங்கிரஸிருந்து பிரிந்து சென்ற அனைவரும் மீண்டும் காங்கிரசில் இணைய வேண்டும். இது தொடர்பாக த.மா.கா தலைவர் ஜி.கே.மூப்பனாரைச் சந்தித்து பேசுவேன். பா.ஜ.க.வுக்குத் துணைபோகும் வாழப்பாடி ராமமூர்த்தி போன்றவர்களை சந்திக்க மாட்டேன் என்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை அவர் நிருபர்களிடம் பேசுகையில், 'எதிர்காலத்தில் தமிழகத்தில் காங்கிரசை வலிமை மிக்க இயக்கமாக மாற்றுவேன். இதற்கான திட்டங்களை எங்களது செயற்குழு வகுக்கின்றது. தமிழகத்தில் 6- மாதங்களுக்கு முன்பு காங்கிரசே இல்லை என்றார்கள்; அந்நிலையை இத் தேர்தலில் மாற்றிக் காட்டியுள்ளோம். பண வசதி இல்லாத நிராயுதபாணியான நிலையிலும், தேர்தல் பணிகளைச் செம்மையாக ஆற்றினோம். காங்கிரசை 3- வது அணியாக உருவாக்கியுள்ளோம். காங்கிரஸ் தனித் தன்மையுடன் செயற்பட்டு, தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் நிலை எதிர்காலத்தில் ஏற்படும். 30 ஆண்டுகளின் பின்னர் தமிழகத்தில் முதல் முறையாக மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டதை மக்கள் அங்கீகரித்து மக்கள் வழங்கிய தீர்ப்பை ஏற்றோம்.

அ.தி.மு.க கடந்த தேர்தலை விடக் கூடுதலாக 21 சதவீத வாக்குகளை வாங்கியுள்ளது. பா.ஜ.கவுக்காக மக்கள் அளித்த வாக்குகள் தான் அ.தி.மு.கவுக்கு கிடைத்துள்ளது. ஆளும் கட்சிக்கு எதிரான வாக்குகள் அ.தி.மு.க அணிக்கு கிடைத்திருக்காது. எனவே, தமிழகத்தில் உள்ள காங்கிரஸ் இயக்கங்களைச் சேர்ந்த அனைவரும் மீண்டும் காங்கிரசில் இணைந்து, கட்சியை வலுப்படுத்த வேண்டும். மத்தியில் காங்கிரசும், ஐக்கிய முன்னணியும் இணைந்து நிலையான ஆட்சியை உருவாக்க வேண்டும் என்று கூறினார்.



# கணிப்பு தவறாகிவிட்டது

*சென்னையில் முதல்வர் கருணாநிதி தேர்தலின் முடிவு வெளியான பின்னர் கடந்த புதன்கிழமை நிருபர்களுக்கு அளித்த பேட்டி பின்வருமாறு.*

**கேள்வி:- உங்கள் அணியின் தோல்விக்கு என்ன காரணம்?**

**பதில்:-** வாக்குகள் குறைந்து விட்டது தான்.

**கேள்வி:- விலைவாசி, வெங்காயம், பேருந்துக் கட்டண உயர்வு தான் காரணம் என்கிறார்களே?**

பதில்:- வெங்காய விலை, மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு ஏற்றுமதியை நிறுத்தச் சொல்லி தினமும் 30 தொன் பெற்று கூட்டுறவு சங்கம் மூலம் 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப் பட்டது. அதேபோலவே பேருந்துக் கட்டணம் ஆந்திரா, கர்நாடகம், கேரளா, மேற்கு வங்கத்தில் கிலோ மீட்டருக்கு 22 காசு, ராஜஸ்தானில் 24 காசு, உத்திரபிரதேசத்தில் 27.80 காசு, மராட்டியத்தில் 20.83 காசு, உத்தரபிரதேசத்தில் 27.80 காசு.

தமிழ்நாட்டில் 20 காசு தான். இந்த அளவு உயர்த்தியும் கூட போக்கு வரத்துக் கழகங்களுக்கு 250 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. 5 ஆண்டுகளில் ஆயிரம் புதிய பேருந்துகள் விற்கப்பட்டு விட்டன.



**கேள்வி:- இப்படியிருந்தும் உங்கள் கூட்டணிக்கு வாக்குகள் விழாதது ஏன்?**

பதில்:- நிலையான ஆட்சி என்ற விதத்தில் மக்களுக்கு ஏற்பட்ட மயக்கமும், குண்டு வெடிப்பால் ஏற்பட்ட அதிர்ச்சியும் தான் காரணம். இதன் காரணமாக கோவையில் பெரும்பான்மையான வாக்குகள் வித்தியாசம் ஏற்பட்டு இருக்கின்றது.

**கேள்வி:- புதிய தமிழகம், பா.ம.க. போன்ற கட்சிகளை தி.மு.க அணியில் சேர்க்காதது தோல்விக்கு காரணமா?**

பதில்:- தற்போது அது பற்றி விவாதிக்க நேரமில்லை.

**கேள்வி:- வாக்குகள் வித்தியாசம் குறைந்து இருக்கிறதே?**

பதில்:- பதிவான வாக்கு சதவீதம்குறைவு எனவே வித்தியாசம் குறைவு. மத்தியில் நிலையான ஆட்சி வேண்டும் என்று மயங்கி வாக்களித்தனர். இப்போது நிலையான ஆட்சி அமைக்க முடியவில்லை என்று புரிந்திருக்கும். சட்டமன்ற தேர்தலில் மக்கள் தங்கள் ஆதரவை எங்களுக்கு காட்டியிருக்கின்றார்கள்.

அ.திமு.க.க. - ம.தி.மு.க. வாக்குகளை கூட்டினால் அரும்புக்கோட்டையில் தி.மு.கவுக்கு வெற்றி வாய்ப்பு இல்லை என்று பேசப்பட்டது. ஆனால் நாங்கள் வெற்றி பெற்று இருக்கின்றோம்.

**கேள்வி:- காங்கிரஸ் ஆட்சி அமைக்க உங்களிடம் ஆதரவு கேட்டார்களா?**

பதில்:- யாரும் கேட்கவில்லை. ஐக்கிய முன்னணி கூட்டம் நடைபெறும் பொழுது அதில் யாருக்கு ஆதரவு என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

**கேள்வி:- ஜெயின் ஆணைக்குழுவை காரணம் காட்டி தி.மு.க.வை விலகச் சொன்னது காங்கிரஸ்தானே?**

பதில்:- பூந்தமல்லி நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு தி.மு.க மீது குற்றம் இல்லை என்று அவர்களே கூறி இருக்கிறார்கள். யாருக்கு ஆதரவு தருவது என்பதை ஐக்கிய முன்னணி கூடி முடிவு செய்யும். நானாக எதுவும் கூறமுடியாது. மத்தியில் நிலையான நேர்மையான ஆட்சி அமைய வேண்டும்.

**கேள்வி:- மத்தியில் காங்கிரஸ் மந்திரிசபை அமைத்தால் தி.மு.க. பங்கேற்குமா?**

பதில்:- திருமணம் ஆகட்டும்.

**கேள்வி:- காங்கிரஸ் வந்தால் உங்கள் முடிவு என்ன?**

பதில்:- கட்சிக்கு எவ்வளவு பாதகம் நாட்டுக்கு எவ்வளவு பாதகம் என்பதை ஒப்பிட்டு பார்ப்போம்.

**கேள்வி:- குண்டு வெடிப்பு தொடர்பாக உளவுத் துறையில் மாற்றம் செய்யப்படுமா?**

பதில்:- எங்கெங்கு குறை இருக்கிறதோ அது நிவர்த்திக்கப்படும்.

**கேள்வி:- தேர்தல் முடிவு, ஜெயலலிதா ஊழல் பற்றிய பிரசாரத்துக்கு எதிர்மறை விளைவா?**

பதில்:- ஊழலை முன்னிறுத்தி தாங்கள் பிரச்சாரம் செய்யவில்லை. ஜெயலலிதா ஊழலை பேசி சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டும். என்று சொன்ன கோபால்சாமி; தண்டிக்க வேண்டும் என்ற ராமதாஸ் போன்றவர்கள் அங்கு இருக்கிறார்கள் என்று கூறினோம். ஜெயலலிதா செய்த ஊழலுக்கு வழக்கு நடந்து வருகிறது.

**கேள்வி:- அவர்கள் வாஜ்பாய் பிரதமர் என்கிறார்கள். நீங்கள் பிரதமர் பெயரை கூறாதது காரணமா?**

பதில்:- அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

**கேள்வி:- ஜெயலலிதா செய்த ஊழலை மக்கள் பெரிதாக எடுக்கவில்லையா?**

பதில்:- பெரிதாக எடுக்காவிட்டால் இவ்வளவு வாக்குகள் எங்களுக்கு போட்டு இருப்பார்களா?

**கேள்வி:- சந்திரபாபுநாயுடு பாரதீய ஜனதா பக்கம் போவாரா?**

பதில்:- தெரியாது.

**கேள்வி:- ஐ.மு.கூட்டத்துக்கு நீங்கள் போவீர்களா?**

பதில்:- போவேன்.

**கேள்வி:- பாரதீய ஜனதாவுக்கு ஐக்கிய முன்னணி ஆதரவு தந்தால் உங்கள் நிலை என்ன?**

பதில்:- அந்த ஆச்சரியமான முடிவை ஐக்கிய முன்னணி எடுத்தால் நாங்களும் பொதுக் குழுவைக் கூட்டி முடிவு செய்வோம்.

**கேள்வி:- காங்கிரஸ் பக்கம் அ.தி.மு.க சாய்ந்தால்...?**

பதில்:- அது பற்றி எதுவும் சொல்ல முடியாது.

**கேள்வி:- மத்தியில் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தால் உங்கள் ஆட்சிக்கு ஆபத்து வருமா?**

பதில்:- நான் ஆபத்துக்கு பயப்பிடுவது இல்லை.

**கேள்வி:- இவ்வளவு சாதனை செய்தும் எதிர்ப்பு வர காரணம் என்ன?**

பதில்:- குன்னூர், அரும்புக்கோட்டை முடிவு இதற்கு பதில் சொல்லும். வெண்ணை திரண்டு வரும் நேரத்தில் தாளி உடைந்தது போலகுண்டு வெடிப்பு காரணம்.

**கேள்வி:- மத்தியில் யாருடைய ஆட்சி அமையும்?**

பதில்:- பொறுத்திருந்து பாருங்கள்.

**கேள்வி:- ஜனாதிபதி என்ன முடிவு எடுப்பார்?**

பதில்:- நல்ல முடிவு எடுப்பார் என்று நம்புகின்றேன்.

**கேள்வி:- கோவை குண்டு வெடிப்பு தொடர்பாக தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?**

பதில்:- நடவடிக்கை எடுத்து தீவிர விசாரணை நடைபெற்று வருகின்றது. முக்கிய குற்றவாளிகள் 15 பேருக்கு மேல் பிடிபட்டு இருக்கிறார்கள்.

**கேள்வி:- சி.பி.ஐ. விசாரணை கேட்டு ஜெயலலிதா வழக்கு தொடர்ந்து இருக்கிறாரே?**

பதில்:- அதற்கு அரசு தரப்பில் நீதிமன்றத்துக்கு பதில் அனுப்பட்டும். நான் சி.பி.ஐ. விசாரணை அமைக்க முடியாது என்று கூறவில்லை. மேலவளவு சம்பவத்திலும், மதுரை லீலாவதி கொலையிலும் சி.பி.ஐ. விசாரணை கேட்டோம். இயலாது என்று கூறிவிட்டார்கள். அதனால் தான் அப்படி கூறினோம்.

**கேள்வி:- ஜெயலலிதா வழக்கு விசாரணை தீவிரமாகுமா?**

பதில்:- சட்டப்படி நடைபெறும்.

## மத்திய அரசில் பங்கேற்க அ.தி.மு.கவிற்கு அழைப்பு

பா.ஜ.க. தலைமையிலான அரசில் பங்கேற்கும்படி அ.தி.மு.கவை எல்.கே.அத்வானியும், வாஜ்பாயும் வற்புறுத்தியுள்ளனர்.

இது தொடர்பான முயற்சி இரண்டாவது நாளாக நடைபெற்றது. ஜெயலலிதா இம் மாதம் டெல்லி சென்று பா.ஜ.க. தலைவர்களை சந்தித்து இது தொடர்பாக ஆலோசனை நடாத்துவார் என அ.தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தமிழக கட்சிகளின் நிலவரம்

| கட்சி | போ.இ | வெ.இ. | மொத்த வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **அ.இ.அ.தி.மு.க** | **23** | **18** | **67,31,472** | **25.91** |
| பா.ஜ.க | 5 | 3 | 17,57,645 | 6.76 |
| ஜனதா கட்சி | 1 | 1 | 2,66,202 | 1.02 |
| ம.தி.மு.க | 5 | 3 | 16,02,475 | 6.17 |
| பா.ம.க. | 5 | 4 | 15,48,895 | 5.96 |
| த.ரா.காங் | 1 | 1 | 3,65,557 | 1.41 |
| **மொத்தம்** | **40** | **30** | **1,22,72,246** | **47.23** |
| **தி.மு.க** | **18** | **6** | **53,07,919** | **20.43** |
| வ.கம்யூ. | 2 | 1 | 6,28,360 | 2.42 |
| த.மா.கா | 20 | 3 | 51,68,988 | 19.89 |
| **மொத்தம்** | **40** | **10** | **1,11,05,267** | **42.74** |
| **காங்கிரஸ்** | **34** | **0** | **13,32,675** | **5.13** |
| எம்ஜி.அ.தி.மு.க. | 4 | 0 | 2,83,943 | 1.09 |
| யு.சி.பி.ஐ. | 2 | 0 | 27,525 | 0.11 |
| **மொத்தம்** | **40** | **0** | **16,44,143** | **6.33** |

## இந்திய தேர்தல் முடிவு

### மாநில வாரியான கட்சிகளின் நிலவரம்

**ஆந்திரா**
மொத்த இடங்கள் 42. காங் 22, தெலுங்குதேசம் 12, பா.ஜனதா 4, வ.கம்யூ 2, ஜனதாதளம் 1, சுயேச்சை 1.

**கேரளா**
மொத்த இடங்கள் 20. காங்கிரஸ் கூட்டணி 11, கம்யூ கூட்டணி 9.

**மத்தியபிரதேசம்**
மொத்த இடங்கள் 40. பா.ஜனதா 30, காங்கிரஸ் 10.

**மிஜோரம்**
மொத்த இடங்கள் 1. காங்கிரஸ் 1.

**சிக்கிம்**
மொத்த இடங்கள் 1. எஸ்.டி.எஃப் 1.

**மகாராஷ்டிரா**
மொத்த இடங்கள் 48. காங்கிரஸ் 33, பா.ஜனதா 4, சிவசேனா 6, ஆர்.பி.ஐ 4, மற்றவை 1.

**டெல்லி**
மொத்த இடங்கள் 7. பா.ஜனதா 6, காங்கிரஸ் 1.

**கோவா**
மொத்த இடங்கள் 2. காங்கிரஸ் 2.

**ஒரிசா**
மொத்த இடங்கள் 21. பி.ஜே.டி 9, பா.ஜனதா 7, காங்கிரஸ் 5.

**மேற்கு வங்கம்**
மொத்த இடங்கள் 42. இ.கம்யூ 24, ஆர்.எஸ்.பி 4, வ.கம்யூ 3, பா.பிளாக 2, திரினாமுள் காங் 7, காங்கிரஸ் 1, பா.ஜனதா 1.

**உத்தரப்பிரதேசம்**
மொத்த இடங்கள் 85. பா.ஜனதா 57, சமதா 2, எஸ்.பி. 20, பி.எஸ்.பி. 4, மற்றவை 1, சுயேச்சை 1.

**குஜராத்**
மொத்த இடங்கள் 26. பா.ஜனதா 19, காங்கிரஸ் 7.

**அசாம்**
மொத்த இடங்கள் 14. முடிவு-அறிவிக்கப்பட்டவை 13, காங்கிரஸ் 10, அசாம் கணபரிஷத் 0, யு.எம்.எஃப 1, ஏ.எஸ்.டி.சி 1, சுயேச்சை 1,

**மணிப்பூர்**
மொத்த இடங்கள் 2. மணிப்பூர் மக்கள் கட்சி 1, வ.கம்யூ 1.

**பிகார்**
மொத்தம் இடங்கள் 53. முடிவு அறிவிக்கப்பட்டவை 52, பா.ஜனதா 19, சமதா 9, ஆர்.ஜே.டி 17, ஜனதாதளம் 1, காங்கிரஸ் 5, ஆர்.ஜே.பி 1.

**அருணாசல பிரதேசம்**
மொத்த இடங்கள் 2. அருணாசல காங்கிரஸ் 2.

**ராஜஸ்தான்**
மொத்த இடங்கள் 25. காங்கிரஸ் 18, பா.ஜனதா 5, சுயேச்சை 2.

## சோனியா வருகையால் காங்கிரசுக்கு பலன் இல்லை

சோனியா காந்தியின் பிரச்சாரம் காங்கிரஸ் கட்சிக்கு எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நாடு முழுவதிலும் சோனியா காந்தி கலந்துகொண்ட கூட்டங்களுக்கு மக்கள் அதிகளவுக்கு வந்தபோதிலும், அந்தளவுக்கு வாக்குகள் காங்கிரஸ் கட்சிக்கு விழவில்லை. சோனியா காந்தியின் கூட்டத்துக்கு வந்த அனைவரும் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்திருந்தால் அது தனி ஒரு கட்சியாக ஆட்சியமைக்கும் பலத்தைப் பெற்றிருக்கும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காங்கிரசின் கோட்டையாக இருந்த உத்தரப் பிரதேசத்தில் இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கூட்டு, ஒரு இடத்தைக்கூட வெல்ல முடியாதது, சோனியாவின் வருகை காங்கிரஸ் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது எனத் தெரிவித்த காங்கிரஸ் தலைவர் ஒருவர், இந்திரா காந்தி காலத்திலிருந்தே காங்கிரஸ் கோட்டையாக இருந்த 'அமேதி' தொகுதியில் கூட காங்கிரஸ் வெல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பது துரதிர்ஷடவசமானது என்று கூறியுள்ளார்.




# கொலம்பியா இராணுவமுகாம் மீது தாக்குதல் 70 இராணுவத்தினர் பலி

(பகோதா - மார்ச் 5)

கொலம்பிய தலைநகர் பகோத்தாவுக்கு தெற்கேயுள்ள கக்குவான் காட்டுப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாம் ஒன்று ஃபார்க் (Farc) போராளிகளால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவில் இம்முகாமை சுற்றிவளைத்த ஃபார்க் போராளிகள் நேற்றுவரை அதை தமது முற்றுகைக்குள் வைத்திருந்தனர். இந்த முகாமில் 120 இராணுவ கொமாண்டோக்களை மீட்பதற்கான தரை வழித் தொடர்புகள் அனைத்தையும் ஃபார்க் போராளிகள் துண்டித்திருந்தனர்.

இன்று அதிகாலை விமானப்படை, உலங்குவானூர்திகள் மூலம் அங்கிருந்த படையினரை மீட்பதற்கு முயன்ற போது மீட்புப் படையினருக்கும் ஃபார்க் போராளிகளுக்குமிடையில் நேரடிச் சமர் இடம் பெற்றது. இச் சமரில் 70 இராணுவக் கொமாண்டோக்களை தாம் சுட்டுக் கொன்று விட்டதாக ஃபார்க் அமைப்பு தெரிவித்துள்ளது.

இன்றுகாலை பத்திரிகையாளர்களிடம் பேசிய கொலம்பிய ஜில் பெத்தே எசுவெறி (Gilbsato Echevery) ககுவான் முகாமிலிருந்த படையினருக்கு விமானப்படையினர் மூலம் உதவி வழங்கி விட்டதாகவும், அங்கு நடந்த சண்டையில் காயமடைந்தவர்களை மீட்டு விட்டதாகவும் தெரிவித்தார். ஆனால் படையினருக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றி கருத்துக்கூற அவர் மறுத்துவிட்டார். ஆனால் பின்பு நடந்த பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றில் செய்தி வெளியிட்ட கொலம்பிய தரைப் படைத்தளபதி ஜெனரல் பெர்னாண்டோ தப்பியாஸ், இந்த முற்றுகைச் சண்டையில் இரு தரப்பிலும் 100 பேர்வரை பலியாகி விட்டதாகத் தெரிவித்துள்ளார்.

ஃபார்க் அமைப்பு மாவோயிச அடிப்படையிலான சமதர்ம அரசு ஒன்றை கொலம்பியாவில் அமைப்பதற்காக தொடர்ந்து போராடி வருவது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் கொலம்பிய தேசிய காங்கிரசை (பாராளுமன்றம்) புதுப்பிப்பதற்கு கடந்த (08.03.98) ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. 88 கட்சிகள் பங்குபற்றும் இத் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு ஃபார்க் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# கொங்கோ இராணுவம் வெறியாட்டம் பொதுமக்கள் உட்பட 300 பேர் படுகொலை

(கின்சாசா - மார்ச் 6)

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் (முன்னாள் சயர்) தலைநகர் கின்சாசாவுக்கு மேற்கேயுள்ள 'புத்தம்போ' பகுதியில் அரச இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்கள் உட்பட்ட 300 பேரை படுகொலை செய்துள்ளதாக அங்கு நிவாரணப் பணிகளை மேற்கொண்டுவரும் AZADHD என்ற அமைப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி 20-ம் திகதி கொங்கோவின் Kivu பகுதியில் வசிக்கும் பழங்குடி மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் Maï maï அமைப்பின் உறுப்பினர்கள், அப்பகுதியில் உள்ள பிரதான நகரமான புத்தம்போவை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததையடுத்து அங்கு மோதல் ஆரம்பமாகியது.

கொங்கோவின் மேற்குப் பகுதியில் உள்ள இராணுவ முகாங்களுக்கான பிரதான விநியோகப் பாதையாகவுள்ள இந்த நகரை விடுவிப்பதற்காக அங்கு அனுப்பி வைக்கப்பட்ட அரச இராணுவத்தினர் பெப்ரவரி மாத இறுதிவரை Maï maï உறுப்பினர்களுடன் தொடர்ந்து சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நகரத்தைக் கைப்பற்றும் முயற்சியில், அதன் சுற்றுவட்டாரத்தில் இருந்த Kiondo; ISALE ஆகிய கிராமங்களை நிர்மூலமாக்கிய இராணுவத்தினர் அங்குள்ள வீடுகளுக்கு தீவைத்துவிட்டு - அங்கிருந்த ஆண்கள் அனைவரையும் கைதுசெய்து கொண்டு சென்றுள்ளனர்.

பெப்ரவரி மாத இறுதிவரை அப்பகுதியில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்ட மனித உரிமை அமைப்புக்கள், தாங்கள் 200 வரையிலான சடலங்களை அப்புறப்படுத்தியதாக தெரிவித்துள்ளனர். அச்சடலங்களில் சிறுவர்களும், சிறுமியர்களும், பெண்களும் இருந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயத்தை அம்பலப்படுத்திய AZADHD அமைப்பு, Maï maï உறுப்பினர்களை அழிப்பதாக கூறிக்கொண்டு பெண்களையும் குழந்தைகளையும் சிறுவர்களையும், அப்பாவிகளையும் அரசபடைகள் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டியுள்ளது.

# சட்ட விரோத குடியேற்றத்தைத் தடுக்க மலேசிய பிரதமர் நடவடிக்கை

(கோலாலம்பூர் - மார்ச் 7)

மலேசியாவுக்குள் சட்ட விரோதமாக குடியேறுபவர்களை தடுப்பதற்கு தாம் உறுதி பூண்டிருப்பதாக மலேசியப் பிரதமர் டத்தோ ஸ்ரீ மகாதிர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், சட்ட விரோத குடியேற்றக்காரர்களை நாம் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளமுடியாது. அவர்கள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுப்பதற்கு எல்லைப் பகுதிகளிலும் விமான நிலையங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள நாடுகளுக்கு நாம் உதவுவதன் மூலம், அந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் திருட்டுத்தனமாக நமது நாட்டுக்குள் வந்து குடியேறுவதை தடுக்கலாமே தவிர, அவர்களை எமது நாட்டுக்குள் குடியேற அனுமதிக்கமுடியாது.

'ஆசியானின்' சில நாடுகளில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருப்பதால் அந்நாடுகளைச் சேர்ந்தோர் திருட்டுத் தனமாக மலேசியாவுக்கு நுழைவது அதிகரித்துள்ளது.

நாம் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள ஆசியான் நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். எமது இந்த நடவடிக்கை 'ஆசியான்' நாடுகளுடனான நட்புறவை எந்த விதத்திலும் பாதிக்காது என்பதை அந்த நாடுகள் புரிந்துகொண்டுள்ளன.

மலேசியாவுக்குள் வரும் சட்டவிரோத குடியேற்றக்காரர்களை அவர்களது சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்புவது முற்றிலும் எமது அதிகாரத்திற்கு உட்பட்ட விடயம் என்பதையும் அந்த நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

ஆசியான் அமைப்பில் மலேசியா சிங்கப்பூர், புரூணை, இந்தோனேசியா, தாய்லாந்து, கம்போடியா, மியன்மார், லாவோஸ், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

# லிபியாவில் 3000 கி.மீ. நீள சுரங்கப்பாதை மேற்குலகிற்கு ஏற்பட்டுள்ள சந்தேகம்

(திரிப்போலி - மார்ச் 7)

சகாரா பாலைவனத்தில் 3000 கிலோ மீற்றர் நீளமான சுரங்கப்பாதையை லிபியா அமைத்து வருகின்றது என்ற சந்தேகம் மேற்குலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

லிபியா சகாரா பாலைவனத்திலுள்ள பெரு நகரங்களின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக, மத்தியதரைக் கடலிலிருந்து குழாய் வழியாக தண்ணீரை எடுத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளது. அதாவது சகாரா பாலைவனத்தில் 2 அல்லது மூன்று பாரிய நீர்த்தேக்கங்களைக் கட்டி மத்தியதரைக் கடலிலிருந்து தண்ணீரை எடுத்து வந்து தேக்கிவைத்து சுத்திகரித்து நன்னீராக்கி சகாராபாலைவன நகரங்களுக்கு விநியோகிக்க திட்டமிட்டுள்ளது.

இதற்காக வட ஆபிரிக்காவில் பதிவு செய்யப்பட்ட BROUN & ROOD என்ற பிரித்தானிய பொறியியல் நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது.

3000 கிலோமீட்டர் நீளமான இந்த தண்ணீர் விநியோக திட்டத்துக்கென 4 மீற்றர் விட்டமுடைய பாரிய குழாய்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

4 மீற்றர் விட்டமுடைய இந்தக் குழாய்கள்தான் மேற்கு நாடுகளில் சந்தேகத்துக்குக் காரணமாக இருக்கின்றன. இந்தக் குழாய்களை இரகசியமான இராணுவ விநியோகப் பாதையாக லிபியா பயன்படுத்தலாம் என்றும், அதாவது கனரக வாகனங்களையும், ஆயுதங்களையும் கூட இந்த சுரங்கக்குழாய்ப் பாதையினூடாக லிபியா எடுத்துச் செல்லக்கூடும் என்றும் மேற்கு நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன.

அதே நேரம் இந்த விடயம் பற்றி கருத்துத் கூறிய லிபிய அதிகாரிகள் இது ஒரு வீண் புரளியென்றும் அடுத்த மாதம் மேற்குலக பத்திரிகையாளர்களை இந்த திட்டப்பகுதிக்கு அழைத்துக்சென்று காட்டப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# GIA உறுப்பினர்கள் என சந்தேகப்படும் 9 பேர் பெல்ஜியத்தில் கைது

(புறுக்சல்ஸ் - மார்ச் 5)

அல்ஜீரிய தீவிரவாத இயக்கமான GIA யின் உறுப்பினர்கள் எனச் சந்தேகப்படும் 9 பேரை பெல்ஜியப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இன்று அதிகாலை பெல்ஜியத்தின் தலைநகர் புறுக்சல்சின் புறநகர் பகுதிகளில் தேடுதல் நடத்திய பொலிசார் 'வேர்வியே' என்ற இடத்தில் வைத்து 9 பேரைக் கைதுசெய்துள்ளனர். இந்த 9 பேரில் அல்ஜீரிய இனத்தவரான பிரெஞ்சுக் குடியுரிமை பெற்ற 32 வயதுடைய பரீத் மெலுக் (FARID MELOUK) என்பவர் GIA-யின் முக்கிய உறுப்பினர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொலிசார் 'வேர்வியே' பகுதியை சுற்றிவளைத்தபோது பரீத் மெலுக் ஆயுதங்களுடன் கட்டடத் தொகுதிக்குள் புகுந்து கொண்டு தன்னைப் பிடிக்க வந்தால் கட்டடங்களை வெடிக்க வைத்துக் தகர்த்து விடுவேன் என்று பயமுறுத்தல் விடுத்திருந்தார்.

பொலிசார் உடனடியாக அந்தப் பகுதியில் இருந்தவர்களை வெளியேற்றிவிட்டு கண்ணீர் புகைக் குண்டுகளை தொடர்ச்சியாக வீசி பரீத்தை கைது செய்தனர்.

பெல்ஜியப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட பரீத் மெலுக் - பிரெஞ்சுப் பொலிசாரால் தேடப்பட்ட ஒருவராக இருந்தார். கடந்த பெப். 18-ம் திகதி பாரிஸ் நீதிமன்றம் 1995-ம் ஆண்டுக்காலப் பகுதியில் பிரான்சில் நடந்த குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கில் பரீத் மெலுக்குக்கு 7 வருடச் சிறைத்தண்டனை விதித்திருந்தது.

இவர் பிரான்சின் இரண்டாவது பெரிய நகரமான லியோன் நகரத்தின் புறநகர் பகுதியான CHAONE SUR RHONE ல் இருந்து செயற்பட்ட GIA கிளையின் முக்கிய உறுப்பினராக இருந்தவர் என்றும், இந்தப் பகுதியில் இருந்தே பிரான்சின் பல்வேறு பகுதிகளிலும் நடந்த குண்டுத் தாக்குதல்களுக்கு திட்டம் திட்டப்பட்டதாகவும் பிரெஞ்சுப் பொலிசார் தெரிவித்துள்ளனர். பரீத்தின் முக்கிய சகாவான Khaled Kelkal, முன்பு இந்தப் பகுதியை பிரெஞ்சுப் பொலிசார் சுற்றிவளைத்தபோது தப்பி ஓட முயன்ற வேளையில் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**10 Dm செலவு செய்து ஜேர்மன் கற்றுக் கொள்ளவும்!**

தமிழர்களின் வேண்டுகோளின்படி விலை குறைக்கப் பட்டுள்ளது.

Deutsch Fuer Tamilen / ஜேர்மன் தமிழ் மக்களுக்கு 140 பக்கங்கள் - இலக்கணம், பொது அறிவு, சிறு அகராதிகள் உட்பட எட்டு பாடப் புத்தகங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டது.

10 மார்க் (இயலுமானால் 1 Dm 50 PF க்கு முத்திரைகளும் - ஒரு புத்தகம் அனுப்ப) உங்கள் விலாசத்தோடு அனுப்பவும்.

Firma Bachmayer, Freiherr Vom Stein Str 12, 68723 Oftersheim, Germany.

புத்தகம் -மிகவும் சுலபமாக விளங்கும் முறையில் எழுதப்பட்டது-உடனே அனுப்பி வைக்கப்படும்.

**Bank: Konto Nr 6000509 Volksbank Oftersheim, Blz 670 913 00.**

## பிரான்ஸ்

# ஒருநாள் வெறிச்சோடிப்போன ஒரு நகரம்

*(பாரிஸ் மார்ச் - 5)*

யுத்தம் நடக்கும்போது மக்கள் நகரங்களைவிட்டு வெளியேறுவது வழக்கம். இயற்கை அனர்த்தங்கள் நிகழும்போதும் மக்கள் அவ்வாறு வெளியேறுவதுண்டு. அல்லது அந்தப் பகுதி நகர நிர்வாகத்தினால் வெளியேற்றப்படுவதுண்டு.

இந்த இரண்டு காரணமும் இல்லாமல் இன்று (மார்ச்-5) பிரான்சின் 'ILE DE FRANCE' மாவட்டத்திலுள்ள Dugny நகர மக்கள் அந்தப் பகுதி நகரசபையின் உத்தரவின்பேரில் வெளியேற்றப்பட்டார்கள்.



வெறிச்சோடிப் போய் இருக்கும் நகரம்

ஆண்கள் பெண்கள் குழந்தைகள் சிறுவர்கள் என்று வயது பால் வித்தியாசம் இல்லாமல் அனைவரும் வெளியேற்றப்பட்டார்கள்.

Dugny பொலிசார் வீடு வீடாகச் சென்று எல்லோரும் வெளியேறிவிட்டார்களா என்று சோதனையிட்டார்கள்.

யாராவது வீட்டைவிட்டு வெளியேற மறுத்தால், நாங்கள் அரசின் பொறுப்பிலிருந்து நீங்கிக்கொள்கின்றோம். எங்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்கு அரசு பொறுப்பல்ல என்று எழுதிக் கையொப்பமிடவேண்டும் எனக் கோரப்பட்டார்கள்.

ஆனால் Dugny நகரவாசிகள் யாரும் அவ்வாறு கையொப்பமிட்டுக் கொடுத்துவிட்டு தங்கள் வீடுகளில் இருக்கவில்லை.

இன்று காலையிலேயே Dugny நகரின் நுழை வாயில்கள் அனைத்தையும் பொலிசார் மூடிவிட்டனர். போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டன. நகருக்குள் செல்வதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. நகரவாசிகள் பாரிஸ் பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் (RATP) பேருந்துகள் மூலம் Bourget என்ற நகரத்தில் இருந்த பூங்காவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இந்த நகரவாசிகள் இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டது கடந்த 3 மாதத்தில் இது இரண்டாவது தடவை.

அந்த நகரவாசிகளையெல்லாம் ஒட்டுமொத்தமாக வெளியேற்றுமளவுக்கு அப்படியென்னதான் அந்த நகரத்தில் இருந்தது.

அது வேறொன்றுமில்லை. இரண்டாம் உலக யுத்த காலத்தில் போடப்பட்ட இரண்டு பாரிய குண்டுகள் வெடிக்காத நிலையில் அங்கு புதையுண்டு கிடந்ததுதான் காரணம்.

இதிலே குறிப்பிட்டு சொல்லத்தக்க விடயம் என்னவென்றால், இந்தக் குண்டுகள் ஹிட்லரின் நாசிப் படைகளால் போடப்பட்டவையல்ல. அந்த நாசிப்படைகளின் ஆக்கிரமிப்பில் இருந்து பிரான்சை மீட்பதற்கு உதவிக்கு வந்த அமெரிக்கப் படைகளால் போடப்பவை என்பதே.

கடந்த டிசம்பர் மாதம் 8-ம் திகதி 500 கிலோ எடையுள்ள முதலாவது குண்டு மக்களை வெளியேற்றியபின் இராணுவ வெடிகுண்டு நிபுணர்களால் செயலிழக்கவைக்கப்பட்டது, இரண்டாவது குண்டு 250 கிலோ எடையுடையது. இது பிரெஞ்சு தேசிய இராணுவ அலுவலக வளாகத்தில் கட்டட நிர்மாணப் பணிக்காக நிலத்தை தோண்டும்போது கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டுதடவை இந்தக் குண்டை தொழில்நுட்ப ரீதியில் செயலிழக்க முயற்சிசெய்து அது முடியாமற்போன நிலையில் அதை வெடிக்க வைக்க தீர்மானிக்கப்பட்டது.





பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டிருக்கும் மக்கள்

இந்தக் குண்டுவெடிக்கும் நிகழ்வைப் பார்வையிட பத்திரிகையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அந்த வகையில் ஈழமுரசிற்கும் அந்த அனுமதி கிடைத்தது. ஈழமுரசின் அபிமானி; நண்பர் அலன் ஆனந்தன் அந்த அனுமதியை நாம் பெற்றுக் கொள்வதற்கு உதவி புரிந்தார்.

இன்று காலையில் நாம் அலன் ஆனந்தனின் உதவியோடு Dugny நகரபிதா 'ஆந்திரே வேர்சியர்' அவர்களை சந்தித்து இது பற்றிக் கேட்டபோது, 'குண்டை இராணுவத்தால் செயலிழக்க வைக்கமுடியவில்லை. ஆனால் இந்தக் குண்டுவெடிக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது. அதனால் Dugny மக்களை வெளியேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்' என்றார்.

இந்த வெளியேற்றத்தைப் பற்றி கொஞ்சம் விரிவாகச் சொல்லமுடியுமா என்று கேட்டபோது வேலைக்குப் போகின்றவர்கள் வழமைபோல் வேலைக்குச் சென்றுவிடுவார்கள். குழந்தைகள், வீட்டிலிருக்கும் பெண்கள், மற்றும் வேலையில்லாது வீட்டிலிருக்கும் ஆண்கள் RATP பேருந்துகள் மூலம் Le Bourget இலுள்ள கண்காட்சி மண்டபங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் வயது குறைந்தவர்களும் வயோதிபர்களும் நோயாளிகளும் அம்புலன்ஸ் வண்டி மூலம் அருகாமை நகரங்களில் உள்ள முதியோர் இல்லங்களுக்குக் கொண்டு செல்லப்படுவார்கள் இவர்களுக்கான உணவுச் செலவு, போக்குவரத்துச் செலவு உட்பட அனைத்துச் செலவுகளையும் இராணுவமே பொறுப்பேற்கும். ஏனெனில் குண்டு அவர்களுக்குச் சொந்தமான நிலத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டது.

மக்கள் வெளியேற்றப்பட்டபின் இங்குள்ள அனைத்து வீடுகளும் பொலிசாராலும், இராணுவத்தினராலும் கண்காணிக்கப்படும். திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டாமல் இருக்கவே இந்த ஏற்பாடு என்று கூறினார்.

குண்டு வெடிக்க வைக்கப்படுகின்ற நேரத்தில் அதை நேரடியாகப் பார்வையிடுவதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. சரியாக 13.30 மணிக்கு 250 கிலோ நிறையுடைய இந்தக்குண்டு பாதுகாப்பாக வெடிக்க வைக்கப்பட்டது.

குண்டு வெடித்த இடத்தில் பெரிய பள்ளம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

**குறிப்பு:** இந்தக்குண்டு வெடிப்பு நமது நாட்டில் சிறீலங்கா படைகள் வீசி வெடிக்கச் செய்யும் குண்டுகளோடு ஒப்பிடும்போது சாதாரண ஒன்றுதான். ஆனால் ஒரு அரசு, மக்களை (வெளிநாட்டவர்களைக் கூட) ஆபத்திலிருந்து பாதுகாப்பதற்கு எத்தகைய முன்னேற்பாடுகளைச் செய்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

# வாரக் குறிப்பு

### 01.03.1998 ஞாயிற்றுக்கிழமை

- ரஷ்ய அமைச்சரவையின் 3 அமைச்சர்களை ஜனாதிபதி பொறிஸ் ஜெல்சின் பதவி நீக்கம் செய்துள்ளார்.
- பிரித்தானியாவிற்கும் ஆர்ஜன்டீனாவுக்கும் இடையில் சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருந்துவரும் போக்லாந்து தீவுகள் தொடர்பாக இரு நாடுகளும் பாரிசில் இரகசியமாக பேச்சு வார்த்தையில் ஈடுபட்டதாக அறிவிப்பு.
- பிரித்தானியாவின் முடிக்குரிய மன்னராக வரவிருக்கும் இளவரசர் வில்லியம், தான் மன்னராக விரும்பவில்லை என்பதை தந்தை சார்ள்சிடம் தெரிவித்துள்ளார். அவரது தாயாரான இளவரசி டயானாவின் மறைவு, அவரைப் பாதித்துள்ளதே அவரது இந்த முடிவுக்குக் காரணமென சொல்லப்படுகிறது. இளவரசர் வில்லியத்திற்கு வயது 15.

### 02.03.98 திங்கட்கிழமை

- நைஜீரியாவில் இடம்பெற்ற பேருந்து விபத்து ஒன்றில் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.
- தாய்லாந்து அரசாங்கத்தின் மீது 4 எதிர்க்கட்சிகள் கூட்டுச் சேர்ந்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளன.
- பிரித்தானிய எழுத்தாளர் சால்மன் ருஷ்டிக்கு ஈரானால் விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக தாம் அறிக்கை ஒன்றை வெளியிடப்போவதாக ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் மேரி ரொபின்சன் அறிவிப்பு.

### 03.03.98 செவ்வாய்க்கிழமை

- வட அயர்லாந்திலுள்ள மதுபானச்சாலை ஒன்றுக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 2 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 2 பேர் காயமடைந்துள்ளனர்.
- சீனாவின் முன்னாள் பிரதமர் சூ. என் லாயின் 100-வது பிறந்த தினத்தை முன்னிட்டு சீன மத்திய வங்கி விசேட தக்கம் வெள்ளி நாணயங்களை வெளியிட்டுள்ளது.
- மெக்சிக்கோவின் தென்பகுதியிலுள்ள சிறையொன்றில் பொலிசாருக்கும் சிறைக் கைதிகளுக்குமிடையில் மூண்ட கலவரத்தில் 2 பொலிசார் கொல்லப்பட்டுள்ளனர். 7 பேர் காயமடைந்துள்ளனர்.
- மத்திய ஆபிரிக்க நாடான புருண்டியில் ஊட்டச்சத்தின்மை காரணமாக தினசரி 20 பேர் மரணமடைந்து வருவதாக அறிவிப்பு.

### 04.03.98 புதன்கிழமை

- தனது நாய்க்கு குடிவரவு (immigration) என்று பெயர் வைத்த தான்சானிய வாசிக்கு தான்சானிய நீதிமன்றம், அரச திணைக்களத்தை அவமதித்த குற்றத்துக்காக 7 வருட சிறைத் தண்டனை விதித்துள்ளது: நாய்க்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- இஸ்ரேலிய உளவு நிறுவனமான மொசாட்டின் புதிய தலைவராக முன்னாள் புலனாய்வு அதிகாரியான ஏப்ரஹம் ஹலிவி-பிரதமர் பெஞ்சமின் நட்டன்யாஹூவால் நியமனம்.
- கம்போடிய இளவரசர் நொரோடோம் ரானாரிக் கடந்த 5 வருடகாலமாக கம்போடியாவுக்குள் கடத்தி வருவதாக கம்போடிய இராணுவ நீதிமன்றம் அறிவிப்பு.
- பிரெஞ்சு அதிபர் ஜக் சிராக்கினால் ஈராக் அதிபர் சதாம் ஹு-சேனுக்கு எழுதப்பட்ட கடிதம் ஒன்றை எடுத்துக்கொண்டு பிரான்சின் விசேட தூதர் பக்தாத் பயணம்

### 05.03.98 வியாழக்கிழமை

- எல்நினோவின் தாக்கத்தால் ஈக்குவடோரில் மலை ஒன்று தகர்ந்து சரிந்து விழுந்ததில் 17 பேர் கொல்லப்பட்டனர்.
- ஐ.நா பொதுச் செயலாளர் கோபி அனானுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி ஆயுதப் பரிசோதனைக் குழுவுடன் முழுமையாக ஒத்துழைப்பதற்கு தாம் தயாரென ஈராக் அதிபர் சதாம் ஹூசேன் அறிவிப்பு.
- ஈராக்கிற்கான விசேட ஆயுதப் பரிசோதனைக்குழுவில் அமெரிக்க பிரித்தானிய அதிகாரிகள் இடம் பெறமாட்டார்கள் என்று ஐ.நா. பாதுகாப்பு சபை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். ஈராக்கில் தூதரகங்களைக்கொண்ட நாடுகளே இந்தக் குழுவில் இடம்பெறும் என்பதால், அங்கு தூதரகம் இல்லாத அமெரிக்காவும், பிரித்தானியாவும் இடம்பெறமாட்டாதென்று அவர்கள் கூறியுள்ளனர்.

### 06.03.98 - வெள்ளிக்கிழமை

- பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 300 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 1500 பேரைக் காணவில்லை என்றும் 3000 வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் அறிவிப்பு.
- 1992-ம் ஆண்டில் லிபியா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்குவதுபற்றி விவாதிக்க ஐ.நா. பாதுகாப்புச்சபை முடிவு. இதை தடுப்பதற்கு அமெரிக்காவும், பிரிட்டனும் மேற்கொண்ட முயற்சியை சர்வதேச நீதி மன்றம் நிராகரிப்பு.
- கொசோவோ பகுதியில் மேலும் 20 அல்பானியர்களை செர்பிய பொலிசார் கொலை செய்துள்ளனர். இந்த வாரத்தில் 70 அல்பானியர்கள் செர்பிய பொலிசாரால் கொல்லப்பட்டுள்ளனர்.
- எதிர்வரும் மே மாதம் 14-ம் திகதி நடைபெறும் இஸ்ரேலின் 50-வது சுதந்திர தின விழாவை பகிஸ்கரிக்குமாறு 22 அரபுநாடுகள் கூட்டாக கோரிக்கை.

### 07.03.98 சனிக்கிழமை

- ஆர்ஜென்ரீனாவில் தஞ்சமடைந்த 85 வயதான முன்னாள் நாசிப்படைகளின் தளபதி 'எரிக் பிரெறிக்கே' 1944-ம் ஆண்டில் 335 யூத மக்களின் மரணத்திற்குக் காரணமாக இருந்தார் என ரோம் நீதிமன்றத்தால் குற்றவாளியாக காணப்பட்டு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டார்.
- ஐக்கிய அமெரிக்கா நாட்டின் வர்த்தகர்களும், முதலீட்டாளர்களும் கியூப உயர் அதிகாரிகளைச் சந்திப்பு. கியூப பொருளாதாரம், வெளிநாட்டு வர்த்தகம், உல்லாசப் பிரயாணத்துறை பற்றிப் பேச்சுவார்த்தை.
- இந்தோனேசியா நாட்டின் பாராளுமன்ற வளாகத்தினுள் போதிய அடையாள ஆவணங்களை வைத்திருக்காது பிரவேசிக்கமுயன்ற நெதர்லாந்து நாட்டுத் தொலைக்காட்சி நிருபர் ஒருவர் அரசினால் நாடு கடத்தப்பட்டார்.
- கொலம்பியாவில் தேர்தலை புறக்கணிக்க பாக் அமைப்பு வேண்டுகோள். இந்த வேண்டுகோளுக்கு 60 முதல் 70% ஆன மக்கள் செவிசாய்ப்பார்கள் என அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

புதிய உருவில் புதிய பொலிவில்

# ஈழம் Shop

*16.03.98 திங்கட்கிழமை குதூகல திறப்பு விழாவிற்கு எமது வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் ைழக்கின்றோம்.*

**இலங்கையிலிருந்தும், இந்தியாவில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட சகலவிதமான மளிகைப் பொருட்களையும், மரக்கறி வகைகளையும், கடலுணவு வகைகளையும், மற்றும் வீடியோ சீடி கசட்டுக்களையும், தமிழ் சஞ்சிகைகள், பத்திரிகைகள் யாவற்றையும் எம்மிடம் விசேட விலையில் பெற்றுக்கொள்ளலாம்.**

## EElam Shop

399 Lewisham High Street,
Lewisham SE13 6NZ
Tel: 0181-6906545

## I.B.C.

தொடர்புகட்ளுக்கு: P.O.Box -1505
London SW 82 ZH.
தொலைபேசி: 0181 787 8000
தொலை நகல்: 0181 787 8010

## Radio Asia Canada

தொடர்புகளுக்கு: 680, Progress Avenue Unit 01,
Scarborough, Ontario, M1 H3 A5
Canada.
தொலைபேசி: 00 1 416 289 1522
தொலைநகல்: 00 1 416 289 1840

## Tamil Radio & Television (T.R.T)

**(Tamil Ozhi Oli)**

தொடர்புகளுக்கு: 79, Rue Rateau
93120 La Courneuve.
தொலைபேசி: 01 43 11 27 77
தொலைநகல்: 01 43 11 27 72

## Radio veritas Asia (Tamil Section)

தொடர்புகளுக்கு: P.O. box 2642
Quezon City 1166
Philippines.
தொலைபேசி: (632) 93900 11-4
தொலைநகல்: (632) 9381940

ஈழமுரசு நடாத்தும்

# இசை முரசு 1998

## - சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி -

**போட்டிக்கான விண்ணப்ப முடிவுநாள் 10.03.98 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

### விண்ணப்பப் படிவம்

1. முழுப்பெயர்: ....................
2. பிறந்த நாள்: ....................
3. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர்: ....................
4. முகவரி (பிரஞ்சு மொழியில்): ....................
....................
5. தொலைபேசி எண்: ....................
6. பங்குபற்றும் போட்டி: **தனிக்குரல் பாடற்போட்டி / இணைகுரல் பாடற்போட்டி**
7. தனிக்குரல் பாடற்போட்டியாயின்
I பங்குபற்றும் பிரிவு: **மேற்பிரிவு / கீழ்ப்பிரிவு**
II பாடவிரும்பும் பாடலின்பெயர்: 1 ....................
இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ....................
....................
III பாடவிரும்பும் பாடலின் பெயர்: 2 ....................
இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ....................
....................
8. இணைகுரல் போட்டியாயின்,
I இணைந்து பாடுபவர் பெயர்: ....................
முகவரி: ....................
II பாடவிரும்பும் பாடலின் பெயர்: 1 ....................
இடம்பெற்றுள்ள ஒலித் தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ....................
....................
III பாடவிரும்பும் பாடலின் பெயர்: 2 ....................
இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர் ....................
....................

*நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எனவும் அதனை முழுமனதுடன் ஏற்பேன் என்றும் இத்தால் உறுதிசெய்கின்றேன்.*

________________ ________________

பாதுகாவலரின் ஒப்பம் விண்ணப்பதாரரின் ஒப்பம்

### பங்குபற்றுவோருக்கான விதிகள்:

1. இதுவரை வெளியாகியுள்ள தமிழீழ விடுதலைப்பாடல் தொகுப்புக்களில் இருந்து மாத்திரமே போட்டிக்கான பாடல் தெரிவு செய்யப்பட வேண்டும்.
2. போட்டியாளரின் தெரிவுக்காக இரண்டு பாடல்கள் அனுமதிக்கப்படும்.
3. இணைகுரல்பாடற்போட்டி, தனிக்குரல்பாடற்போட்டி என இருவகைப் போட்டிகள் நடாத்தப்படும்.
4. தனிக்குரல் பாடல்போட்டி, 14 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு எனவும், 14 வயதிற்கு உட்பட்டோர் கீழ்ப்பிரிவு எனவும் இரு பிரிவுகளாக பிரித்து நடாத்தப்படும்.
**மேற்பிரிவு: 31.05.84 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.**
**கீழ்ப்பிரிவு: 01.06.84 அன்றும் அதற்கு பின்னரும் பிறந்தவர்கள்.**
5. இணைகுரல் பாடற்போட்டிக்கு வயதெல்லை இல்லை. தெரிவு செய்யும் பாடல் இணைகுரல் பாடல்களாக இருத்தல் வேண்டும்.
6. முதற்சுற்றுப்போட்டியில் தெரிவான பாடகர்கள் இறுதிப் போட்டிக்கு அழைக்கப் படுவர்.
7. இறுதிச் சுற்றின்போது, மேற்பிரிவிலும், கீழ்ப்பிரிவிலும், 1ம், 2ம், 3ம் இடத்திற்குரியோரும், இணைகுரல் போட்டியில் சிறந்த ஒரு இணையும் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.
8. மேற்பிரிவு முதலாம் இடத்தைப் பெறுபவர் சிறந்த பாடகராக தெரிவு செய்யப்பட்டு 'இசை முரசு 98' இற்கான விருது வழங்கி சிறப்பிக்கப்படுவார்.
9. விண்ணப்பக் கட்டணமாக 100FF செலுத்தப்பட வேண்டும்.
10. விண்ணப்பம் செய்வதற்கான இறுதித் திகதி: 10.03.98
11. விண்ணப்பம் செய்ய வேண்டிய முகவரி:
கடித உறையின் மேல்மூலையில் 'ISAI MURASU 98' எனக் குறிப்பிடவும்.

EELAMURASU - 22 Rue Perdonnet, 75010 Paris.
Tel: 01 40 37 63 63 Fax: 01 40 37 64 64



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# வாஜ்பாயின் பொறுப்பு

இந்தியாவின் புதிய பிரதமராக அத்தல் பிகாரி வாஜ்பாய் வருவார் என்பது உறுதியாகிவிட்டது. வாஜ்பாயை பிரதமராக வரவிடாமல் தடுப்பதற்கு காங்கிரஸ் தலைவர்களும் ஐக்கிய முன்னணித் தலைவர்களும் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் தோற்றுப்போய்விட்டன.

பாரதீய ஜனதா கட்சி ஒரு மதவாதக்கட்சி, அதன் சார்பில் பிரதமராக வரக்கூடிய வாஜ்பாய் ஒரு மதவாதத் தலைவர் என்றெல்லாம் காங்கிரசும், ஐக்கிய முன்னணியும் என்னதான் சேற்றை வாரி வீசிய போதிலும் வாஜ்பாய் இந்திய மக்களுக்கும் சக பிராந்திய மக்களுக்கும் ஒரு நல்ல பிரதமராக இருப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.

பாரதீய ஜனதாக்கட்சி ஒரு இந்துத்துவக் கட்சி என்பது என்னவோ உண்மைதான். ஆனால் தங்களை ஜனநாயகக் கட்சிகள், சோசலிசக் கட்சிகள் என்று சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் உட்பட ஏனைய கட்சிகளில் மலிந்து போயிருக்கும் சாதிவெறி, மதவெறி, பிரதேசவெறி, அதிகாரவெறி இவற்றோடு ஒப்பிடும் போது பாரதீய ஜனதாவின் இந்துத்துவவாதம் அவ்வளவு ஒன்றும் மோசமானதல்ல.

பாரதீய ஜனதா அயோத்தி பிரச்சினையில் முஸ்லீம் பள்ளி வாசலை இடித்தது என்னவோ உண்மைதான். அதை அநியாயம் அக்கிரமம் என்று கண்டித்த காங்கிரஸ் கட்சி உட்பட எதிரணிக் கட்சிகள், சீக்கியர்களின் புனித பொற் கோவிலுக்குள் புகுந்து 'நரபலி' எடுத்துக்கொண்டும், காஷ்மீர் போரை சாக்காக வைத்துக் கொண்டு முஸ்லீம் அப்பாவி மக்களை கொன்றொழித்துக்கொண்டும், சாதியின் பேரால் ஆயிரக்கணக்கான மக்களின் இரத்தத்தை ஆறாக வீதியில் ஓடவிட்டுக்கொண்டும்தான் குரல் கொடுத்தனர்.

நேர்மையாக – வெளிப்படையாக இந்துத்துவம் பற்றிப் பேசிக் கொண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்க இருக்கும் வாஜ்பாய் கடந்து செல்லவேண்டிய அரசியல்பாதை அவ்வளவு சுலபமானதல்ல. ஜனநாயக முகமூடியணிந்த மதவெறியர்களையும், சாதி வெறியர்களையும், அதிகாரித்துவ வெறியர்களையும் சமாளித்தாக வேண்டும், வென்றாக வேண்டும்.

பாரதீய ஜனதாவின் கட்சியில் சிறுபான்மை இனங்களுக்கும், மதங்களுக்கும் பாதுகாப்பு இருக்காது என்று எதிர்க்கட்சிகள் வைத்த குற்றச் சாட்டுக்கு, ஏற்கனவே பாரதீய ஜனதாவின் ஆட்சி நடைபெற்ற மாநிலங்களில் சிறுபான்மை இனங்களுக்கும் மதங்களுக்கும் இருந்த பாதுகாப்பு, அவர்களில் ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் இருக்கவில்லை என ஏற்கனவே வாஜ்பாய் சுட்டிக் காட்டியிருந்தார்.

தற்போது அவ்வாறு சுட்டிக்காட்டியதை பிரதமராக இருந்து நடைமுறையில் செய்துகாட்ட வேண்டிய பொறுப்பு, வாஜ்பாய் மேல் சுமத்தப்பட்டிருக்கிறது.

அடுத்து மதவெறிக்கு எதிராக கொடுத்தவர்கள்; பாரதீய ஜனதா ஒரு மதவாதக்கட்சி என்று பிரச்சாரம் செய்தவர்கள்; இலங்கையின் இனப் பிரச்சினையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு உதவி செய்து ஒரு இனத்தையே அழிக்க ஒத்தாசையாக இருந்த துரோகத்தனத்தை செய்திருக்கின்றார்கள். அதற்கு பரிகாரம் தேடவேண்டிய பொறுப்பும் வாஜ்பாய்க்கு உண்டு. அதை அவர் செய்வாரென்று ஈழத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

## இவ்வார தலைப்புகள்

### திவயின

(08.03.98)

### சிறீலங்காவின் ஆலோசனை

யார் பாவம் புரியாதவர்களோ அவர்கள் முதற் கல்லினை எறியவேண்டும் என்ற பைபிள் போதனையை துரதிர்ஷ்டவசமாக பாரதிய ஜனதாக் கட்சி கேள்விப்படவில்லைப்போல் உள்ளது. அதனால் தான் அதனது பொதுச் செயலாளர் கோவிந்தாச்சாரியார், தாம் அதிகாரத்துக்கு வந்தால் சிறீலங்கா அரசுமீது அழுத்தத்தைப் பிரயோகித்து வடபகுதி தமிழர்களுக்கு அரசு சுயாட்சி வழங்கவும், வடக்கில் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்தக் கோரப் போவதாகவும் கூறியுள்ளார்.

இந்தியர்கள் எப்போதும் சிறீலங்காவை தமது மற்றுமொரு மாநிலமாகக் கருதவில்லை. மாறாக மற்றுமொரு சுதந்திரமடைந்த நாடாக கருதினர். ஆனால் இத்தகைய அறிக்கைகள், இரு நாடுகளுக்கிடையிலான சுமூக உறவுகளை விரும்பாத சில சந்தர்ப்பவாதிகள் இந்தியாவில் உள்ளதை தெளிவாகக் காட்டுகின்றது. இதனால் அரசின் (சிறீலங்கா) தலையாய கடமையாக இத்தகைய முட்டாள்தனமான கருத்துக்களை முளையில் கிள்ளியெறிய வேண்டும். சிறீலங்காவும் அதனது உள்நாட்டு பிரச்சினைகளும் சிறீலங்கர்களுக்கு உரியது. இதில் தலையிடும் உரிமை எவருக்கும்கிடையாது. நாங்கள் ஒருவிடயத்தை அவர்களுக்கு ஆங்கிலத்தில் கூறலாம், `MIND YOUR OWN BUSINESS" .

### லங்காதீப

(04.03.98)

### ரத்வத்தையின் கோபம்

பிரபாகரனின் கட்டுப்பாட்டிலிருந்த 90 வீதமான பகுதிகள் தற்போது விடுவிக்கப்பட்டுவிட்டன. அக்மிமனையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறு கூறினார். 13 வருடகாலமாக இடம்பெற்ற போரினால் இலாபமடைந்த சில மக்கள் இதனூடாக இலாபகரமான வணிகத்தை நடாத்திக்கொண்டு எமது அரசாங்கத்தின் போரை வெல்வதற்கான ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுகின்றனர். பிரபாகரனின் கட்டுப்பாட்டிலிருந்த 90 வீதமான பகுதிகளை நாங்கள் மீட்டுவிட்டோம் என்ற விடயத்தை அவர்கள் குறைத்து எடை போடுகிறார்கள்.

### The Hindu

(03.03.98)

### சிறீலங்காவின் கணிப்பு

சுயாதீனமான கருத்துக்களை உருவாக்குபவர்கள், இந்திராகாந்தியின் அரசியல் வாரிசுகளின் பிரதிநிதிகளைக்கொண்ட, சோனியாகாந்தியினால் ஆசீர்வதிக்கப்பட்ட ஆட்சி, புது டெல்லியில் அரசு அமைக்குமானால் அது தென்னாசியாவில் ஆதிக்க சக்தியாக இந்தியாவை நிலைநிறுத்துமா என ஆராய்கின்றனர்.

இதன் மறுபுறம் சில புத்தி ஜீவிகள் பா.ஜ.க. புது டெல்லியில் அரசமைக்கும் பட்சத்தில் 'சந்தேகத்தினால் ஏற்படும் இலாபத்தினை' புலிகளுக்கு கொடுப்பார்கள் என கருதத் தலைப்படுகின்றார்கள். விடுதலைப் புலிகள் பா.ஜ.க. வின் இந்து தேசிய வாதத்தை பாவிப்பார்கள் என இந்தத் தரப்பினர் சந்தேகிக்கின்றனர். குறிப்பாக பா.ஜ.க வின் அணியைச்சேர்ந்த சிவசேனாவின் தீவிர தேசியவாதமே இதற்கு காரணமாகும்.

### The Hindu

(06.3.98)

### விடுதலை நகரின் அவலம்

பழனிமலையில் குண்டபதி கிராமச் சுற்றாடலைச் சேர்ந்த சிறீலங்கா குடியேற்றவாசிகள் தமது ஆயுட்கால சேமிப்பை இழக்கும் ஆபத்தான எதிர்காலத்தை பொலிஸ் தாக்குதலினால் எதிர்கொண்டுள்ளனர்.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் சிறீலங்காவிலிருந்து வந்த இவர்கள் அடிமைத் தொழிலாளர்களாக்கப்பட்டனர். சில நல்லவர்களின் தொடர்ச்சியான முயற்சியினால் அரசு தலையிட்டு இவர்களை விடுவித்தது. 'விடுதலை நகர்' இதன்போது உருவாகியது. அரசு வீடுகளை நிறுவி அவர்கள் தொழில் புரிவதற்கான சிறு காணிகளை வழங்கியது.

சிறீலங்காவிலிருந்து வந்து இங்கு குடியேறியவர்களில் பெரும்பாலானோர் ஏழை விவசாய தொழிலாளர்கள் ஆவர். இக் கிராமத்தவர்கள் அடிப்படை வசதிகள் தமக்கு வழங்கப்படாததால் அண்மைய தேர்தலை பகிஷ்கரிக்க முடிவுசெய்தனர். கடந்த 26ம் திகதி அதிக எண்ணிக்கையிலான பொலிசார் விடுதலைநகர், மற்றும் பாரதிநகர் கிராமத்துக்குள் புகுந்து கிராமத்தவர்களைத் தாக்கினார்கள். பொலிசார், சொத்துக்களை அழித்து கர்ப்பிணி பெண்கள் உட்பட பெண்களுக்கு எதிராக கெட்ட வார்த்தைகளைப் பாவித்து குடிசைகளை இடித்து துவம்சம் செய்ததாக கிராமவாசிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

### லங்காதீப

(08.03.98)




# எதிரொலிகள்

## நினைத்தேன்! வந்தது!

05.11.மார்ச் 98 'ஈழமுரசு' இதழில் இருந்து புதிய பகுதியாக 'கலைந்தசொற்கள்' எனும் பகுதியை அறிமுகப்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்க நல்லதொரு விடயம். காரணம் நீங்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் ஐரோப்பிய தொழில் மொழிகளில் பிரபலமான இந்த 'கலைந்த சொற்களான பொழுது போக்கு அம்சம்' போக்குவரத்து நேரங்களில் பிரெஞ்சுக் காரர்கள் பயணம் முடியும்வரை இந்தப் பொழுதுபோக்கு அம்சத்தில் மூழ்கியிருக்கும்போது தமிழிலும் இப்படியொரு விடயம் இருந்தால் நமக்கும் போக்குவரத்து நேரங்களில் உதவியாக இருக்குமே என்று மனதுக்குள் நினைப்பதுண்டு.

இந்தப் பொழுதுபோக்கு அம்சத்தை தயாரித்து 'ஈழமுரசு' வாசகர்களுக்கு வழங்க முன்வந்திருக்கும் திரு. சௌந்தரராஜன் அவர்களுக்கு நன்றிகள்! ஆனால் நீங்கள் குறிப்பிட்டதுபோல் மேற்படி தயாரிப்பாளர் ஏற்கனவே சிறு சஞ்சிகை உருவில் தமிழ் வாசகர்களுக்கு இந்த அம்சத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார் என்றும் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் நான் மேற்படி சஞ்சிகையை இன்றுவரை காணவில்லை.

பரவாயில்லை. இரண்டுவாரத்திற்கு ஒருமுறை 'ஈழமுரசு' இதழில் வருவதே போதுமான விடயம். காலப்போக்கில் வாரம் ஒருமுறை என்ற கணக்கில் வெளியிட்டால் நல்லது.

எஸ். ஐ. ஜெகதீசன்
பந்தன், பிரான்ஸ்

## தவறைத் திருத்துங்கள்


முரசின் முழக்கம் 163-இல் (26 மாசி -04 பங்குனி) பண்ணையாரின் போர்முனை ஆய்வில் மண்டைதீவு முகாம் தாக்குதலின்போது எதுவித போராளிகளின் இழப்புமின்றி முகாம் கைப்பற்றப்பட்டது என்று தவறாகக் குறிப்பிட்டுவிட்டீர்கள். அந்தக் தாக்குதலின்போது 109 இராணுவத்தினர் என நினைக்கிறேன் இறந்தும், 09 போராளிகள் வீர மரணமும் அடைந்தனர். புலிகள் ஒரு போதும் களமாடி வீர மரணம் அடைந்த போராளிகளின் எண்ணிக்கைகளை மறைத்ததில்லை. எனவே இப்படியான சில கவனப்பிழை புலிகள் மீது பிழைகாணத் துடிப்பவர்களுக்கு வாய்ப்பைக் கொடுத்துவிடும். எனவே இனிமேல் இப்படியான பிழைகளைத் தவிர்க்குமாறு ஈழமுரசின் வாசகர் என்கிற முறையில் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நன்றி

சியாம்
Nice

குறிப்பு: தகவலை ஒப்புநோக்குவதில் ஏற்பட்ட பிழை காரணமாக இந்தக் தவறு ஏற்பட்டுவிட்டது. உண்மையைச் சுட்டிக்காட்டிய வாசகர் சியாமுக்கு எமது நன்றிகள்

-ஆ.ர்.




"காணி நிலம் வேண்டும் – பராசக்தி காணி நிலம் வேண்டும்"
"காணி வேண்டாமப்பா! எங்கையாவது லொட்ஜில இடம் ஒண்டு கேளுங்கோவன்"

நன்றி: 'தினக்குரல்'

# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

52

ஜே.வி.பி. இயக்கத்தினரது ஆயுதப் போரை அடக்குவதற்கு 12 ஆயிரம் முதல் -15 ஆயிரம் வரையிலான இந்தியப்படையினர் வரவழைக்கப்பட்டிருந்தனர். குறிப்பாக விமானப் படையினரே அதிகளவுக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர். அந்தக் கால கட்டத்தில் ஜே.வி.பி. இய்க்கம் இந்தத் தொகையைப் போல் 4 மடங்கு எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

ஜே.வி.பி. தலைமை - பொலீஸ் நிலையங்களைக் கைப்பற்றுவதன் மூலம், ஆட்சி அதிகாரம் தங்கள் கைகளுக்கு வந்துவிடும் என்று தமது உறுப்பினர்களுக்குச் சொல்லியிருந்தது. ஆனால் பொலிஸ் படைகள் மட்டும் ஒரு அரசை தாங்கி நிற்கவில்லை என்பதையும், அந்த அரசின் அதிகாரத்தைக் காத்து நிற்கும் ஏனைய படைகளைப் பற்றியும், அரசின் அதிகாரத்தை தன்னுடைய கைகளில் வைத்திருக்கும் ஒரு அரசாங்கம், இவ்வாறான புரட்சிகர நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக பெற்றுக் கொள்ளக் கூடிய வெளிநாட்டு படை உதவிகள் பற்றியும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை,

இந்திய விஸ்தரிப்பு வாதத்தை தவறான முறையில் கணிப்பிட்டு மலையகத் தமிழர்களையும், இலங்கைத் தமிழர்களையும், இந்திய விஸ்தரிப்புவாதிகளின் ஐந்தாம் படைகளாக சித்தரித்த ஜே.வி.பி. தலைமை, இந்திய காங்கிரஸ் கட்சிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைக்கும் இடையில் இருந்த வர்க்க ஒற்றுமைபற்றி கணக்கில் எடுக்கவேயில்லை.

தன்னுடைய வர்க்கத்தைச் சார்ந்த ஒரு அரசுக்கு நெருக்கடி ஏற்படும்போது அதைப் பயன்படுத்தி தனது பிராந்திய விஸ்தரிப்புக்கொள்கையை இந்திய காங்கிரஸ் கட்சி திணிக்கும் என்பதை ஜே.வி.பி. தலைவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை.

அதன் விளைவு, திருமதி சிறீமாவோ பண்டார நாயக்காவின் அரசைக் காப்பாற்றுவதற்கு வந்த இந்தியப்படை தங்களது இந்திய விஸ்தரிப்புவாதக் கொள்கைக்கு சவால்விட்ட ஜே.வி.பி. இயக்க உறுப்பினர்களை சுட்டுத் தள்ளியது. இரண்டு வாரங்கள் தொடர்ந்த இந்தியப் படை மற்றும் சிறீலங்கா படைகளின் கூட்டு நடவடிக்கைகளில் 7500 இலிருந்து, 10000 வரையிலான ஜே.வி.பி. உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

களனிகங்கை, மகாவலி கங்கை, மாணிக்க கங்கை முதலான ஆறுகளில் கொலை செய்யப்பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்களின் சடலங்கள் மிதக்க விடப்பட்டன. ஜே.வி.பி. அனுதாபிகளை பயமுறுத்துவதற்காக இவ்வாறு செய்யப்பட்டதாக சிறீலங்கா பொலிசார் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

சிறீலங்கா இராணுவத்துக்குள் ஜே.வி.பி. இயக்கம் ஓரளவுக்கு ஊடுருவி இருந்த போதிலும், இந்தியப்படைகளின் வருகை அவர்களை மனோவியல் ரீதியாக அச்சுறுத்திவிட்டது. இதனால், அவர்கள் தங்களை நல்ல பிள்ளைகளாக - அரச விசுவாசிகளாகக் காட்டிக் கொண்டனர்.

## 'யாழ். சிறையை உடைத்து ரோஹண விஜயவீராவை மீட்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி'

இதற்கிடையில், யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையில் சிறைவைக்கப்பட்டிருந்த தங்களது தலைவர் ரோகண விஜயவீராவை மீட்பதற்கென ஜே.வி.பி. உறுப்பினர்கள் உல்லாசப் பிரயாண பேருந்து ஒன்றில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.



**தன்னுடைய வர்க்கத்தைச் சார்ந்த ஒரு அரசுக்கு நெருக்கடி ஏற்படும்போது அதைப் பயன்படுத்தி தனது பிராந்திய விஸ்தரிப்புக் கொள்கையை இந்திய காங்கிரஸ் கட்சி திணிக்கும் என்பதை ஜே.வி.பி. தலைவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை.**

யாழ்ப்பாண நகரத்தைப் பற்றி அறிந்திராத - அந்த நகரத்துக்கு ஒரு தடவை கூட சென்றிராத அவர்கள், யாழ். கோட்டைக்கு செல்ல வழிதெரியாது தடுமாறிக்கொண்டிருந்த வேளையில் சிறீலங்கா பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கைதுடன் ஜே.வி.பி. இயக்கத்தினரது 1971 ஏப்ரல் ஆயுதப் புரட்சி நசுக்கப்பட்டது. இப் புரட்சி ஆரம்பித்து மூன்று வாரகாலத்துக்குள் இது நசுக்கப் பட்டாலும், இந்தப் புரட்சியின் பின்னணிபற்றி திருமதி. சிறீமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்திற்கு பலத்த சந்தேகங்கள் இருந்துகொண்டே இருந்தது.

சீனாவும்-வட கொரியாவும் ஜே.வி.பி. இயக்கத்துக்கு ஆயுதம் வழங்கியிருக்க வேண்டும் என்று அரசாங்கம் சந்தேகப்பட்டது. கொழும்பில் பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தைக் கட்டுவதற்கு வழங்கிய அனுமதியை பயன்படுத்தி சீனாவில் இருந்துகொண்டு வரப்பட்ட கட்டுமானப் பொருட்களுடன் ஜே.வி.பி. இற்கான ஆயுதங்களும் எடுத்து வரப்பட்டிருக்கலாம் என்று அரசாங்கம் சந்தேகப்பட்டது.

பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டப நிர்மாணப் பகுதி பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், வடகொரிய தூதரக அதிகாரிகளும் ஊழியர்களும் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர்.

வடகொரியா ஜே.வி.பி. இற்கு உதவியதை ஆதார பூர்வமாக சிறீலங்கா அரசால் நிரூபிக்க முடியாத போதிலும் இந்திய இராணுவத்தை தாங்கள் அழைத்ததை நியாயப்படுத்துவதற்காக புரட்சியில் வெளிநாட்டு சதி ஒன்று இருந்தது என்பதைக் காட்டுவதற்கு வட கொரிய தூதரக அதிகாரிகளையும் ஊழியர்களையும் வெளியேற்ற வேண்டிய 'தேவை' அதற்கு ஏற்பட்டிருந்தது.

மக்கள் சீனக்குடியரசு பல கோடி ரூபா நிதி உதவியை சிறீலங்கா அரசுக்கு செய்திருந்ததால் சீன தூதரக அதிகாரிகளை வெளியேற்ற முயலவில்லை. ஆனால் சீனத் தலைவர் மாவோசேதுங் இனால் எழுதப்பட்ட பல்லாயிரக் கணக்கான புத்தகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. மாவோவின் புத்தகங்களை வைத்திருந்த பலர் ஜே.வி.பி. உறுப்பினர்கள் எனக் கைது செய்யப்பட்டனர். இந்தக் காலப்பகுதியில் 15 ஆயிரம் பேரை சிறீலங்கா பொலிசார் ஜே.வி.பி. உறுப்பினர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்திருந்தனர்.

அது மட்டுமல்லாமல் சிறீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டணி அரசாங்கத்தை விமர்சித்த நா.சண்முகதாசன், சமல்த சில்வா, காந்தி அபயசேகரா போன்ற இடதுசாரித் தலைவர்களையும் அரசாங்கம் கைதுசெய்து சிறையில் அடைத்தது. அரசாங்கத்தில் அங்கம் வகித்த லங்கா சமசமாஜக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மகனும் கூட ஜே.வி.பி. சந்தேக நபர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா தனது மகனைக் கைது செய்யப்பட்ட 4 மணி நேரத்துக்குள் விடுதலை செய்வித்துவிட்டார். ஆனால் மற்றவர்களின் விடுதலை பற்றி பேசுவதற்கே யாரும் இருக்கவில்லை.

**- நக்கீரன்**

## கிடைக்கப் பெற்றோம்

# 'புதுக்குரல்'




டென்மார்க்கில் இருந்து இக்குரல் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

'தமிழ் மாணவர் வலையாக்கம்' இவ்விதழை வருடத்திற்கு இரு முறையாக வெளிக்கொணர்கின்றது. அத்தனையும் மாணவர்களின் ஆக்கங்கள், எண்ணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எந்தப் 'பிரபலங்களும்க்கு' இடம் கொடாமலும் வேறு எவற்றில் இருந்தும் எடுத்துப்போடாமலும், இதழைத் தயாரித்துள்ள தன்னம்பிக்கை பாராட்டத்தக்கது.

வளரும் தலைமுறையின் எண்ணங்கள், போக்குகளை அறிந்து கொள்ள ஓரளவு இவ்விதழ் உதவுகின்றது. பலரது எண்ணங்களில் வைத்தியராவது, பொறியியலாளராவது என்னும் கனவுகள் படிந்து கிடப்பதைக் காணமுடிகின்றது.

எமது சமூகத்தின் பூஞ்சணம் கட்டிப்போன இக்கனவினை இங்கே வளரும் இளம் சமுதாயமும் கொண்டிருப்பது ஆச்சரியத்தையும் வேதனையையும் தருகின்றது.

உலகம் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்நாளில் எத்தனை துறைகள் நம்முன்னே கிடக்கின்றன என்பதை காணத்துடிக்கும், அவற்றில் நம் அறிவை வளர்க்கும் எண்ணத்தை 'இழந்து நிற்கும்' இவ்விளம் சமூகத்தின் புது உலகத்தை காட்டுவது புதுக்குரலும்கூட.

## குறும்படப் போட்டித் தெரிவில் பாராட்டைப் பெறும்

# 'எச்சில்போர்வை'

தமிழர் கலைபண்பாட்டுக்கழகம் (பிரான்ஸ்) சினிமாக்கலை அறிவியலை மேம்படுத்தும் நோக்குடனும், இளம் கலைஞர்களிடையே அக்கலை பற்றிய ஆர்வத்தை தூண்டும் நோக்குடனும் குறும்படப் போட்டியொன்றினை கடந்த ஆண்டில் அறிவித்திருந்தனர்.

இப்போட்டிக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஆறு குறும்படங்கள் வந்து சேர்ந்திருந்தன. இவற்றை பத்திரிகையாளர், எழுத்தாளர், கலைஞர்கள் எனப் பல்துறை சார்ந்த குழுவொன்று பார்வையிட்டு தம் முடிவுகளை அறிவித்திருந்தது. தாங்கள் பார்வையிட்டவற்றுள் எச்சில் போர்வை குறும்படத்தை பல அம்சங்களில் சிறந்தது என ஏகமனதாக தெரிவு செய்தனர்.

'எச்சில்போர்வை' எனும் குறும்படம் சுவிஸில் இருந்து அனுப்பப்பட்டதாகும். இப்படம் ஐரோப்பிய நாடொன்றுக்கு வந்து சேரும் தமிழ் இளைஞன் ஒருவனின் மனநிலைப்பாதிப்புகளை பதிவு செய்ய் முயன்றிருக்கின்றது. அதிகம் அலட்டிக்கொள்ளாமல்தான் சொல்ல வந்த விடயத்தை எளிதாக வெளிப்படுத்தி இருக்கின்றார், இப்படத்தின் இயக்குநர். சினிமா அறிவியல் கலையானது பெரிதும் 'காமெரா'வையே சார்ந்திருக்கின்றது. 'காமெரா' என்னும் அந்தக் கருவியின் மூலம் படைப்பு நல்லாக்கம் நிகழவேண்டுமானால் அக்கருவி பற்றிய பயிற்சியும், புரிதலும் அவசியமானதாகும். இல்லையேல் சினிமா என்னும் கலைவடிவம் சாத்தியமற்றதாகிவிடும். எச்சில்போர்வை இவ்வம்சங்களில் முன்னேற்றகரமாக உள்ளதாய் தேர்வுக் குழுவினர் ஒருமித்த கருத்து வெளியிட்டனர்.

மிகக்குறுகியதான நேரத்தில் பாத்திரத்தின் சலிப்பு, விரக்தி ஆற்றாமை, பொறுமை ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் தன் திறமைகளை காட்டியுள்ளார், இயக்குநர்.

பாத்திரத் தேர்விலும், தன் கதையின் தேர்விலும் அக்கறை காட்டியுள்ளமையை அவதானிக்க முடிந்தது. இயக்குநர் இத் துறையில் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்துவாராயின் நல்ல தமிழ் சினிமாவை தரக் கூடியவராவார்.

# ரசனையை யார் உருவாக்குகிறார்கள்?

*(இப் பகுதியில் வெளிவந்த இக் கட்டுரை, சென்றவாரத்துடன் முடிவடைந்துவிட்டதாக தவறுதலாக குறிப்பிடப்பட்டுவிட்டது அதன் தொடர்ச்சியை இங்கு பிரசுரிக்கின்றோம் — ஆ-ர்.)*

பாலச்சந்தர் நல்லபடம், விருது, அங்கீகாரம் போன்ற பிம்ப வலைக்குள் சிக்கிக்கொண்டிருக்கிறார். தண்ணீர் தண்ணீர் மக்களால் நன்கு வரவேற்புக்குள்ளானது. அதுதான் முக்கியம். தீவிரமான படம் மக்களால் வரவேற்கப்பட்டு வியாபார ரீதியிலும் வெற்றி பெறுவது தான் முக்கியம். பாலச்சந்தரின் சிந்தனை இவ்வகையில் தமிழ் சினிமாவுக்கு துரதிர்ஸ்டவசமானது. பாலுமகேந்திரா, மனிதனுக்கு 'கனவின் ஆரோக்கியமான அவசியத்தை' புரிந்து கொண்டிருக்கிறார். அதேவேளை சினிமா வாழ்வையும் சொல்லும் பொறுப்புக்கொண்டது என்கிறார்.

தீவிரமான சமூகப் பொறுப்புள்ள இயக்குநர்கள் அனைவருமே பொதுமக்களிடம் படங்கள் செல்லவேண்டுமென விருப்பப்படுகிறார்கள். ஆனால் மக்களைக் கவராத படம்; அதனால் என்னபயன் என்கிற விவாதங்கள் அவர்களை மிகுந்த சஞ்சலப்படுத்துகிறது. மக்களைப் படங்கள் கவருவது என்பது அவர்களது கல்வி மட்டம், கலாச்சார வளர்ச்சி, வாழ்வனுபவம் போன்றவற்றையும் குறித்தது. பரந்துபட்ட மக்களுக்கு படைப்புக்கள் சென்று சேர



வேண்டும் என்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது. ஆனால் எல்லாப் படங்களும் பரந்துபட்ட மக்களுக்குப் புரிகிற மாதிரி செய்யப்பட வேண்டும் என்பது மிகுந்த பிரச்சினைக்குரியது.

மக்களைக் கவராத படம் எடுத்து பயன் என்ன என்ற கேள்வி அபத்தமானது. அப்படியானால் ஜேம்ஸ் ஜாய்ஸை சிலர்தான் படிக்கிறார்கள் என்பதால் அவரை ஒதுக்கிவிட முடியுமா? தார்க்காவ்ஸ்க்கி போன்றவர்களின் படங்களை சிலர்தான் புரிந்து கொள்ள முடியும் என்பதால் அவர்கள் படம் எடுக்கக்கூடாது என்று சொல்ல முடியுமா?

பழக்கப்பட்ட சூத்திரங்களிலிருந்து வெளியே வந்து படம் எடுப்பது மனதைச் செழுமையாக்குகிறது. இலக்கியத்தில் இது வெற்றி பெற்றிருக்கிறது. சினிமாவில் முடியாதா என்ன?

(அம்ரனளெயன் / சுபமங்களா, பெப்ரவரி 1994)

மக்களுக்கான படமெடுத்தல், தரமான படமெடுத்தல், மேலாதிக்க கலாச்சாரத்துக்கு மாற்றான படமெடுத்தல் என்பதில் நிறைய பிரச்சினைகள் இருக்கிறது.

I. தரமான படம் மக்களிடம் போய்ச்சேரவில்லை என்பதற்கான காரணங்களுக்காக நிலவிய சினிமா வகையினத்தை நாம் சரியாகப் புரிந்து கொண்டோமா? திரைக்கதை தர்க்கம் சரியாக இருக்கிறதா? கதையில் நம்பகத்தன்மை இருக்கிறதா? தொழில்நுட்ப ரீதியில் பிழை விட்டோமா? என எத்தனையோ காரணங்கள் இருக்கிறது.

II. சில படங்கள் உடனடியாக மக்களை எட்டுவதில் அவர்களது மனத் தயாரிப்பின்மை கல்வி மட்டம் கூடக் காரணமாகிறது. இது ரசனை மாற்றம் மக்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டிய நிபந்தனையைக் கோரி நிற்கிறது.

இத்தகைய பிரச்சினையை உண்மையிலேயே தீவிரமாக சமூகப் பொறுப்புடன் சினிமா எடுப்பவர்கள் சிந்திக்கத்தான் செய்கிறார்கள்.

வியாபாரப் படங்கள், கலைப் படங்கள், இரண்டும் கலந்த கலப்பட நடுத்தரப்படங்கள் பற்றி எனக்கு முழுமையாகப் புரியப்படவில்லை. எனக்குள் விடைதெரியாத கேள்விகள் நிறைய இருக்கின்றன. இப்போது என் முயற்சி தேடல்களை நோக்கித்தான். அந்தத் தேடல்களின் மூலம் கிடைக்கும் சுகமும் எனக்கு மகிழ்ச்சியளிக்கும்படி இருக்கிறது.

(நாஸர்/ பிலிமாலயா/ பெப்ரவரி 1995)

சினிமாத்துறையின் தூய்மையைக் கட்டுப்படுத்துகிற கணிக்காத அதிகாரிகள் .......கருத்தியல் கொண்டவர்கள்தான். பண்டிட்குயின் காமசூத்திரா பம்பாய் போன்றவற்றுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளை இவ்வகையில் குறிப்பிடலாம்.

தயாரிப்பாளர்களின் - விநியோகஸ்தர்களின் நோக்கும், இலாபமும் வியாபாரமும் மட்டும்தான். பெரிய நடிகர்கள் டைரக்டர்கள் படம் விழுந்த போதும் பிரமாண்டப்படங்கள் சரிந்தபோதும் அவர்கள் முன் வைக்கிற கதையுள்ள படங்கள் மேலாதிக்க கருத்துள்ள படங்கள் தான். மாற்றை வைப்பவர்களை விநியோகஸ்தர்களும் பகாசுர நிறுவனங்களும் கட்டுப்படுத்துகிறார்கள்.

சமூகப் பொறுப்புடன் படமெடுப்பவர்களுக்கிடையிலும் நிறைய மயக்கங்கள் இருக்கிறது. சினிமாவை வியாபாரமாகவே இவர்களும் புரிந்திருக்கிறார்கள். படம் வெற்றிபெறவில்லையெனில் சோர்வு கொள்கிறார்கள். ஜனங்களின் கல்வி கலாச்சார மட்டத்தை யோசிப்பதில்லை.

தீவிரக்கலை சினிமாக்காரர்கள் மிகச் சாதாரண தொழில்நுட்ப விசயங்களின் திரைக் கதையமைப்பில் கதை சொல்லுதலில் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. மக்களுக்குப் புரியாமல் எடுப்பதே தீவிர சினிமாவின் தகுதி என்று கருதுகிறார்கள்.

வாழ்க்கையை அவர்களது சூழலே உருவாக்குகிறது என்பது மேலாதிக்க கருத்தியலுக்கு அடிமையாகிப்போன இயக்குநர்கள் / நடிகர்கள் / தயாரிப்பாளர்கள் அனைவருக்கும் பொருந்தும்.

ரசனையை அதிகாரமுள்ளவர்களே உருவாக்குகிறார்கள். மக்கள் தம் வாழ்நிலை அனுபவங்களிலிருந்து அவ்வப்போது அதைப் புறக்கணிக்கவே செய்கிறார்கள். இலாப நோக்கம் கொண்டவர்கள் விழிப்புணர்வை விரும்புவதில்லை. 'ஸீஸன்' படங்களை உருவாக்கித் தள்ளுகிறார்கள். புதிய புதிய போதைகளைக் கொடுக்கிறார்கள். இதற்கெதிரான பிரக்ஞையுள்ள படைப்பாளிகள் மாற்று ரசனையை உருவாக்கும் படைப்பாளிகள் இருக்கவே செய்கிறார்கள்.

மக்களின் விழிப்புணர்வின் மீதும், பொறுப்பு ரீதியில் செயல்படும் மேலாதிக்கத்திற்கெதிரான உள்ளுறையும் விமர்சனத்தின் மீதுமே நம்பிக்கை கொண்டவர்கள். மக்களின் நல் வாழ்வின் மீதும் நமது விடுதலையிலும் நாட்டம் கொண்ட, செயல்படும் அறிவாளிகள் அத்தகைய படைப்பாளிகளை ஆக்க பூர்வமாக அணுக வேண்டும்; உற்சாகமூட்ட வேண்டும்.

மேலாதிக்க ரசனைக்கெதிராக சினிமா பொதுப்புத்தியின் தளத்திலேயே விடுதலை ரசனைக்கான செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டும்.


(முற்றும்)

**யமுனா ராஜேந்திரன்**

## சினிமா

# கனவுத் தொழிற்சாலை: வர்க்கம் - இனம் - சுரண்டல்

அநேகமாக 1987-ம் ஆண்டு முழுக்கத் தமிழ் சினிமா ஆக்கிரமித்திருந்த தமிழ் சினிமா தொழிற்துறை பிரச்சினை முடிந்துவிட்டதாக, மேற்போக்காகத் தோற்றம் தருகிறது. பெப்ஸி அமைப்பு அப்படியே இருக்கிறது, படைப்பாளிகள் - தொழிலாளர்கள் கூட்டமைப்பும் இயங்குகிறது. படைப்பாளிகள்- தொழிலாளர்கள் கூட்டமைப்பு சம்பந்தப்பட்டவர்களின் படங்களின் முதல் 'டைட்டில் கார்டு' அந்த அமைப்பின் இருத்தலை நிலைநாட்டிக்கொள்கிறது. அரசாங்கம் x படமுதலாளிகள் x விநியோகஸ்தர்கள் x நடிகர்கள் x நடிகைகள் x தொழிலாளர்கள் x பார்வையாளர்கள் போன்றவர்களுக்கிடையில் இருந்ததான முரண்பாடுகள் உடன்பாடுகள் இத்தொழிலில் இயங்கும் பல்வேறு ஆளுமைகளுக்கு இடையிலான முரண்பாடுகள் ஆகியிருக்கிறது. கமல்ஹாசன் பாலச்சந்தருக்கு தனிப்பட்ட மனஸ்தாபமாக ஆகியிருக்கிது. கமல்ஹாஸனது தேர்வு பாக்கியராஜுக்கு தனிநபர் சுதந்திரம் பற்றியதாகிறது. பாக்யராஜுன் நடத்தை எஸ்.ஏ. சந்திரசேகரனுக்கு கறுப்பு ஆட்சன் நடத்தையாகிறது. அஜீத்குமாருக்கு தொழிலாளர்களின் பாலான அக்கறையாகிறது, மீனாவுக்கு தன் தொழில் பிரச்சினையாகி



றது. ரம்பா சௌந்தர்யா ஆகியோருக்கு தமிழ்ப்பட மார்க்கெட் சம்பந்தமான பிரச்சினை ஆகிறது.

I. இடதுசாரிகளுக்கு தொழிலாளிகளின் உரிமைப் பிரச்சினையாகத் தோற்றம் தருகிறது.

II. தமிழினக் கண்ணோட்டத்தில் அணுகுகிறவர்களுக்கு படைப்பாளிகள்- தொழிலாளர்கள் கூட்டமைப்பு இனவுணர்வுக்கான அடையாளம் ஆகிறது.

III. தனித்தமிழ் கலைச் சூழல்காரர்களுக்கு இதே கூட்டமைப்பு அன்னியர்களின் ஆதிக்கம் நிறைந்ததாகிறது.

Iv. பெப்ஸிக்காரர்களுக்கு இப் பிரச்சினை முதலாளி x தொழிலாளி பிரச்சினையாகிறது.

v. பாரதிராஜா அமைப்பினருக்கு இப்பிரச்சினை அடாவடிக்காரர்களுக்கு எதிரான படைப்பாளிகள் சுதந்திரம் பற்றிய பிரச்சினையாகிறது.

இப்பிரச்சினை பற்றி பாரதிராஜா நீண்ட நேர்முகங்கள் (இன்டியா டுடே, நந்தன்) கொடுத்திருக்கிறார். கமல்ஹாஸன் காரசாரமான நேர்முகம் (தமிழன் எக்ஸ்பிரஸ்) கொடுத்திருக்கிறார். விஜயன் அநேகமாக எல்லாப் பத்திரிக்கைகளுக்கும் தனது நியாயத்தைச் சொல்லியிருக்கிறார். சு.ப.வீர பாண்டியன் இப் பிரச்சினையில் இருக்கும் இன விழிப்புணர்ச்சியை (நந்தனில்) அடையாளம் கண்டிருக்கிறார். கல்கண்டில் லேனா தமிழ் வாணன் இப்பிரச்சினையின் சாராம்சம் பற்றி ஒரு விரிவான கட்டுரை எழுதியிருக்கிறார்.

**1. சாராம்சமாக இந்தப் பிரச்சினையின் தோற்றம் எங்கிருந்து தொடங்குகிறது?**

**2. எந்தெந்தப் பிரச்சினைகள் இருதரப்பாருக்கும் தீர்க்க முடியாத பிரச்சினைகளாக முன்நின்றன?**

**3. இந்தத் தீர்க்க முடியாத பிரச்சினைகள் எப்போது முதன் முதலாக வெளியுலகு காண வெடித்தன?**

**4. இப்போது தோற்றம் கொண்டிருக்கும் அமைதிக்கும் பின்னால் உள்ள காரணங்கள் எவையெவை?**

**5. இந்தப் பிளவு இப்படியே தொடருமா அல்லது முன்பிருந்த மாதிரி ஒரே கலைக்குடும்பமாக(?) ஆகுமா?**


II முதன் முதலில் பிரச்சினை பாலுமகேந்திராவின் படப்பிடிப்பில் பெப்ஸி தலைவர் விஜயன்பேக் அப் சொன்னதிலிருந்து தொடங்குகிறதாக பத்திரிகைகள் சொல்லுகின்றன. பிற்பாடு அதற்காக பாலுமகேந்திராவிடம் தனிப்பட்ட முறையில் மன்னிப்பும் கேட்டுக்கொண்டார் விஜயன். படைப்பாளி- தொழிலாளி கூட்டமைப்பினர் விஜயனிடம் பகிரங்க மன்னிப்பைக் கோரினர். பெப்சி விஜயன் மறுத்துவிட்டார்.

விஜயன் பாலுமகேந்திராவுக்கு ஏற்படுத்திய பிரச்சினை போன்றதுதான் பாரதிராஜாவுக்கும் நேர்ந்தது. பெப்ஸி சங்கத்தினர், திரைப்படத் தொழிலில் ஈடுபடும் அனைத்தையும் சங்கத்தின் மூலம் கட்டாயமாக ஸ்தாபனமயப்படுத்திவிட்டனர். சமையல்காரர்கள், காமெரா உதவியாளர்கள் ஸ்டன்ட் மாஸ்டர்கள் என்று அனைவரையுமே தம் பெப்ஸி அமைப்புக்குள் கொண்டு வந்து, சினிமாத் தொழிலில்...

**I. அன்றாட நடவடிக்கைகளையும்**

**II. இயக்குநர்களின் தேர்வுகளையும் கூட கட்டுப்படுத்துகிறவர்களாக உருவாகிவிட்டார்கள்.**

பொதுவாக பாலுமகேந்திரா, பாரதிராஜா, பாலச்சந்தர், மகேந்திரன், மணிரத்தினம் போன்றவர்கள் திரைக்கதைக்கான பாத்திரங்களை சித்தரிப்பவர்கள். கதாநாயகனின் சாகசங்களை மையமாகக் கொண்டதல்ல இவர்களது பெரும்பாலான




படங்கள். இவர்களது படங்களுக்குக் கும்பலான அடிதடி ஆட்கள் சண்டைக் காட்சிக்காகத் தேவையில்லை. அதுவும் பாலுமகேந்திரா, பாரதிராஜா போன்றோர்க்கு இவர்கள் அவசியமேயில்லை. புதிய கதைகளையும் கதை சொல்லலையும் தேர்ந்துகொள்கிறபோது கெட்டிதட்டிப்போன சினிமா மரபுகளையோ, தொழில் ரீதியான கட்டமைப்புகளையோ கடைப்பிடிக்கத்தேவையில்லை.

(மிகுதி அடுத்த வாரம்)


இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன்கள் அருணன் ஆனந்தராஜா, அரிச்சந்திரன் திலீபன், லக்சன் சாந்தகுமார், செல்விகள் த.ஜெகதா, மேகலா செல்வராஜா, மிதுலா செல்வராஜா ஆகியோரை, பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

# உங்கள் கைவண்ணம்



**செல்வன் அல்பேட் அலன்**

வயது: 10 (30.05.1987)
இடம்: தமிழாலயம்
Nürnberg, Germany.



1. அன்னம் வெள்ளை நிறம் உடையது.
2. அன்னத்திற்கு கழுத்து நீளமாக இருக்கும்.
3. அன்னம் தண்ணீரில் நீந்தும்.
4. அன்னம் ஒரு பறவை.
5. அன்னம் மீனை இலகுவாக வாயில் கௌவும்.

# கவிதை முற்றம்

## ஒரு கூட்டுப் பறவைகள்




ஒரு கூட்டுப் பறவைபோல
வாழ்ந்திடுவோமே
ஒன்றாய்ச் சேர்ந்து நாங்கள்
விளையாடிடுவோமே

தீயவற்றை ஒதுக்கிவிட்டு
வாழ்ந்திடுவோமே
திருடர்களை வெறுத்துக் காறி
உமிழ்ந்திடுவோமே...

அன்பினாலே நண்பர் தம்மை
அணைத்திடுவோமே....
அடிமை வாழ்வு தன்னை என்றும்
வெறுத்திடுவோமே.....

துன்பம் வந்தால் அதன்முகத்தில்
உதைத்திடுவோமே
துயர வாழ்வு தனிலும் நாங்கள்
சிரித்திருப்போமே!

–செ.யோ.





# குட்டிக்கதை படிப்போம்

## போருக்குப் பின்

என் தந்தை துணிவுமிக்க படை அதிகாரி. புன்னகை தவழும் முகமும் உயர்ந்த தோற்றமும் உடையவர்.

போர் நிகழ்ந்த நாள் ஒன்றின் மாலை நேரத்தில் அவர் தனக்குப் பிடித்த வீரன் ஒருவன் பின்தொடரக் குதிரையில் போர்க்களப் பக்கமாகச் சென்றார்.



இறந்தவரின் உடல்கள் நிறைந்த போர்க்களத்தில் இருள் பரவத் தொடங்கியது.

அங்கே ஒரு மெல்லிய குரல் கேட்டது.

'தண்ணீர்! தண்ணீர்! இரக்கம் காட்டுங்கள்'

பெருமூச்சுடன் கூடிய கட்டைக் குரல் அது.

தோற்றோடிய ஸ்பானிய எதிரிப் படையைச் சேர்ந்த வீரன் ஒருவன், பாதை ஓரத்தில் இரத்தம் ஒழுக நகர்ந்து சென்று கொண்டிருந்தான்.

மனம் இளகிய என் தந்தை தன் இடுப்பில் தொங்கிய பழச் சாற்றுக் குடுவையை எடுத்தார். தன்னுடன் வந்த வீரனிடம் நீட்டினார்.

'இந்தா! இதை அடிபட்ட அவனுக்குக் கொடு' என்றார். வீரன் அதை எடுத்துப் போய் அடிபட்டவனிடம் கொடுக்கக் குனிந்தான்.

ஆனால் அவனோ, தன் கையிலிருந்த கைத்துப்பாக்கியால் என் தந்தையின் நெற்றிக்குக் குறிவைத்துச் சுட்டான்.

திடீரெனக் குதிரை பின் வாங்கியது. குறிதவறி என் தந்தையின் தொப்பியில் பட்டது.


தொப்பி கீழே விழுந்தது.

'பரவாயில்லை! நீ அவனுக்குக் குடிக்கக் கொடு' என்றார் என் தந்தை.

*– பிரெஞ்சு எழுத்தாளர் விக்டோர் ஹூகோ*

# உங்களுக்குத் தெரியுமா?

## கடல் அனிமோன்



இந்த விசித்திரமான உயிரினம் என்னவென்று உங்களுக்குத் தெரிகிறதா? இது தான் கடல் அனிமோன்.

இதன் உடல் மென்மையானது. வாய் ஒரு பையைப் போன்றது. வாயைச் சுற்றிலும் உணர்ச்சி உறுப்புகள் உள்ளன. சிறு மீன்கள், பூச்சிகளைப் பிடித்து வாய்க்குள் போட்டுவிடும். எதிரிகளால் ஆபத்து என்று தெரிந்தால் இது தன் உறுப்புகளை மடித்துக் கொண்டு தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும்.

# சினிமா முற்றம்

## 'ரிட்டானிக்'

பிள்ளைகளே! உலகத்திலேயே நடைபெற்ற மிகப் பெரிய கப்பல் விபத்து எது என்பது உங்களுக்குத் தெரியுமா? 1912-ம் ஆண்டு ஏப்ரல் 14-ம் திகதி வட அத்திலாந்திக் கடலிலே ரிட்டானிக் என்ற பிரமாண்டமான பிரயாணிகள் கப்பல் பனிப் பாறையுடன் மோதியது. அந்த வேளையில் அந்தக் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்த 2200 பேரில் 705 பேர் மாத்திரமே காப்பாற்றப்பட மிகுதி அனைவரும் கடலில் மூழ்கி பரிதாபகரமாக உயிர் இழந்தார்கள். நாங்கள் சாகப் போகிறோம் என்று தெரிந்து கொண்டே மெல்ல மெல்ல மூழ்கிக் கொண்டிருந்த கப்பலில் மெல்ல மெல்லச் சாவை அரவணைத்துக் கொண்டார்கள் பிரயாணிகள்.



ஓ! இந்த கப்பல் விபத்துச் சோகத்தை நேரில் பார்த்தால் எப்படி இருக்கும் உங்களுக்கு? ஆம்; தற்போது ஐரோப்பிய திரை அரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் Titanic (ரிட்டானிக்) என்ற படத்தை நீங்கள் பார்த்தீர்களானால் அந்தத் துயரச் சம்பவத்தை நேரில் பார்த்த அனுபவத்தைப் பெற்றுவிடுவீர்கள்!




# ஈழத்துப் பெண்களும் மேற்குலகப் பெண்களும்

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி நிலையையும் அதன் முதிர்ச்சி நிலையையும் அங்கு வாழும் பெண்களின் வாழ்க்கை நிலைமைகளைக்கொண்டு கணக்கிடலாம். ஏனெனில் உலகின் மொத்தச் சனத்தொகையில் அரைவாசிப் பகுதியினர் பெண்களே. ஆனால் உலகின் மொத்த உழைப்பு நேரத்திலோ 2/3 பகுதியைச் செய்து முடிப்பவர்கள் பெண்களாகவிருக்கும் போது அதற்கு ஊதியமாகப் பெறுவது உலக மொத்த வருமானத்தின் 10 வீதப் பங்கும், 1 வீதத்திற்கும் குறைவான சொத்துடைமையுமாகும்.

இதைப் பார்க்கையில், வருடத்திற்கு ஒருமுறை மார்ச் 8 வந்தால் போதாது. நாள்தோறுமே பெண் எழுச்சிநாளாக மாற வேண்டிய தேவை எமக்கிருப்பதாகத் தோன்றுகிறது. இதில் ஈழத்துப் பெண்களை நோக்குமிடத்து யுத்தம் காரணமாக ஏற்படும் அழிவைவிட, பெண்கள் என்ற காரணத்தால் இன்னும் இரட்டிப்புத் துன்பத்தை அனுபவிக்கின்றனர். சீதனக் கொடுமையும், போதிய தொழிலின்றி பொருளாதார ரீதியில் பின்தள்ளப்படுதலும் அல்லது யாரிலும் தங்கிநிற்க வேண்டிய அவசியமும் தோன்றுகிறது. இதைவிட சமுதாயத்தின் மூடக்கொள்கைகளுக்கு ஆளாகுவதால் அதிகளவு வேலைப்பளுவையும் மனத்துயரங்களையும் தம்மகத்தே கொண்டிருந்தனர். ஆனால் தற்போது இந்நிலை சற்று மாறிவருகிறது. காரணம், போராட்டம் என்ற புதுவரவால் ஏவப்பட்ட யுவதிகள் தம்மைப் போராட்டத்தில் இணைத்தமையும், அதே நேரம் இப் பெண்களை வழிநடாத்தும் தலைமை, ஒரு நாட்டிற்குப் பெண்களின் வளர்ச்சியும், அறிவாற்றலும் எவ்வளவு முக்கியம் எனக் கருதுகிறமையுமாகும். இதனால் இன்று ஈழப் பெண்களின் வாழ்க்கைப்பாதை ஓர் இலட்சிய வடிவிற்கு வந்து கொண்டிருக்கின்றது என்றே கூறலாம்.

ஆனாலும் இது ஓர் நீண்ட பயணத்தின் ஆரம்பமே. இதைச் சரிவரக் கையாள வேண்டிய பாரிய பொறுப்பு இனி எம் பெண்களிடமே உள்ளது. இதை அடுத்து மேற்குலகப் பெண்களை நோக்குமிடத்து இங்கேயும் பல பாலியல் ரீதியில் துன்புறுத்தல்களாலும் வன்செயல்களாலும் அரசியல் மற்றும் உயர் தொழில்களைப் பெறவேண்டி அவர்கள் போராட்டங்கள் நடத்துகின்றனர். இருப்பினும் இங்கு பொருளாதார ரீதியில் பெண் சற்றுச் சுதந்திரமாகவே காணப்படுகின்றாள். இதனால் மற்றோரில் தங்கிநிற்கவும், சில சமுதாயக் கட்டுப்பாடுகளை எதிர்க்கவும் அவளுக்கு 'இலகுவாக' உள்ளது. ஆனால் இவர்களின் இந்நிலைப்பாடு எம்மைப்போல் ஒரு இலட்சிய வடிவம் பெறுமா என்பது ஒரு கேள்விக்குறியே.



# யுனிசெவ் அறிக்கை தரும் பெண்கள் நிலை

யுனிசெவ்வின் அண்மித்த அறிக்கையில் இந்தியாவின் மக்கள் தொகையில் 40 மில்லியன் பெண் குழந்தைகளையும், பெண்களையும் காணவில்லையாம். இவர்கள் கருவிலோ அன்றிப் பிறந்த பிற்பாடோ இல்லை, சீதனம் காரணமாகவோ கொல்லப்பட்டுள்ளார்கள். இப்படி அழிக்கப்பட்ட உயிர்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையைக் காட்டிலும் 3 மடங்கு அதிகமாகும்.

பொதுவாக இயற்கையின் சனத்தொகைப் பரம்பல் 100 ஆண்களுக்கு 105 பெண்கள் வீதமாக உள்ளது. ஆனால் இந்தியாவில் 100 ஆண்களுக்கு 93 பெண்கள் வீதமே உள்ளனர். அண்மையில் இந்திய அரசாங்கம் பெண் குழந்தை பெறுவோருக்கு பல சலுகைகள் வழங்கியும் பெரிதாக ஏதும் பயனளிக்கவில்லை. ஏனெனில் பெண்கள் என்றால் மனிதர்கள் இல்லையே என்பது போல் தாழ்வான ஓர் அபிப்பிராயம் எல்லோரிடத்திலும் உள்வாங்கப்பட்டுவிட்டது.



ஆண்டுகள் கணக்காய் பல
மார்ச் 8 வந்தென்ன?
அம்மாவின் கருவிலேயே என்
விழியில் மரண பயம்.
என்றுதான் நாங்கள் நிஜமோ?

> ஆணும் பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர் ஒருவரின் சுதந்திரத்தையும் - சமத்துவத்தையும் - கௌரவத்தையும் மதித்து, குடும்ப வாழ்வின் பொறுப்புக்களைப் பகிர்ந்து, சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்து பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக்கொண்டு வாழ்ந்தால், இந்தப் பால் வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும்.
>
> - தலைவர் வே.பிரபாகரன்

# பெயர் சொல்லலாமா? கணவர் பெயர் சொல்லலாமா?

பொதுவாக எம் சமுதாயத்தில் பெண்கள் கணவர் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவதில்லை. இது உண்மையில் தேவையான அவசியமான ஒரு முறைமையா? என்பது இன்றுள்ள இளைய தமிழ்ப் பெண் சமுதாயத்தின் கேள்வி. ஏனெனில் இன்று புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலேயுள்ள வேற்று நாட்டுப் பெண்கள் தம் பழக்கங்களின்படி கணவனைப் பெயர் சொல்லியே அழைக்கிறார்கள். ஏன் அவ்வாறே நாமும் அழைத்தால் என்ன தவறென்பது பலரது அபிப்பிராயம்.

இன்று எம்மவர்களில் இளைய பெண்களில் அனேகமான பலர் கணவனைப் பெயர் சொல்லியே கூப்பிடுகிறார்கள். ஆனால் பழைய தலைமுறைப் பெண்களோ இதை ஒரு பாரிய குற்றமாகக் கருதி, 'கணவரின் பெயரை வாயால் சொல்கிறாளே; இவள் என்ன பெண்?' எனத் தரக்குறைவாக இளைய தரவர்க்கப் பெண்களை நோக்குகிறார்கள். இது சரியா பிழையா என்பதற்குத் தமிழிலக்கிய சமூகவியல் நூல்களை நோக்குமிடத்துச் சில சான்றுகள் கிடைக்கின்றன. அதாவது ஆதியில் ஆண் பெண் ஆகிய இருவரிடத்தேயும் ஒரு வரன்முறையற்ற உறவு முறையே இருந்துள்ளது. இதுதான் உன் கணவன்; இதுதான் உன் மனைவி என்கிறவரையறை இருக்கவில்லை. சிறிது காலத்தின் பின் ஒரு ஆடவர் குழு இன்னொரு மங்கையர் குழுவை மணந்து வாழும் முறைமை பிறந்தது. இதைத்தான் குழு மணமுறை என்கிறார்கள். இம்முறை தமிழர்களிடையே இருந்ததற்கான சான்றுகள் சரிவர இல்லை. ஆனால் திராவிடப் பழங்குடி மக்களிடத்தே இந்த மணமுறை இருந்துள்ளது. இதன் படியும் ஒரு ஆணும், பெண்ணும் தனிப்பட்ட ரீதியாக ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு செலுத்துவதோ அன்றி எனக்கே சொந்தம் என்று ஒருவரை உரிமையுடன் பெயர் சொல்லி அழைப்பதோ தடைசெய்யப்பட்டிருந்தது. சிறிது காலங்களின் பின் மக்களிடையே சமுதாய நாகரிக வளர்ச்சியில் ஏகப்பட்ட மாற்றங்கள் உருவாகின. ஆனால் இவ் வளர்ச்சியில் வேதனைக்குரிய விடயமாக ஆண்களுக்குப் போதிய சுதந்திரமும், பெண்களுக்கு எவ்வளவு தூரம் உயர்ந்தாலும் சில பழைய தலைமுறைப் பழக்கவழக்கங்களைப் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயமும் திணிக்கப்பட்டது. இதன் ஒரு அம்சம்தான், பெண்கள் இன்றும் தம் கணவரைப் பெயர்சொல்லி அழைப்பதை மறுதலிக்கும் தடையாக உள்ளது.

ஆனால் இவ்விடத்தே பொதுவாகக் குடும்பம் என்பதை நோக்குமிடத்து இது கணவன் மனைவி இரண்டுபேருக்கும் இடையேயான மனமொத்த ரீதியான ஓர் உறவுப் பாலம்தான். இதில் நான்தான் பெரிதென்று யாரும் உரிமை கூறமுடியாது. அப்படியிருக்கும்போது மனைவி கணவனைப் பெயர்சொல்லி அழைப்பது என்பதில் பிழைக்கு இடமேயில்லை.

# அனைத்துலகப் பெண்கள் நாளும் அதில் நாம் ஆற்றவேண்டிய கடமைகளும்

உலகத்தில் எந்த மூலைகளில் பார்த்தாலும் ஏதோ ஒரு வழியில் பெண் அடிமைப்படுத்தப்பட்டே வருகிறாள். இது நேற்று மட்டுமல்ல, இன்றுவரையல்ல, நாளைக்கும் தொடரப்போகும் ஓர் தொடரான அடிமைச் சங்கிலி. இதை ஒழிக்க உலகத்துப் பெண்களையெல்லாம் ஒன்றாக அணிதிரள வைக்கும் இந்த மார்ச் 8 எப்படிப் பிறந்தது? 1857 மார்ச் 8 இல் நியூயோர்க்கில் உள்ள நெசவுப் பெண் தொழிலாளர்கள் தொழிற்சங்க ரீதியாக முதன்முதலாக பெரும் அணியாகத் திரண்டு பெரும் போராட்டத்தை நடத்தினார்கள்.

அந்த நாளே இன்று எல்லோராலும் பெண்ணெழுச்சி நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இன்று ஏராளமான சட்டங்களும் பெண் உரிமைகள் பற்றி ஆதரவுதரும் அமைப்புக்களும் காணப்பட்டாலும் இவை வெறும் 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்ற நிலைதான். ஆகவே பெண்களாகிய நாம் முழுமையாக எம் விடுதலையை வென்றெடுக்க முதலில் அவசியமானது, மதம், மரபு, சாத்திரம் சடங்கு என்ற பழைமைவாதிகளின் பிடியைப் புத்திசாலித்தனமாகத் தளர்த்தலும், பெண்களாகிய நாமே பெண் விடுதலையை இழிவு படுத்தும் சில அறியாமைகளைக் களைதலுமாகும்.

# நானும் எனது பேனாவும்

நான் எழுதும் என் பேனா
எனை முகம் பார்த்துக் கேட்கிறது!
எங்கே – எத்தனை கவிதையைத்தான்
பெண்ணுரிமை
எனும் பேரில் வாரியிங்கு... கொட்டிவிட்டோம்
அத்தனை கேள்விக்கும் பதில் ஏதும்
உண்டாவென்று!
உண்மைதான் – ஆதரவாய் அதன் கரம்பற்றி
அருகினிலே நான் அமரும்போது
ஏனோ என் விழிகளில் நீரினது படலங்கள்
எத்தனை வருடங்கள் எவ்வளவு
பெண்குரல்கள்
எம் உரிமைகளைக் கேட்டு
ஓங்கியொலித்தென்ன
இப்பவும் எம் உரிமைகள் ஓர்சிலவீதம்தானே
இன்னும் எத்தனை காலம்தான் எங்களது
உரிமைகளை
எட்டாப் பழமாக எம் கண்முன்னே
மறுப்பாரோ?

## வீடு

**கதை: 13**

# சற்றே தள்ளியிரும் பிள்ளாய்

தில்லையில் ஆடும் சிதம்பர நடராசனைக் கண்டு தரிசிக்க வேண்டும்.

வாழ்க்கையில் ஒரு தடவையாவது ஒற்றைக் காலைத் தூக்கி' ஆனந்த நர்த்தனமிடும் தில்லை நடராசனைத் தரிசித்துவிட வேண்டும்.

நாளுக்கு நாள் நந்தனிடம் ஆவல் மிகுந்தது. ஆர்வம் பெருகியது. பக்திச் சிரத்தை மெல்ல மெல்ல வளர்ந்து ஒரு வெறியாகவே பரிணமித்து விட்டது. இனியும் அடக்க முடியாது என்ற நிலையில் பக்திப் பிரவாகத்தினால் உந்தப்பட்டவனாக நந்தன் ஆண்டையிடம் சென்றான். தில்லைக்குச் சென்று நடராச தரிசனம் பெறும் ஆவலை வெளியிட்டான்.

அவனை ஒரு விதமாகப் பார்த்த ஆண்டை, 'உனக்கும் இந்த ஆசை வரலாமோ? இது தகுமோ? இது முறையோ?' என்று வானத்திற்கும் பூமிக்குமாகத் துள்ளிக்குதித்தார். இது உனக்கு மட்டுமல்ல, உன்போன்றவர்களுக்கே வரக்கூடாத ஆசை என்று முழக்கினார்.

நந்தனிடம் குடிகொண்டிருந்த பக்தி என்ன இலேசானதா? ஆண்டை சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டுபோய்விடுவதற்கு. வாதாடினான். ஆண்டையோடு போராடினான். நான் சிதம்பர தரிசனம் காணச் சென்றே தீருவது என்று சூள் கொட்டினான். ஆண்டை சற்று இறங்கி வந்தார்.

'சிதம்பரம் தானே செல்ல வேண்டும்! அனுமதி தருகிறேன்.ஆனால் அதற்கு முன்பாக என் விளை நிலம் அனைத்தும் சாகுபடி செய்து நெல் அனைத்தையும் மூடைகளாக்கி என் வீட்டில் கொண்டு வந்து அடுக்க வேண்டும். அதற்குப் பின்பாக நீ சிதம்பரம் செல்லலாம்.'

ஆண்டையின் கூற்று நந்தனுக்கு ஒருவித திருப்தி தந்தது.

'நாளை சிதம்பரம் போவேன் நானே' என்று ஆனந்தக் கூத்தாடியபடி வீடு வந்து சேர்ந்தான்.

★ ★ ★

சூரியன் உச்சிப் பொழுதை எட்டிக்கொண்டிருக்கும் சமயம். பச்சைப் பசேலென செழித்து வளர்ந்திருந்த நெற் பயிர்களுக்கு களைக்கொல்லி மருந்து தெளித்துக்கொண்டிருந்தான் கோபாலன். இந்தப் பயிர் அறுவடை முடியும்போது தனக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் பற்றி எண்ணி, அவன் மனம் கும்மாளமிட்டது. இப்பொழுது குடலைப் பருவத்தை எட்டி நிற்கும் இந்த நெற் பயிர்கள் இன்னும் சில நாட்களில் கதிர் தள்ளும். அதன் பிறகு பூத்துக் காய்த்து நெல்மணியாகும். இம்முறை மழை நன்குள்ளதால் குளத்தில் நீர் முட்டி நிற்கிறது. ஆதலால் தண்ணீர்ப் பஞ்சம் வந்து பயிர் சாவியடித்துப் போகும் வாய்ப்பு இல்லை என்றவாறான கற்பனைகளில் மனது மிதக்க, மருந்து தெளிக்கும் 'பம்பி' யின் கைப்பிடியை மேலும் கீழும் அசைத்து மருந்து தெளித்துக்கொண்டிருந்த கோபாலன், யதேச்சையாக வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். 'ஹெலிகொப்டர்' ஒன்று செட்டைகள் 'படபட'க்க மிக உயரத்தில் பறந்துகொண்டிருந்தது. மனம் ஒரு கணம் திக்கென்றது. அப்படியே வைத்த கண் வாங்காமல் விறைத்தபடி நின்றான். சடசடத்துத் திரும்பிய அந்தக் 'ஹெலிக்கொப்டர் தொடர்ச்சியாகச் சில நிமிடப் பொழுதுகள் வேட்டுக்களைத் தீர்க்கும் சப்தம் கோபாலனுக்கும் தெளிவாகக் கேட்டது. மீண்டும் ஒரு வட்டம் அடித்துவிட்டு அது செல்லும் திக்கையே, வெறித்தபடி பார்த்தான். 'நாசமறுவான், சுட்டுப்போட்டுப் போறான்' 'ஆராருக்கு என்னென்ன பாடோ' உதடுகள் முணுமுணுக்க தன் வேலையில் மீண்டும் கவனமானான்.

சுமார் அரை மணி நேரம் கழிந்திருக்கக்கூடும் 'பம்' வெறுமையாகிவிட்டது. அடுத்த தடவை மருந்து கரைக்கவென்று வாய்க்கால் கரையை நோக்கி நடந்தபோது, தூரத்தில் வயல் வரம்புகளுக்கூடாக ஒரு மனித உருவம் ஓட்டமும் நடையுமாக வருவதை அவதானித்தான். நிதானித்துப் பார்த்தான். ஆளை மட்டுக்கட்ட முடியவில்லை. அவன் தன் வேலையை முடித்துவிட வேண்டும் என்ற ஆவலில் அதில் மூழ்கினான்.


வாய்க்காலில் ஓடி வரும் நீரை அள்ளிப் 'பம்பி'யினுள் ஊற்றி களைக்கொல்லி மருந்தையும் கலந்து விட்டான்.

தோளில் கொழுவும் வாரை இருக்கைகளினுள்ளும் கோர்த்தபடி, முதுகை வளைத்து பம்பை முதுகில் சாய்த்து ஒரிரு தடவை கைப்பிடியையும் அசைத்துப் பார்த்துவிட்டு, மீண்டும் வயலினுள் இறங்கினான். கைப்பிடியை மேலும் கீழும் அசைத்து மருந்து தெளிப்பது மும்முரமாகிக் கொண்டிருந்த வேளையில், 'அண்ணை, அண்ணை அவசர அலுவல்' குரல் கேட்டதும் திரும்பினான். ஆறுமுகம் அரக்கப்பரக்க விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்தான்.

கோபாலன் வரம்புக்குத் தாவி ஏறினான். 'என்னடாப்பா என்ன பிரச்சினை?'

'அண்ணை இப்ப கெலி சுட்டதிலை உன்ரை மூத்தவனுக்குக் காலில் பெரிய காயம்... அக்கராயன் குளம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகினம்' ஆறுமுகம் பெரிய குரலெடுத்துக் கூறினான்.

பம்ப் போனதிசை கோபாலனுக்குத் தெரியவில்லை. ஓட்டமாய் ஓடிச் சென்றான். வயலுக்கப்பால் வேலி ஓரமாக பாலை மர நிழல் ஒன்றில் சாத்தப்பட்டிருந்த சைக்கிளில் தாவி ஏறினான். ஸ்கந்தபுரத்திலிருந்து அக்கராயன் குளம்வரை செல்லும் தார்ச்சாலைக்கு மின்னல் வேகத்தில் வந்து சேர்ந்தான். அக்கராயன் குளம் ஆஸ்பத்திரிக்குச் சில நிமிடங்களிலேயே



அவன் வந்து சேர்ந்துவிட்டான். ஆனாலும் அதற்கும் முன்பாகவே காயப்பட்டவர்களை ஏற்றிவந்த 'பிக்கப்' வாகனம் கிளிநொச்சி சென்றுவிட்டதாக தகவல் சொன்னார்கள். அதிலும் 'வீட்டில் நின்று விளையாடிக்கொண்டிருந்த 14 வயதுச் சிறுவன் ஒருவனுக்குப் பலத்த காயம். அவனை யாழ்ப்பாணம்தான் கொண்டுபோக வேண்டும் போல' அங்கிருந்த தாதி ஒருத்தி கூறினாள். கோபாலனுக்குத் தலை கிறுகிறுத்தது.

'அந்தப் பின்னையின்ரை பேர் என்ன என்று தெரியுமோ?' உதடுகள் உலர, வார்த்தைகள் வரவிட்டுபோய்வந்தன.

அதனிடையில் 'ஐயோ அண்ணை உன்ரை பெடியனுக்குத்தான் பெரிய காயம். அவனையல்லோ கிளிநொச்சிக்கு கொண்டுபோட்டினம்.' என்று கதறிக்கொண்டு வைத்தியசாலை வராந்தாவில் ஓடிவந்தாள் தங்கம்மா. அவளும் ஸ்கந்தபுரம் வாசி. அவளுக்கும் கையில் பெரிய பந்தம்போல் கட்டுப்போட்டு இருந்தது. மெதுவாய் இரத்தம் கசிந்து கொண்டிருந்ததை அவதானிக்கமுடிந்தது.

★ ★ ★

அதிகாலை வேளை ஆண்டையின் வீட்டு வாசலில் நெல் மூடைகள் குவிந்து கிடந்தன. திடுக்கிட்டு எழுந்த ஆண்டை என்ன விடயம் என்று விசாரித்தார். அவரது வயலில் அறுவடை முடிந்துவிட்டதாகவும், அங்கிருந்துதான் நெல்மூடைகள் கொண்டுவந்து குவிக்கப்பட்டிருப்பதாகவும் வேலையாட்கள் சொன்னார்கள்.

அது எப்படிச் சாத்தியமாயிற்று? நேற்று வரையில் பச்சையாகக் கிடந்த நெற்பயிர்கள் ஓரிரவில் விளைந்தது எப்படி? அறுவடை முடிந்து சூடு அடித்து நெல் மூடைகளாக்கி விடிவதற்கிடையில் இங்கு கொண்டு வந்துசேர்க்க எப்படி முடிந்தது? ஆண்டிக்குத் தலை சுற்றியது. மீண்டும் இந்தக் கேள்விகளே அவர் மனத்திரையில் எழும்பி அலைக்கழித்தது.

'உடனே நந்தனைக் கூட்டிவா.' ஆணை பிறப்பித்தார் ஆண்டை. சற்று நேரத்திற்கெல்லாம் நந்தன் ஆண்டை வீட்டு வாசலில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். செய்தி அறிந்து வாசல் வரை வந்த ஆண்டைக்கு நந்தனின் முகத்தை ஏறெடுத்துப் பார்க்க இயலவில்லை. அவனது கண்களிலிருந்து ஒருவித அருளொளி பரவி ஆண்டையின் கண்களைக் கூசச் செய்தது.

'என்ன நந்தன் இதெல்லாம்?'

'என்ன ஆண்டே? எதனைக் கேட்கிறீர்கள்?'

'நேற்றுவரை பச்சையாகக் கிடந்த வயல் திடீரென அறுவடையானதும் திடீரென நெல் மூடைகளாய் வந்து குவிந்து கிடப்பதும் இது என்ன செயல்?' ஆண்டை கோபத்தைக் கொப்பளித்தார்.

'யான் ஏதும் அறியேன்? என் செயல் ஏதும் இல்லை?' தோளில் போட்டிருந்த துண்டும் கக்கத்திற்கு மாறிவிட நந்தன் பணிந்தான்.

ஆண்டைக்கு ஆண்டவனின் திருவிளையாடல் புரிந்தது. 'நந்தா, நீ இப்போதே சிதம்பரத்திற்குப் புறப்படு' எனப் பதிலளித்தார்.

நந்தன் பக்திப் பிரவாகத்தால் ஆனந்தக் கூத்தாடினான்.

'சிதம்பரம் செல்வவேன் நான். இடமெல்லாம் போற்றும் சிதம்பரத் தரிசனம் கண்டுவிடமுடியுமா? நந்தன் சிதம்பர வாயிலில் நின்றான். முன்னே போகத் தயங்கியபடி ஒற்றைக் காலைத்தூக்கியாடும் 'நடராச முகூர்த்தம்' கண்டுவிடுவதைத் தடுக்கும் வகையில் நந்திதேவர் குந்தியிருந்தார்.

ஆண்டவன் வரம் கிடைத்தாலும் பூசாரி கிருபை கிடைக்கவில்லையே என, நந்தன் கவலைப்பட்டுக்கொண்டான்.

★ ★ ★

சாரமும், சேட்டுமாக வேர்த்து விறுவிறுக்க கோபாலன் ஆரியகுளம் சந்தியையும் கடந்து ஸ்ரான்லி றோட்டில் வேகமாக சைக்கிளில் வந்துகொண்டிருந்தான்.

இதோ யாழ்ப்பாணம் வந்துவிட்டேன். இன்னும் சில கணப் பொழுதுகளில் என் மகனைக் காண்பேன் என்ற ஆசையினால் உந்துதல் பெற்று, புது உற்சாகம் கோபாலனுக்குப் பிறந்தது. 'எங்கை காயமோ? எப்படிப்பட்ட காயமாக இருக்குமோ? ஏதும் எலும்புகளில் முறிவு பட்டிருக்குமோ? இல்லாவிட்டால் கிளிநொச்சியில் இருந்து அவசரமாக யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருப்பினமோ? பெரிய காயம்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். பாவம், எப்படித் தாங்கிக்கொள்வானோ, அவனுக்கு இப்ப என்ன தேவைப்படும்? என்ன வாங்கிக்கொண்டு போகலாம்? எதுக்கும் முதலில் அவனைப் போய்ப்பார்த்து எப்படியிருக்கிறான். என்பதைக் கண்டறிந்தபின்பு, தேவையானதை வாங்கலாம் என்று பலவாறான எண்ணங்களில் மூழ்கிப்போய் இருந்தவன், தான் போகும் பாதை சரியானதா? என ஒரு கணம் சஞ்சலப்பட்டான். கட்டடக்காடுகளில் நிறைந்து கிடக்கும் யாழ்ப்பாண நகரத்திலே அவன் இப்போதுதான் முதல்முதலாக வருகின்றான் என்பதும் அவனது சஞ்சலத்திற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும்?

'அண்ணை ஆஸ்பத்திரிக்கு எந்தப் பக்கம் போகவேண்டும்?' என்றான் அருகில் வந்துகொண்டிருந்த இன்னும் ஒருவரும். இவனைத் திரும்பி ஒருவிதமாய்ப் பார்த்த பார்வையில் கோபாலன் கூசிப்போனான்.

'இதாலை திரும்பிப் போங்கோ' என அவர் பதில் அளிக்கவும், கோபாலன் இடப்பக்கம் சைக்கிலை வெட்டித் திருப்பினான்.

விக்டோரியா றோட் சந்திக்கும் சமீபமாக வந்தபோது, மீண்டும் சந்தேகம். அருகில் நின்றவரிடம் விசாரித்தான்.

'ஆஸ்பத்திரிக்கு எந்தப் பக்கம் போகவேண்டும்?'

'இதுதான் ஆஸ்பத்திரி' உயர மதில் கட்டி உள்ளே நிற்கும் கட்டடங்களைச் சுட்டிக்காட்டினார் அவர்.

'உள்ளே போகும் வாசல் எங்கே?' அவன் அடுத்த கேள்விக்குத் தாவினான்.

'அதோ!' என்று கை நீட்டிக்காட்டி விட்டு அவர் அப்பால் நகர்ந்துவிட்டார்.

கோபாலன் சைக்கிளை மடக்கித் திருப்பி விக்டோரியா வீதியில் பக்கமிருக்கும் ஆஸ்பத்திரி வாசலை அண்மித்தான்.

சைக்கிளை உள்ளேவிட எத்தனித்தபோதுதான், எங்கிருந்தோ தேவதூதர்கள் போல வெள்ளாடை உடுத்த இருவர் ஓடி வந்து 'அண்ணை எங்கே போகின்றீர்கள்?'

தம்பி என்ரை பிள்ளை ஹெலி சுடேக்கை வெடிபட்டு இங்கே கொண்டு வந்தவை... பார்க்க' இளைப்பு மேலிட வார்த்தைகள் துண்டு துண்டாய் வெளிப்பட்டன அவனிடமிருந்து.

'இதாலை போகேலாது அப்படியே போய் முன்பக்கத்திலை ஓ.பி.டி வாசலால் வாருங்கோ'

கிட்டத்தட்ட அழுகையே வந்துவிடும் நிலையில், 'அது எங்கே தம்பி இருக்கு' கோபாலன் விம்மலுக்கிடையே கேட்டான்.

'இப்படியே போய்ச் சுற்றிக்கொண்டு வந்தால் முன் பக்கத்தாலை வரலாம், போங்கோ.' இதனிடையில் ஒரு வேட்டிக்காரன் கோபாலனை விலத்திக்கொண்டு உள்ளே போனார்.

'தம்பி அவர் போறார் தானே! நானும்...' மெல்ல இழுத்தான்.

'அவர் இங்கை வேலை செய்கின்றவர். நீரும் அப்படியே? உங்களோடை நின்று கதைக்க நேரம் இல்லை வெளியிலை போம்.'

'தம்பி நான் கிளிநொச்சியில் இருந்து வாறன். விளக்கம் தெரியவில்லை கோபிக்காதையும்.'

'அதெல்லாத்தையும் முன்னுக்குப் போய்க் கேளும்' என உரத்துச் சத்தமிட்ட வெள்ளைக் காற்சட்டைக்குத் துணையாக இன்னும் ஒரு காக்கிக் காற்சட்டையும் சேர்ந்துகொள்ள, கோபாலன் கதவுக்கு வெளியே தள்ளப்பட்டான். இரும்புக் கதவு இழுத்துச் சாத்தப்பட்டது.

செய்வதறியாமல் திகைத்து வெளியே நின்ற கோபாலன், ஏதோ ஒரு வழியில் ஓ.பி.டி வாசலைக்கண்டு பிடித்து முன்பக்கத்திற்கு வந்து சேரும்மட்டும் பொழுது காத்து நிற்கவில்லை. மெல்ல இருள் படரத் தொடங்கிவிட்ட வேளையில், 'இப்ப நேரம் போட்டுது. இனி நாளை காலையில்தான் உள்ளுக்கை விடுவினம்' என்பதே கோபாலனுக்குப் பதிலாக கிடைத்தது.

★ ★ ★

நந்தனின் குமுறல் அதிகமாகியது. ஆண்டையிடம் அனுமதி பெற்றது முதல் சிதம்பரம் வந்து சேர்ந்தது வரை பட்ட கஸ்டங்கள் ஒவ்வொன்றும் நினைவுக்கு வர, தில்லை நடராசனின் ஆனந்தத் தாண்டவத்தை முழுமையாகத் தரிசிக்க முடியாமல் 'சீ... இந்த நந்தி ஏன் குறுக்கே நிற்கிறது?

இந்த நந்தி மட்டும் இல்லாது இருந்தால் ஒற்றைக் காலைத் தூக்கி ஆடும் தில்லை நடராசனை இரு கண்களாலும் ஆரத்தழுவலாமே!' மனத்திரையில் எண்ணங்கள் மேலோங்கியது. எங்கிருந்தோ ஒரு குரல் 'சற்றே தள்ளியிரும் பிள்ளாய்' என ஒலித்தது. அக்குரலின் சத்தம் அந்த மண்டபம் முழுதும் எதிரொலித்தது. நந்தி தேவர் விலகிக்கொள்ள நந்தனின் கண்கள் ஆனந்தத்தாண்டவத்தில் ஒன்றிப்போய் இருந்தன. மெய்மறந்த நிலையில் நந்தன் நின்றுகொண்டிருந்தான். கோபாலனும் கிட்டத்தட்ட அதே நிலையில்தான், ஆனால் 'சற்றே தள்ளியிரும் பிள்ளாய்' என்ற குரல் மட்டும் எங்கிருந்தும் கேட்கவில்லை!

## சாளரம்

'காலத்தின் மூச்சாக வாழ் வியக்கம் அசைகிறது. அந்தக் காலத்தையும், அந்தக் காலமாக விரியும் வாழ்வையும், அந்த வாழ்வாக அவிழும் மனித இன்னல்களையும், விளைச்சல்களையும் நுட்பமாகச் சித்தரிக்கும் கலை, இலக்கியங்கள் உன்னதமானவை'.

ஆம், உண்மை. இது யாரால், யாருக்கு, எப்போது கூறப்பட்டது. 'நினைவழியா நாட்கள்' எனும் 'புதுவை இரத்தினதுரை' எழுதிய கவிதை நூலுக்கு தேசியத் தலைவர் 'வே.பிரபாகரன்' அவர்கள் 05.08.1993-ல் எழுதிய வாழ்த்துரையின் முதல்உரை.

புதுவை இரத்தினதுரை தமிழீழ மண்ணைக் காதலிப்பவர். சிங்கள இராணுவத்தினாலும், இந்திய இராணுவத்தினாலும் பல துன்பங்களை அனுபவித்தவர். இருப்பினும் தேசியத் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலின் கீழ் நிற்கும் பல்லாயிரக்கணக்கானவரில் தானும் ஒருவன் என மார் தட்டி நிற்கும் ஓர் மாபெரும் கவிஞன்.

# நினைவழியா நாட்களும் புதுவையும்

'மண்ணைத் தொட்டும் தொடாமலும்,
சிறகை விரித்து உயரப்பறக்கும்
சிட்டுக் குருவியல்ல கவிஞன்.
நிலக் கிளி,
மண் புழு,
அறுகம்புல்.
இவைகள் போல கவிஞனையும்
மண்ணிலிருந்து பிரிக்க முடியாது'

'நினைவழியா நாட்கள்' எனும் கவிதை நூல் தொகுப்பின் 'வாக்குமூலம்' ஊடாக கவிஞர் சொன்ன விடயம் இது.

'காலத்திற்கேற்ப கலைகளும், கல்வியும் காலத்திற்கேற்ப ஒழுக்கமும் நூலும்' எனப் பாரதி பாடியது போல் காலத்திற்கேற்ப கவி பாடிய ஒரு கவிஞர் புதுவை இரத்தினதுரை.

'கேட்க ஒரு நாதி
கிளர்ந் தெழும்ப ஒரு கூட்டம்
மீட்கவொரு இயக்கம்.
மூச்சுவிட ஒரு கவிஞன்
கட்டாயம்தேவை... இது
காலத்தின் குரலாகும்'.

(மல்லிகை—தை 1986)

எனத் தான் அனுபவித்த சூழ்நிலைக்கு அமைவாக ஒவ்வொரு காலத்திலும் மண்ணின் கவிஞன் மகிழ்வாக பாடியுள்ளான். புதுவை இரத்தினதுரையின் ஒவ்வொரு கவிதைகளையும் படிக்கும் போதும் ஒவ்வொரு வகை உணர்வை அனுபவிக்கலாம். 'ஒரு படைப்பாளி எவ்வளவு சமுதாய உணர்வுடையவராக இருப்பினும் அவரது சமுதாய உணர்வு, அவரது படைப்புகள் அனைத்திலும் ஒரே அளவிலும் ஒரே விதமாகவும் வெளிப்பட முடியாது' என்பது படைப்பிலக்கியம் சார்ந்தவருடைய கருத்தாகும். ஆனால், புதுவை இரத்தினதுரையினை சமுதாயக் கவிஞனாக ஒரு வட்டமிட்டுப் பார்க்க முடியாது. காரணம் பல.

(உணர்வு தை—1990)

'நீயோ
கையில் துவக்கேந்தி
களத்திலே நிற்கின்றாய்
கொட்டும் மழையினிலும்
குறி பார்த்து நிற்கின்றாய்.
தூங்காத விழியோடு 'சென்றிக்கு'
–நிற்கின்றாய்.
களத்து நிலைபாடும் கவிஞனாகின்றார்.

'பதுங்கு குழியல்ல எங்கள் படுக்கையறை இங்கே
நிலவு கேட்டுப் பிள்ளைகள் அழுவதில்லை
இப்போது 'புக்காரா'வைப் பிடித்துத் தரட்டாம்.
'உலங்கு வானூர்தி'யின் விசிறிக் காற்றில் –
தான்'
நாங்கள்,
முழுகிய தலையை உலர்த்திக் கொள்ளு–
கின்றோம்'.

(வெளிச்சம் —வைகாசி 1993)

எனும்போது களத்து நிலைக்கு ஒரு புதுப்பாடத் திட்டத்தினை வருவித்து அதனையே நடைமுறைக்கு ஏற்றதாக்கி எதிரியின் தாக்குதலிலும் ஒரு உணர்வூட்டும் கவிஞனாகிறார்.

'தாயென்றும், தளிரென்றும்,
பூ வென்றும் முன்னைப் புலவர்களால்
உவமை சொன்ன
பெண்ணும் எழுந்து போராடும் நேரத்தில்'

(வெளிச்சம் — ஆவணி 1993)

என்று பாடும்போது கவிஞர் பெண்புலிகளின் போராட்ட முனைப்பிற்கு வீரியமூட்டும் கவிஞனாகிறார்.

தமிழீழ மண்ணில் அன்னியர்களின் ஆதிக்கத்தினை வெறுப்பவர் புதுவை. அமைதிப்படை எனும் பெயரில் வந்து தமிழீழ மண்ணில் அநீதியிழைத்த இந்திய வல்லாதிக்கத்தினைப் பல இடங்களில் கவிஞர் வெறுத்துப் பாடுவதைப் பார்க்கலாம்.

'இராமயணக் காவியம் மெய்யானால்
அநுமானே
எம்மண்ணில் ஆதியில் கால்வைத்தவன்
ஆக்கிரமிப்பாளன் ஆகின்றான்
பொய்யானால்
வால்மீகியின் ஆதிக்க உணர்வைக் கண்டு
எனக்கு ஆத்திரம் வருகிறது'.

எனக் கூறி பாரதப்படை எமது மண்ணிற்கு வந்த ஒவ்வொரு தடவையும் எமது மண் பற்றி எரிந்தது என எந்தக் கவிஞனும் சொல்லாத வரலாற்று மூலாதார உதாரணத்தினை குறிப்பிட்டுக் கூறுகின்றபோது அன்னிய ஆக்கிரமிப்பாளரை எதிர்க்கும் உயிரோட்டமான தேச விடுதலைக் கவிஞனாவதை நாம் காணலாம்.

தமிழீழப் போராட்டத்தினால் புலம் பெயர்ந்தவர்களிடம் கவிஞர்க்கு நிறையவே கோபமுண்டு.



பல சந்தர்ப்பங்களில் அந்தக் கோபத்தைப் பச்சையாகவே துப்பிவிட்டார் என்றுகூட சொல்லுமளவிற்கு கவிதையடிகள் கனம் பெறுகின்றன.

'பனை மரத்து நிழலில்லை என்றுதானே
பறந்தாய்?
வேற்று நாட்டுப்பன்னீர் மரநிழல்
எத்தனை காலத்துக்கு இதமளிக்கும்?'

(வெளிச்சம் —1993)

'கப்பலேறி ஜேர்மனி, பிரான்சுடன்
கனடா நாட்டிலும் தஞ்சம் புகுந்தனர்.
அப்பு ஆச்சியைக் கவனம் கவனமென்று
அங்கிருந்துமே கடிதம் எழுதினர்.
தப்பிப் பறந்தவர் தம்பியும் வாவெனத்
தம்பிமாரையும் அங்கு அழைத்தனர்.
துப்புக்கெட்டவர் அகதி லேபலில்
தூசி தட்டியே காசு உழைப்பவர்.'

(களத்தில் மலர்ந்தவை — 1988)

போன்ற கவிதையடிகள் உண்மையில் கவிஞரின் யதார்த்தமான கோபத்தினைப் பளிச்செனக் காட்டுகிறது. ஆனால், 1995 இன் நடுப்பகுதியில் நான் கவிஞரை சந்தித்தபோது கோபம் சற்றுக் குறைந்து 'புலம் பெயர்ந்தவர் தமது தாயகக் கடமையைச் சரிவர ஆற்றத் தவறக்கூடாது' என மனம் விட்டுக் கூறினார்.

புதுவை இரத்தினதுரை இன்றைய தமிழீழத்தின் தேசியக்கவிஞன். 'நினைவழியா நாட்கள்' ஒவ்வொரு ஈழத்தமிழன் வீட்டிலும் இருக்கவேண்டிய புத்தகம். இதனை வெளியீடு செய்த தமிழ்த் தாய் வெளியீட்டினருக்கும், மறுபதிப்பு செய்த அனைத்துலக செயலகத்தினருக்கும் நன்றி கூறல் வேண்டும். 1993 இற்கு பின் வந்த கவிஞரின் இதர கவிதைகளும் புத்தகவடிவாக்கப்படல் வேண்டும்.

- துரை. சிவபாலன்
பலெர்மோ, இத்தாலி.

## வெக்கங்கெட்ட 'சுதந்திரம்'


ஐம்பது வருடங்களாய்
அடிமைச் சாசனம் எழுதிவிட்டு
பொன்விழாக் கொண்டாடும் பூ வையே...
'சுதந்திரம்' என்ற சொல்லை
உச்சரிப்பதற்கு 'நா' கூசவில்லையா?
யாருக்குக் கிடைத்தது சுதந்திரம்?
லயங்களில் முடங்கி ...வெய்யிலிலும்.. குளிரிலும்...
பனியிலும்
கொழுந்தெடுத்துத் தம் இரத்தத்தைத்
தேநீராக்கிய தோட்டத் தொழிலாளர்கள்
இப்போதும் அப்படியேதான் – வாழ்கிறார்கள்.
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்
யாழ் நிலத்தில் வாழ்ந்த மக்கள்
காடுகளில் வாழ்கிறார்கள்.
பள்ளி செல்லும் மாணவர்களுக்குக்
கல்வி கற்கச் சுதந்திரம் இல்லை.
மாணவியர்க்கோ கற்புக்கே சுதந்திரம் இல்லை.
எழுத்தாளர்க்கு எழுதச் சுதந்திரம் இல்லை.
உழவர்க்கு உழுவதற்குச் சுதந்திரம் இல்லை.
மீனவர்க்குக் கடலில்லை.
ஈழத்து மீன்களுக்குக்கூட சுதந்திரம் இல்லை.
கோவில்களில் கடவுள்களுக்குக்கூட சுதந்திரம்
இல்லை.
தேவாலயங்களில்–
பாவங்களைச் சுமந்த தேவன்
குண்டடிபட்டுக் குப்புற விழுந்து கிடக்கிறான்.
விளையாடச் சென்ற சிறார்கள்
கண்ணி வெடியில் காலிழக்கிறார்கள்.
இந்த நாட்டையாளும் நீயே
வெள்ளைச் சேலைதான் கட்டுகிறாய்.
எந்த உயிருக்குமே 'சுதந்திரம் இல்லாத நாட்டில்
பிரித்தானிய இளவரசனைக் கூட்டி வந்து
பொன்விழாக் காணுகிறாயா?
தூ...!

– க.ஆதவன்
டென்மார்க்

## விலை!

எங்கள் வானத்தில்
விடிவெள்ளி,
உதிக்காதென்று
எவன் சொன்னது?
கூப்பிடு இங்கே!
அதோ! அதோ பார்
தெரிகிறது.
பார்ப்பதற்கு முன்
ஒரு நிமிடம்.....
இதன் விலையென்ன
அதாவது தெரியுமா?
பேராண்மையுடன் வாழ்ந்த
ஓரினம்,
பெருமைகளை
உடமைகளை
ஈட்டிய பொருள்களை
கட்டிய வீடுகளை
கழனிகளை
கன்று, கறவைகளை,
நின்ற நெடும் பனைகளை
வளத்தை, வாழ்வியலை
நிறைகாத்த பொன்
நிறைமையை
தார்மீகத்தை, கல்வியை
பாரம்பரியத்தை மட்டுமா
விலை கொடுத்தது
என்கிறாய்?
அதற்கும் மேலாய்
கைகளை, கால்களை,
தலையை, உயிரை
ஒன்று, இரண்டென்று
கணக்கிலடக்க,
கணக்கல்ல
உணர்வுப்பூக்கள்
உள்ளுயிர்த்த உயிர்
வேட்கை
ஆகுதியின் தீச்சுடராய்
அகிலமெங்கணும்
அகிற்புகையாயெழுந்த
விடுதலை வேள்வியின்
விலைமதிப்பில்லா
குருதிப்புனல்!
விலைவைத்து
இயம்பிலேன் – நீ
தலைவைத்துச் சாயும்
பூமியில்
த்ட்டினால் சிவப்பில்லா
பொட்டுநிலம்
கிட்டுவதற்கில்லை.
அதுதான்
விலையென்பேன்.
இப்போது பார்
விடிவெள்ளி
உதித்துவிட்ட
எங்களது வானத்தை!

–ஜெயமணி–
ஜேர்மனி.




## தேடியவை

என்னையா.... சிறீலங்கா வான் ப[ா]டையின் பெரிய படிமாத்தானுக்கு பதவி நீடிப்பு வழங்கியாச்சு என்று செய்தி வந்ததே இப்போ என்னடாவென்றால் சேச்..சே அப்படியில்லை புதிசான தலையொன்று நியமிச்சாச்சு என்று செய்தி வந்துள்ளதே? உண்மையில் என்னதான் ஆச்சு? அதை முதலில் சொல்லுமை..ய்..யா இவ்வாறு காச்சு.... பூச்சு என்று கத்தியபடி விசுக்கென்று வந்தார் எதுகையார்.

ஏதடா எதுகையாருக்கு 'சி' னாக் காரர்களிடம் புதினம் பொறுக்குவதில் ரொம்பவும்தான் அக்கறை வந்துவிட்டதே என்றெண்ணிய மோனையார் புதினத்தினை சொல்லத் தொடங்கினார்.

## பழையவரும், புதியவரும்

அஃதாகப் பட்டதை...ய்..யா 'சி'னா வான் படையினருக்கு ஏற்பட்ட [வி]மான இழப்பிற்கு தொளபதியார் தான் காரணமென பெரிய அம்மணியாரின் பணிப்புரையில் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் கண்டுபிடித்துவிட்டதால் இவருக்கு பதவி நீடிப்பு வழக்கக் கூடாதெனவும் அம்மணியாரிடம் அவர்கள் பரிந்துரைத்திருந்தனர். ஆனாலும் பதவி நீடிப்பு வழங்கப்பட்டு விட்டது என்றே எல்லோரும் நம்பினர். அந்த சந்தோஷத்தில் தொளபதியாரும் சிங்கப்பூர் நாட்டில் நடந்த விமானக் கண்காட்சி ஒன்றிற்கு விருந்தினராக பறந்துவிட்டார்.

இதற்கிடையில்... தொளபதிக்கு நெருக்கமானவரான இன்னொரு வான் ப[ா]டை அதிகாரியான 'மு' னாக்காரர் ஹசிம் என்பவர் தொளபதிக்கு கட்டாயம் பதவி நீடிப்பு வழங்க வேண்டும் என்ற பிரச்சார திருப்பணியினை அரச உயர்மட்டத்தில் ஆரம்பித்தார். விமானப் ப[ா]டையினரால் அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் வீடுகள் எல்லாம் புலிகளின் தளங்கள் என அத் திருப்பணியில் கூறப்பட்டு, இவ்வளவு சாதனைகளைச் செய்த விமானப் படையை வழி நடாத்திய தளபதிக்கு ஏன் பதவி நீடிப்பு வழங்கக் கூடாது எனவும் கோரியிருந்தார் அவர்.

இந்த நேரமாகப் பார்த்து விமானப் படையில் உறையும் குண்டர்கள் சிலர் எமது தளபதிக்கு எதிராக எழுதும் சண்டே ரைம்ஸ் இக்பால் அத்தாசினை ஒரு வெருட்டு வெருட்டுவோம் எனவும் அவர் வீட்டினை நாடி புறப்பட்டும்விட்டனர்.

சரி... ஐயா உமது ஆலாபனங்கள் போதும். இப்போது 'சி' னா காரருக்கு வான் ப[ா]டை தளபதி யார்? அதை முதலில் சொல்லும் என இடை மறித்தார் கையார்.

அதைத்தானே ஐயா சொல்ல வருகிறேன் அதற்கு முதல் நீர் ரொம்பவும்தான் அவசரப்படுகிறீரே?

பருத்தித்துறைக் கடலில் வைத்து கடற்படையினருக்கு புலிகள் கொடுத்த செம அடியினால் கலங்கிப்போன கடற்படை பெரிசுகள், தமது கடற்பரிவாரங்கள் எல்லாம் புறப்பட முன்னர் விமானப்படையினர் அப் பகுதிகளில் ரோந்து புரிந்தார்களே? இவ்வளவு பெருமளவு புலிகள் பருத்தித்துறை கடற்பரப்பில் நிலைகொண்டிருந்ததை அவர்கள் கண்கள் காணவில்லையா? என அடுக்கடுக்காக கேள்விகளை அடுக்கி விமானப்படை ஒரு விழல்படை எனவும் திட்டித் தீர்த்துள்ளனராம்.

எனவேதான் இறுதி முடிவாக விமானப்படை தளபதிக்கு பதவி நீடிப்பு வழங்குவதில்லை என பெரிய அம்மணியார் முடிவு எடுத்ததுடன், தற்போது புதிய தளபதியாக இவ்வளவு நாளும் உப தளபதியாக இருந்த ஜெயலத்வீரக்கொடி என்பவரை நியமித்துள்ளார்.

சரி... சரி ஆக மொத்தம் புதியவர் இவர்தான் எனச் சொல்வதற்கு பதிலாக எவ்வளவு நீட்டி முழக்கிவிட்டீர் என முணுமுணுத்துக் கொண்டே நகர்ந்தார் கையார்.

# 'துணிவே துணை'

ஒலிவாங்கியார் தனது நகர்வலத்திற்கு ஏன் 'துணிவே துணை' என தலைப்பிட்டார் எனச் சிலர் கேட்டிருந்தார்கள். அதற்கான கொசுறு விளக்கம்: புகலிட கலைத்துறையைப் பொறுத்த வரை திரைப்படத் தயாரிப்பு முயற்சி, துணிவுடன் மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடு ஆகும். இத்திரைத்துறையின் வெற்றி தோல்விகள் ஒரு விவாதத்திற்குரிய ஒரு கருப்பொருளாகத் தொடர்ந்து இருந்து வருகின்ற போதிலும், துணிவின் துணையுடன் அவர்கள் இருப்பதை சுட்டிக்காட்டுவதற்காகவே இத் தலைப்பு இடப்பட்டது.

சரி இப்போது... ஒலிவாங்கியார் கடந்த இதழில் விடப்பட்ட குறையினைத் தொடர்கிறார்....

**திரு. கீழ்க்கரவை பொன்னையன் (1963-ம் ஆண்டிலிருந்து நாடக, எழுத்து, திரை துறையில் ஈடுபாடு- இரண்டு புகலிடத் திரைப்படங்களின் தயாரிப்பாளர்)**

ஒலிவாங்கியார்: **திரைத்துறைக்குள் நீங்கள் நுழைந்தது பற்றி...?**

### துணிவுக்குத் துணை...

* திரைப்படத் தயாரிப்பில் ஆர்வம்.
* கைகொடுக்கும் கலைத்துறை அனுபவங்கள்.
* வேதனத்தில் ஒரு பகுதி
* வங்கிக் கடன்கள்.
* திரையில் முகம் காட்டும் பெருவிருப்பு

➲ ஆரம்பத்திலே நாடகத்துறையில்தான் எனது பங்களிப்பு இருந்தது. பின்னர் எனது ஆர்வம் எழுத்துத்துறையின் பக்கமும் திரும்பியது. அந்த நேரத்தில் நாடகங்கள் சிலவற்றை நான் விமர்சனம் செய்தேன். நாடகங்களை அவ்வாறு நான் விமர்சனம் செய்த வேளை என் மனதில் விமர்சனம் செய்பவர்களால் படைக்க முடியுமா? என்ற ஒரு கேள்வி எழுந்தது.

அக் கேள்விக்கான பதிலாக எனது திரைத்துறைப் பிரவேசம் அமைந்துவிட்டது. இதுவரை வெளியான எனது திரைப் படைப்புகளெல்லாம் முற்று முழுதானவை என்று கூற முடியாது சில தவறுகளும் உண்டு. குறிப்பாக 'புயல்'

## நகர்வலம்

என்ற திரைப்படத்தில் விடப்பட்ட குறைபாடுகளைக் குறிப்பிடலாம். அக் குறைபாட்டிற்கு நான்தான் முழுக்க முழுக்க பொறுப்பாளியாவேன். அதன் தாக்கம்தான் எனக்குத் திரைத்துறை பற்றிய தேடலைத் தேட ஆர்வமூட்டியது. அதன் பிறகு நான், இந்தியத் திரைத்துறை நிறுவனத்திலும் சென்னை சாந்தோம் கலையகத்திலும் திரைத்துறை சம்பந்தமான கற்கைகளைக் கற்றுக்கொண்டேன்.

கற்றுக்கொண்ட அக் கல்வியின் அடிப்படையில் 'மனச்சிறை' என்றதொரு படத்தினை தயாரித்தேன். ஆயினும் இதுவரை திரைக்கு வரவில்லை. இப் படம் இந்தியாவிலும், பாரிசிலும் எடுக்கப்பட்ட ஒரு படைப்பு. கூடிய விரைவில் அது திரைக்கு வருவது சாத்தியமாகும்.

ஒலிவாங்கியார்: **புகலிட நாட்டுச் சூழல் ஒத்துழைக்கிறதா?**

➲ தன்நம்பிக்கையுடன் இருக்கிறேன். எமது தமிழீழ மக்களை அடையாளப் படுத்தக்கூடிய கலைப்படைப்பாகத்தான் புகலிடக் கலைஞர்களின் படைப்புகள் அமையவேண்டும் என்பது கருத்து. இதற்காக நாம் சிலதடைகளை (பொருளியல் ரீதியான தோல்விகள்) எதிர்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் எமது மக்களின் இரசனைத் தன்மையில் எனது முழு நம்பிக்கையும் இருக்கிறது... எனக் கூறி முடித்தார்.

ஒலிவாங்கியார்: **புகலிடப் படங்களில் முதலீடுவது ஆபத்தான ஒரு முயற்சியா?**

➲ படத் தயாரிப்பு உபகரணங்கள் அனைத்தையும் நான் சொந்தமாக கொள்வனவு செய்தமையால் எனக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டது உண்மைதான்.

அடுத்ததாக எனது 'புயல்' பட்த்தில் விடப்பட்ட தொழினுட்பத் தவறு காரணமாக அப் படத்திற்கு வசூலான 4000 பிராங்குகள் இரசிகர்களிடமே மீளளிக்கப்பட்டது. அந்தத் தவறுகளுக்கு பொறுப் பேற்று வசூலினை நான் ஏற்காத காரணத்தால் அதிலும் கொஞ்சம் நட்டம் ஏற்பட்டது.

இப்போது நான் தயாரித்துக் கொண்டிருக்கும் மனச்சிறையும், இன்னொரு படமும் (பெயரினைக் குறிப்பிட அவர் விரும்பவில்லை) பாரிய செலவுகளை கொடுத்துள்ளன. குறிப்பாக மனச்சிறை இந்தியாவிலும் படமாக்கப்பட்டதால் செலவுகள் சற்று அதிகம்தான்.

**கையிருக்கும் திட்டம்:** மே/ஜூனில் மனச்சிறை வெளியிடல், அதற்கு அடுத்தடுத்த மாதங்களில் மற்றைய திரைப்படத்தையும் வெளியிடல்

★★★

திரு. கீழ்க்கரவை பொன்னையனை அடுத்து வயதில் மிக இளையவரான ஒரு திரைப்பட இயக்குநரை நோக்கி ஒலி வாங்கியார் தாவினார்.

**திரு: சுதன்ராஜா (குறும்படங்கள் இரண்டின் தயாரிப்பாளர். ஜீவன் திரைப்பட இயக்குநர்)**

ஒலிவாங்கியார்: **ஜீவன் திரைப்படம் வெளிவருவதாக பலமுறை விளம்பரப் படுத்தப்பட்டும் படம் இதுவரை வெளிவரவில்லையே. ஏன்?**

➲ உண்மைதான்! அத் திரைப்பட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஒன்றரை வருடங்களாகி விட்டன. ஆனாலும் இதுவரை திரையிடப்படவில்லை. ஆனால் இதிலுள்ள பெரிய சிக்கல் என்னவென்றால், இங்குள்ளவர்கள் யாரும் தொழில் ரீதியான முழுநேர நடிகர்களோ அன்றி துறைசார் வல்லுனர்களோ இல்லை என்பதாகும். அவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நாட்களைப் பயன்படுத்தி அந்த நாளில் எல்லோரையும் ஒன்றிணைத்து படப்பிடிப்பில் ஈடுபடுவது இலேசான காரியமல்ல, இதற்குள் பருவகால மாற்றம்வேறு உள்ளது.

இப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தபடி 'ஜீவன்' தனது 95-வது வீதமான கட்டத்தைத் தாண்டிவிட்டது.

ஒலிவாங்கியார்: **நீண்ட தாமதம் படத்தின் வெற்றியைப் பாதிக்காதா?**

➲ 'ஜீவன்' திரைப்படம் ஒரு காதல் கதையினை மையமாக எடுக்கப்பட்டது. (ஜீவனுள்ள காதல்?) காதல் எக்காலத்திற்கும் பொருத்தமானது என்பதால் இவ்வாறான தாமதம் பெரியளவான பாதிப்பினை ஏற்படுத்தாது என்றே நம்புகிறேன்.

ஒலிவாங்கியார்: **இளம் இயக்குநர் என்ற ரீதியில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?**

➲ என்னைப் பொறுத்தவரை ஒருசாராரிடமிருந்து சில மறைமுக எதிர்ப்புகள் இருந்தாலும் எங்களது நோக்கம், ஒரு தரமான படத்தினை ரசிகர்

### திரையில் தொய்வுக்கு....

* பிடிப்பற்ற திரைக்கதை/முழு நீளமற்ற கதைத்தன்மை.
* படம் நகரும் விதத்தில் அல்லது பார்க்கும் பிரச்சினையில் தீவிரத்தன்மையில்லை.
* தொழில் நுட்ப யுக்தியில் முதிர்வற்ற தன்மை.
* தமிழகப் படங்களின் வருகை.
* சலிப்பூட்டும் திரை முகங்கள்.

களுக்குத் தர வேண்டும் என்பது. இதனால்தான் ஜீவன் தளராது முன்னோக்கிச் செல்கிறது. இத் திரைப்படம் எனது நண்பர்கள் நால்வரினதும் கூட்டு முயற்சியுடன்தான் உருவாகிறது. எனவே துணைகொடுக்க அவர்கள் இருப்பதால் பெரிதான பிரச்சினை இல்லை. இருந்து பாருங்கள் ஜீவன் நிச்சயமாக வெற்றிபெறும்.

அவரது விடாமுயற்சிக்கு வாழ்த்துக்கூறி விடை பெற்றுத் திரும்பிய ஒலிவாங்கியார் தனது குழாமில் ஓரிருவர் மாயமாகிவிட்டதை அறிந்து கொண்டார். எங்கே போயிருப்பார்கள். பசிவேறு வயிற்றைக் கிள்ளும் (மதிய) நேரம். ஆங்... அங்கே போயிருப்பார்களோ? நேராக அந்த இடத்தை நோக்கிப் பாய்ந்த ஒலிவாங்கியார் கண்ட காட்சி! ஆகா... ஆகா முத்துமாரியம்மன் சந்நிதியிலே தானமாகக் கொடுக்கப்பட்ட அன்னத்தை அவர்கள் உண்ணும் காட்சியின் அழகே..... அழகு!!

# அங்கவீனரான உறவுகளுக்கு நிதி சேர்க்க கரம் கொடுப்பீர்

எதிர்வரும் மார்ச் 15 Hastings இல் அரை (13 மைல்) மரதன் ஓட்டப்போட்டியிலும் சித்திரை 26-ம் திகதி இலண்டன் மரதன் ஓட்டப்போட்டியிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் 35 பேர் பங்குபற்றுகிறார்கள்.

முதல் தடவையாக கடந்த ஆண்டு 10 தமிழர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவில் பங்குபற்றி 6,820 பவுண்கள் சேகரித்ததுடன், அதனை தமிழீழப் பிரதேசங்களில் இடம் பெயர்ந்து கல்வி வசதியிழந்து இருக்கும் சிறுவர்களின் ஆரம்ப பாடசாலைத் திட்டத்திற்கு அனுப்பியுள்ளார்கள். இத் திட்டமானது வன்னியில் தற்போது முல்லைத்தீவு வாகரைப் பகுதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக செயல் வடிவம் பெற்றுச் செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

இம்முறை இவ் ஓட்டப்போட்டி மூலம் சேகரிக்கப்படும் நிதி தமது உடல் அங்கங்களை இழந்து அல்லல்படும் சிறுவர்கள், முதியோர்களுக்காக புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்படும் திட்டங்களுக்கு அனுப்பப்படவுள்ளது.

எனவே போட்டியில் பங்குபற்றும் வீரர்களை உற்சாகப் படுத்தி அவர்களின் நிதி சேகரிப்பில் நீங்களும் பங்குபற்றி ஒத்துழைக்குமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரித்தானியக் கிளையினர் தயவுடன் கேட்டுக்கொள்கின்றனர்.



**மேலதிக விபரங்களுக்கு:**
செல்வா – குகன்
0181-5205876
0181-5319104
0385 934 736



Pub

# தமிழ் ஒளி

## சின்னத் திரையில் இவ்வாரம்

### தினமும் உங்கள் சின்னத் திரையில்

08.00 தமிழ் ஒளி ஆரம்பம்.
**Sun TV யின் மறு ஒலிபரப்பு**
12.00 செய்தி நேரம்
**முன்னைய நாள் செய்தியின் மறு ஒலிபரப்பு**
12.30 திரை விருந்து
16.45 பி.பி.சி.யின் தமிழோசை
இந்த நாள் நல்ல நாள்
தினம் ஒரு திருக்குறள்
21.00 செய்தி நேரம்
எமது பிரதான செய்தித் தொகுப்பு
21.30 திரை விருந்து
00.20 தமிழ் ஒளி நிறைவு
00.20 தமிழ் ஒலி ஆரம்பம்

## இவ்வாரம் வானலைகளில்

### தினமும் உங்கள் வானொலியில்

| | | | |
|---|---|---|---|
| 6.00 | ஆரம்பம் | 15.00 | செய்தித் தலைப்புகள் |
| 6.05 | பக்திப் பாடல்கள் | 16.00 | செய்தித் தலைப்புகள் |
| 8.00 | செய்தித் தலைப்புகள் | 16.45 | பி.பி.சி.யின் தமிழோசை |
| 8.05 | இந்த நாள் இனிய நாள் | 17.16 | கனடாவிற்கான ஒலிபரப்பு |
| 8.15 | தினம் ஒரு திருக்குறள் | 18.00 | கனேடிய ஒலிபரப்பு |
| 8.30 | ஐரோப்பிய வலம் | 20.00 | செய்தித் தலைப்புகள் |
| 9.00 | செய்தித் தலைப்புகள் | 21.00 | பிரதான செய்திகள் |
| 10.00 | செய்தித் தலைப்புகள் | 22.00 | ஐரோப்பிய வலம் |
| 11.00 | செய்தித் தலைப்புகள் | | |
| 12.00 | செய்தித் தலைப்புகள் | | |
| 13.00 | செய்தித் தலைப்புகள் | | |
| 13.30 | பிரதான செய்திகள் | | |

**நள்ளிரவு முதல் காலை 6.00 வரை கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள்.**

Pub

RAMIY RECORDS

# ரமி 98

பூமணி புகழ் களஞ்சியத்தின் விற்பனையில்

## -கி-ழ-க்-கு-ம்-மே-ற்-கு-ம்-

இசை: இளையராஜா பாடல்: பழனிபாரதி

இசை இளவல் யுவன்ஷங்கர்ராஜ் இசையில்

தொட்டாச் சிணுங்கி புகழ் அதியமானின்

## சொர்ணமுகி

இசை: ஸ்வரன்ராஜ் பாடல்: வைரமுத்து

விரைவில்

மைசன் பிக்ஸர்ஸ்

## அண்ணன்



இயக்கம்: அனுமோகன்
இசை: இளையராஜா பாடல்: பழனிபாரதி

**RAMIY RECORDS**
**Grünberg str. 3, CH 7000 Chur.**

கஸ்தூரிராஜாவின்

## வீரத்தாலாட்டு

இசை: இளையராஜா
பாடல்: கஸ்தூரிராஜா

| | |
|---|---|
| கும்பாபிஷேகம் கோயிலுக்குத்தான் குப்பம்மா | — எஸ். பி.பாலா, சித்ரா |
| சாந்துப்பொட்டு சந்தனப் பொட்டு மாமன் நெஞ்சு | — அருண்மொழி, சுவர்ணா |
| ஆளப்பிறந்த மகராசா மகராசா என் கண்ணின்மணி | — ராஜா, சித்ரா |
| படிக்கட்டுமா படிக்கட்டுமா மெட்டுக்கட்டி ஒரு | — எஸ்.ஜானகி |
| கிளியைப்போல நானிக்க குரங்குபோல் குறத்தியாளை | — க.அமரன், சைலஜா |
| ஆராரோ ஆராரோ ஆரிரரோ பிள்ளைச் செல்வமே | — சுவர்ணலதா |
| கதைபோல தோன்றும் இது கதையுமில்ல இத | — ராஜா |
| பட்டப் பகல் நேரத்தில் சீவிக்கிட்டு சிமிக்கிக்கிட்டு | — ம.வாசு, சுவர்ணலதா |
| அம்மன் கோவில் வாசலிலே மா விளக்கு ஏத்தி | — க. அமரன், சைலஜா |
| வளையப்பட்டி மாமனுக்கு வாழ்கைப்பட்டு போற | — க. அமரன், சைலஜா |

விளம்பர மாயையல்ல. உங்கள் ஒவ்வொரு இதயங்களையும் இது தொடும்!

**ஓரிரு நாட்களில் 15000 இசைத்தட்டுக்களில் உலகமெல்லாம் வெளிவருகிறது.**

Pub

## உள்ளதைக் கொஞ்சம் ஒழுங்காக் கதைப்பம்

**அங்கொன்று இங்கொன்றாய்...
சில ஆண்டுக்கொன்றாய்..
சிறிதாய் பெரிதாய் வெடித்த
குண்டுகள்.
அடுத்தடுத்தாய்... அடிக்கொன்றாய்...
இலக்கையடையும்
பிரயத்தனத்துடன்...!**

போனவருசம் எத்தினை..? அதுக்குமுதல் எத்தினை...? இந்த வருசம் தொடங்கி இதுநாள் வரையில எத்தினை... ? இப்பிடித்தான்... கணக்குப்போட்டுப் பாக்கினம். 1978இல அவ்ரோ குது..? அதுவின்ர வீதம் கூடுதா குறையுதா..? ஆற்ற ஆட்சியில அதிகம் வெடிக்குது...? தடுத்தபோதும்... எப்பிடி நுழைஞ்சு எதுக்க வெடிக்குது..? அப்பிடியெண்டு.... கணக்குப்பாக்கினமே யல்லாது.... ஏன் வெடிக்குது அப்பிடியெண்டு.... எண்ணிப் பாக்கிறதாத் தெரியேல்ல!

அவ்ரோக் குண்டுவெடிப்போட ஏன் வெடிச்சது எண்டு எண்ணிப் பாத்திருந்தால்.... இப்ப எத்தினை வெடிச்சது எண்டு எண்ணிப்பார்க்கத் தேவையில்லையெல்லே?!

# எண்ணிப் பாக்கினமேயல்லாது.... எண்ணிப்பாக்கினம் இல்லையே!

குண்டுவெடிப்போட ஆரம்பிச்சு... கொழும்பில இதுநாள் வரையில இருபதுக்கும் மேற்பட்ட பாரிய குண்டுவெடிப்புகள் நடந்திருக்குது எண்டு ஒரு பத்திரிகை கணக்குப் போட்டிருக்குது.

போனவருசம் நவம்பரில இருந்து இண்டைக்கு வரைக்குமான நாலு மாதத்தில ஆறுகுண்டுகள் வெடிச்சிருக்குது எண்டது அரசாங்கத்தின்ர கணக்கு.

என்னதான் பாதுகாப்பில கடும்பிடியாக இருந்தாலும்.... தடையளைப்போட்டு சோதனையளை நடத்தி... தலைகீழாய் நிண்டு பாத்தாலும்.... வரவேண்டிய சாமான் கொழும்புக்க வந்துதானே தீருது. மறைச்சு வைச்சிருக்கிற வெடிமருந்துகளைக் கண்டுபிடிக்கிற சாதனங்கள் தங்களிட்ட இல்லை எண்டு பொலிஸ் உயர் அதிகாரி கவலையோட சொல்லுறார்.

மருதானைக் குண்டுவெடிப்போட.... சந்திரிகா அவசரமாக பாதுகாப்பு உயர் அதிகாரிகளை எல்லாம் கூட்டி.... கொழும்பைப் பாதுகாக்கிறதுக்கு என்ன செய்யலாம் எண்டு கேட்டாவாம்.... அதுக்கு ஒரு உயர் அதிகாரி சொன்னாராம், உதுக்குமேல ஒண்டும் செய்யேலாது எண்டு. உர்... உர்... எண்டு பாத்திருப்பார் அம்மையார்! நல்ல காலம்... கொழும்பை வேறிடத்துக்குக் கொண்டுபோவமோ எண்டு அவர் ஐடியா கொடுக்கேல்ல எண்டதில திருப்திப்பட வேண்டியதுதான்.

எங்கபோனாலும் செய்தவினை சூழ வருமெல்லே!

சரி... எத்தினை குண்டுகள் வெடிக்

எல்லாக் குண்டுவெடிப்புக்களுக்கும் புலியள்தான் காரணம் எண்டு அரசாங்கம் சொல்லுது. புலியள் ஏலாக்கட்டத்தில... விரக்தியில்தான் இந்தக் குண்டுவெடிப்புக் களை நடத்துகினம் எண்டது அரசாங்கத்தின்ர பிரச்சாரம். அதாவது தாங்கள் குடாநாட்டைப் பிடிச்சதால விரக்தியடைஞ்சும்.... ஜெயசிக்குறுவை வெற்றிகரமாக நடத்திச்செல்லுறதால தோல்வியின் விளிம்பில் நிற்கும் புலியள் ஏலாக்கட்டத்தில இந்தக் குண்டுவெடிப்புகளை நடத்துகினம் எண்டதும் சந்திரிகா அரசாங்கத்தின்ர பிரச்சாரம். சந்திரிகா படை விடுதலைப் புலியளிடம் வாங்கிக் கட்டிகினமா இல்லையா...? வெற்றிகரமாக முன்னேறுகினமா...? முழிபிதுங்கினமா எண்டது அர

> **சரி... எத்தினை குண்டுகள் வெடிக்குது..? அதுவின்ர விதம் கூடுதா குறையுதா..? ஆற்ற ஆட்சியில அதிகம் வெடிக்குது...? தடுத்தபோதும்... எப்பிடி நுழைஞ்சு எதுக்க வெடிக்குது..? அப்பிடியெண்டு.... கணக்குப்பாக்கினமே யல்லாது.... ஏன்வெடிக்குது அப்பிடியெண்டு.... எண்ணிப்பாக்கிறதாத் தெரியேல்ல! அவ்ரோக் குண்டுவெடிப்போட ஏன்வெடிச்சது எண்டு எண்ணிப் பாத்திருந்தால்.... இப்ப எத்தினை வெடிச்சது எண்டு எண்ணிப்பார்க்கத் தேவையில்லையெல்லே?!**

விரக்தியில்லாமல் அடிச்சால்.... படையினரும் சிங்கள மக்களும் அச்சப்படப்போகினம்... அமைச்சர் பேச்சை மாத்த வேணும்.

மருதானைக் குண்டுவெடிப்பு அவையளின்ர பிரச்சார இலக்கில இருந்து கொஞ்சம் பிசகிவிட்டுது. அதுபாட்டுக்கு சும்மா போன குண்டுவாகனத்தை துரத்தி வழி மறிச்சு, பொலிஸ் ஸ்ரேசனுக்கு கொண்டு போற நேரத்திலகுண்டு வெடிச்சிருக்குது. மருதானைச் சந்தி, மக்கள் நடமாட்டமான சந்தி. அதில குண்டுவெடிச்சபடியால்... 38 பேர் செத்திருக்கினம். 300 பேர் காயமடைஞ்சிருக்கினம். 50 வாகனங்கள் மட்டில சேதம். எங்கையோ ஏதோ ஒரு இலக்கு நோக்கி சென்ற வாகனத்தை வழிமறிச்சு சனத்துக்க வெடிக்கப்பண்ணினது பொலி

சாங்கத்துக்குத் தெரியேல்லையோ தெரியேல்ல...? ஆனால் பொதுவாக எல்லாருக்குமே நல்லாகத் தெரிஞ்சவிசயம் எண்டது வேறுவிசயம். அரசாங்கம் சொல்லுறபடி சும்மா ஒரு கதைக்கு எடுத்துப் பாத்தமெண்டாலும்... யாழ்ப்பாணத்தைப் பிடிச்சும்... ஜெயசிக்குறுவை நடத்தியும், புலியளை விரக்தியடையப் பண்ணியது தாங்கள்தான் எண்டதும்... புலியள் அந்த விரக்தியில கொழும்புக்கு குண்டுலொறியோட வந்ததுக்கு தாங்கள்தான் காரணம் எண்டும் சுயவிமர்சனம் செய்யுது போல....

முல்லைத்தீவு தாக்குதல் நடந்த போதும் ரத்வத்தை இதைத்தான் சொன்னவர். அதாவது இது புலியள் விரக்தியில நடத்தினதெண்டு. புலியள் விரக்தியில அடிக்கிற அடியே இந்த அடியெண்டால்.....

சாரின்ர குற்றமெல்லே!.

இல்லாதுபோனால்... அந்த வாகனம்... மக்கள் சந்தடியற்ற.... ஒரு, இராணுவ இலக்கை சென்றடைந்திருக்கக்கூடும்.

**சடையர்**

அல்லதுபோனால்... மக்கள் இழப்புக்களைத் தவிர்த்து பொருளாதார இலக்கொன்றை அதுபாட்டுக்கு பதம் பார்த்திருக்கக்கூடும்.

எண்டபடியால்... புலியள் பொதுமக்களைக் கொல்ல குண்டுவைச்சார்கள் எண்ட சிறீலங்காவின்ர குற்றச்சாட்டு இயல்பாகவே சத்தில்லாமல்போயிட்டுது.

இன்னொரு செய்தி. இதுவும் இன்னொரு சிங்கள அமைச்சரின்ர திருவாக்குச் செய்தி... அதுவும் குண்டுவெடிப்போட சம்பந்தப்பட்டதுதான். தலதாமாளிகைக் குண்டுவெடிப்போட சம்பந்தப்பட்டது!

சந்திரிகாவின்ர அமைச்சரவையில இருந்துகொண்டே.... சந்திரிகாவிற்கு எதிராக அவர் சாபம் போட்டிருக்கிறார் எண்டு ஒருவேளை தண்டிக்கப்படக்கூடும்.

அதாவது.. தலதாமாளிகையில முன்னர் ஜே.வி.பி.யினர் குண்டு வெடிப்பு நடத்தினவை. அந்தப் பாவம் சும்மா விடுமோ....? அதுதான் ஜே.வி.பி.யினர் அழிஞ்சு போச்சினம் அப்பிடியெண்டு சொல்லி.... இப்ப குண்டுத்தாக்குதல் நடத்தினது புலியள் தான் எனக்கண்டுபிடிச்ச அமைச்சர், அவையளும் இந்தப் பாவத்துக்குத் தண்டனை அனுபவிப்பினம்... அழிஞ்சு போவினம் எண்டு திருவாக்குச் சொல்லியிருக்கிறார்.

அதுசரி.... வடக்கிலும் கிழக்கிலும் கோயில்குளம் எண்டு குண்டுபோட்டு அழிக்கிற அரசாங்கத்துக்கு விரைவில அழிவு வரும் எண்டு வெருட்டுறார்போலும். மூவாயிரம் கோயிலை அழிச்சிருக்கினம், சிதைச்

**ஒரு அலசல்**

சிருக்கினம் எண்டால்.... எக்கச்சக்கமான பிரச்சினை இருக்குது. அமைச்சரின்ர திருவாக்குப்படி பாத்தால்.... இந்தப் பாவம் அவை சாகுமட்டும் விடாம துரத்திக் கொண்டே இருக்கும். அம்மையாரும்... அம்மான் ரத்வத்தையும் உசாராகவேணும்!


**ஷரிகா ரவல்ஸ்**

SHARIKA TRAVELS ®

★ தனித்துவமான விலை ★ பயணிகளிற்கான பிரத்தியேக சேவை
★ சனி, ஞாயிறு உட்பட 24 மணிநேர சேவை
★ சகல வெளி நாடுகளுக்கும் [இந்திய உட்பட] விசா பெற்றுத்தரப்படும்

**எமது சில விலை விபரங்கள்**

கொழும்பு - Sfr 899 (ஒரு வருடம் உத்தரவாதம்)
சென்னை - Sfr 750 (6 மாதம் உத்தரவாதம்)
சிங்கப்பூர் - Sfr 980 (6 மாதம் உத்தரவாதம்)

ஏனைய விலைவிபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

எம்மிடம் இந்திய அன்பளிப்புப் பொருட்கள், சில்க் சாறி வகைகள், சுடிதார், தமிழ் வீடியோ, ஓடியோ கஸட்டுகள் மற்றும் CD களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**தொலைபேசி அட்டைகள்**

24 மணி நேரமும் சாதாரண தொலைபேசி விலை
இலங்கை SFR 1.50

**மேலதிக விபரங்களுக்கு:**

Bahnhof str - 69 (3ம் மாடி)
CH 8001 - Zurich
Switzerland
Tel: 079 / 402 27 95,
01 / 225 95 95
Fax: 01 / 225 95 96
E-mail: 113047. 623 @ compuserve.com

# யேசுவின் குழந்தை (EL Niño) யின் கோபமும் - சீற்றமும் - தாக்கமும்

'எல் நினோ' (EL Niño) வால் அனர்த்தம்; எல் நினோவால் அழிவு என்றெல்லாம் செய்தித் தொடர்புச் சாதனங்களில் அடிக்கடி இடம்பெறும் 'எல் நினோ' என்றால் என்ன என்பது பலருக்குத் தெரியாத ஒரு விடயமாகும்.

'எல் நினோ' என்பது மிக நீண்ட காலத்துக்கு முன்பே (15ம் நூற்றாண்டு), லத்தீன் அமெரிக்க நாடான 'பெரு' நாட்டு மீனவர்களால் வைக்கப்பட்ட ஒரு பெயர். இதன் தமிழ் அர்த்தம் யேசுவின் குழந்தை என்பதாகும்.

நெடுங்காலத்துக்கு முன்பே பெரு நாட்டு கடற்கரையை நோக்கி குளிர்ந்த நீரோட்டம் வரும்போது அதனோடு சேர்ந்து அதிகளவுக்கு மீன்களும் வந்து சேரும். சில சந்தர்ப்பங்களில் மீன்களே கிடைப்பதில்லை. அதற்குக் காரணம் கடல் நீரின் மேற்பகுதி வெப்பமாக இருப்பதேயாகும். இது கிறிஸ்மஸ் காலப் பகுதியிலேயே அடிக்கடி நிகழ்ந்ததால் இதற்கு 'எல் நினோ' (யேசுவின் குழந்தை) என்று பெரு நாட்டு மீனவர்கள் பெயர் வைத்தனர். ஆனால் அவர்களுக்கு அப்போது அதற்குரிய விஞ்ஞான விளக்கம் எதுவும் தெரிந்திருக்கவில்லை.

NOAA (National Oceanic And Atmospheric Administration) என்னும் அமைப்பு நடத்திய ஒரு ஆய்வின்படி இந்த நூற்றாண்டில் இந்த 'எல் நினோ' காலநிலை 23 தரம் ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அதில் மூன்று தடவைகள் 1991, 1994, 1997 களில் ஏற்பட்டதை வைத்து, இந்த காலநிலை 2 அல்லது 3 வருட இடைவெளிவிட்டு அல்லது 7 முதல் 10 வருட இடைவெளிவிட்டு வரலாம் என மதிப்பீடு செய்யப்பட்டது. 1990-கள் வரை இந்த 'எல் நினோ' கால நிலைபற்றி உத்தியோகபூர்வமான விஞ்ஞான விளக்கத்தை யாரும் கொடுக்கவில்லை.

ஆயினும் 1985-ம் ஆண்டு சர்வதேச விஞ்ஞானிகள், இந்த 'எல் நினோ'வை ஆய்வு செய்வதற்காக TOGA (Tropical Ocean And Global Atmosphere) என்ற வேலைத் திட்டத்தை உருவாக்கினர். 10 வருடங்கள் நீடித்த இந்த ஆய்வுத்திட்டத்தின் பின்பு 'எல் நினோ' தோன்றுவதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டன.

வட அமெரிக்க கண்டத்தின் பரப்பளவுக்கு சமமான அளவுக்கு பசுபிக் சமுத்திரத்தின் கிழக்கு பகுதியிலுள்ள நீர் சூடாகி கடலில் அடி மட்டத்தை நோக்கிச் செல்கிறது. பூமத்திய ரேகை பகுதியின் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீசும் காற்று இந்தச் சூடான நீர்ப்பரப்பை கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. இதனால் அந்தப் பகுதியில் நீர் மட்டம் 50 CM வரையில் உயர்கிறது. ஆனால் சில சமயங்களில் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி வீசும் காற்றின் அளவும் அமுக்கமும் குறைவாக இருப்பதுண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் சூடான நீர் நாளுக்கு 250 K.M வேகத்தில் பசுபிக் சமுத்திரத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள An Dines கரையில் சென்று மோதிச் சிதறுகிறது. இதனால் அப்பகுதியின் நீர் மட்டம் 25 CM 35 CM வரை உயர்கிறது.

இவ்வாறு நடப்பதற்கு காரணம் வழிமண்டலத்தில் ஏற்படும் அமுக்க வித்தியாசமாகும். இது உலகின் எல்லாப் பகுதிகளையும் பாதிக்கின்றது. கடலின் வெப்பநிலை $28^{o}C$ யை அடையும் போது ஆவியாகும் நீரின் அளவு அதிகரிக்கிறது. இவ்வாறு அதிகரித்த அளவுக்கு மேலெழும்பும் நீராவி வளிமண்டலத்தை எட்டும் போது குளிர்ந்து இறுகி, கடும் புயல் மழையை உண்டாக்குகின்றது.

இந்த 'எல் நினோ' உருவாகும்போது காலநிலைச் சமநிலை சீர் கெட்டுப்போய்விடுகிறது. மழையும் ஈரலிப்பும் உள்ள இடங்களில் கடும் வெப்பத்தையும், கடும் வெப்பம் உள்ள இடங்களில் புயல்மழையையும் இது உருவாக்கிவிடுகிறது. அதுபோல் பசுபிக் சமுத்திரத்தின் கிழக்குப் பகுதிகளில் உள்ள நாடுகளிலும் பூமத்திய ரேகைப் பகுதியில் உள்ள நாடுகளில் கோடை காலத்தில் கடும் மழையும், மாரி காலத்தில் கடும் வரட்சியையும் ஏற்படுத்திவிடுகின்றது.

இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட 'எல் நினோ'க்களில் 1982 - 83-இல் வந்த 'எல் நினோ'வே மிகவும் சக்தி வாய்ந்தது என்று 'உலக காலநிலையியல் அமைப்பு' தெரிவித்துள்ளது. இந்தக் கால கட்டத்தில், இந்த காலநிலை அனர்த்தத்தால் 20,000 பேர்வரை கொல்லப்பட்டனர். 10 - 13 ஆயிரம் கோடி டொலர் பெறுமதியான சொத்து அழிவு ஏற்பட்டது. தற்போது 'எல் நினோ' முடிவை நெருங்கிவிட்டதாகவும் எதிர்வரும் மே மாதத்துடன் அது முடிவிற்கு வந்துவிடும் என்றும் கூறப்பட்ட போதிலும் அது மறுபடியும் தனது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துள்ளது.

இந்தோனேசியாவிலும், சுமாத்திராவிலும் காடுகள் தீப்பற்றி எரிய ஆரம்பித்துள்ளன. இந்த இரண்டு நாடுகளிலும் 20 இலட்சம் ஹெக்டேர் காடுகள் தீப்பற்றி எரிந்துள்ளன.

இந்தோனேசியாவில், ஒஸ்திரியாவின் நிலத்தைப் போல் மூன்று மடங்கு நிலப்பரப்பு தீயினால் எரிந்து கருகியுள்ளது. இதனால் தென்மேற்கு ஆசியாவின் வழிமண்டலம் மாசடைந்துள்ளது. சுவாசம் சம்பந்தமான நோய்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். கால் நடைகளும் தாவரங்களும் எரிந்து அழிந்து போனதால் இந்தோனேசியா பாரிய பொருளாதார அரசியல் நெருக்கடியைச் சந்தித்துள்ளது. அரிசியல் தன்னிறைவு பெற்றிருந்த இந்தோனேசியா தற்போது 4 மில்லியன் தொன் அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளது.

தென் பசுபிக் கரைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கும் அதே நேரத்தில் நியூசிலாந்தினதும் அவுஸ்திரேலியாவினதும் பல பகுதிகளில் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது.

ஆபிரிக்காவில் கென்யா, சோமாலியா, எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

சராசரி மழை வீழ்ச்சியை விட 5 முதல் 10 மடங்கு அதிகமான மழை கடந்த அக்டோபர் முதல் டிசம்பர் மாதப் பகுதிகளில் இந்த நாடுகளில் பெய்துள்ளது. இது இந்நாடுகளில் உட்கட்டுமான அமைப்பை சீர்குலைத்துவிட்டது. இந்த வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட நோய்கள் காரணமாக சோமாலியாவில் 2000 பேரும், கென்யாவில் 1500 பேரும் கடந்த வருடம் உயிரிழந்துள்ளனர்.

லத்தீன் அமெரிக்காவிலே பசுபிக் கரையோரத்திலுள்ள நாடுகள் தொடர்ந்து பெருமழை, புயற்காற்று அனர்த்தத்துக்கு உள்ளாகி வருகின்றன. மெக்சிக்கோவிலும், 'பெரு' விலும் மிகப் பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வட அமெரிக்காவில் புளோரிடா, கலிபோர்னியா முதலான மாநிலங்கள் புயல் பெருமழை வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகள், வானில் வெப்பநிலையை அளக்கும் கருவிகளின் துணையைக் கொண்டும், காலநிலை துல்லியமாகக் கணிப்பிட்டுச் சொல்லும் செயற்கைக் கோள்களின் துணை கொண்டும் 'எல் நினோ' அனர்த்தம் பற்றிய தகவல்களை முன்கூட்டியே தெரிந்துகொண்டு அதற்கான தற்காப்பு முன்னேற்பாடுகளை முன்கூட்டியே தயார் நிலையில் செய்து வைத்திருப்பதன் மூலம் அழிவுகளில் இருந்து தப்பித்து வருகின்றன. ஆனால் வறிய நாடுகளே இந்த அனர்த்தத்தால் மிகப் பெரிய அழிவுகளையும், இழப்புக்களையும் சந்தித்து வருகின்றன.

**- சிவா -**

# இந்திய தேர்தல்

## 'உத்தரவிடும் நிலையை இழந்த உத்தரப்பிரதேசம் தலைவிதியை நிர்ணயிக்கும் தமிழ்நாடு'

**மார்ச்-9**

**இந்தியாவின் அடுத்த பிரதமராக அத்தல் பிகாரி வாஜ்பாய் வருவார் என இந்தச் செய்திக் கட்டுரை எழுதப்படும் இந்த நிமிடம்வரை எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் ஒரு நான்கு மணி நேரத்தில் இது விடயமாக வாஜ்பாய் ஜனாதிபதி K.R நாராயணனை சந்திக்கவுள்ளார்.**

**ஐக்கிய முன்னணியுடன் இணைந்து ஆட்சி அமைக்க முயன்ற காங்கிரஸ்கட்சி அநேகமாக அந்த முயற்சியில் தோற்றுப்போய் விட்டது. ஐக்கிய முன்னணியிலுள்ள சந்திரபாபு நாயுடு ஒத்துழைக்க மறுத்தது, அதற்கு முதலாவது காரணம். சோனியா காந்தி உதிரிக் கட்சிகளின் தயவில் காங்கிரஸ் ஆட்சி அமைப்பதை விரும்பாதது இரண்டாவது காரணம்.**

**சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சிக்கும், அதனுடைய கூட்டணிக்கும் மொத்தம் 18 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. அதில் 12 ஆசனங்கள் தெலுங்கு தேசத்தினுடையவை. ஆந்திர அரசியலில் தெலுங்கு தேசத்தின் பிரதான எதிரியாக இருப்பது காங்கிரஸ் கட்சி. அதற்கு 22 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. மத்தியில் ஆட்சியில் கூட்டுவைக்கும்போது, மாநிலத்தில் பாதிப்புக்கு உள்ளாகவேண்டிவரும் என்பதால் நாயுடு அதை விரும்பவில்லை.**

**அடுத்து சோனியா காந்தி விடயம். தன்னுடைய அரசியல் பிரவேசம் எதிர்பார்த்த பலனைத்தரவில்லை என்பதில் சோனியாவுக்கு நிறைய ஏமாற்றமே. இந்த நிலையில் உதிரிக்கட்சிகளின் துணையோடு காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் பட்சத்தில் அந்தக் கட்சிகள் ஆட்டுகின்றபடியெல்லாம் ஆடவேண்டிவரும். இப்படி ஆட முற்பட்டால் மக்கள் மத்தியில் இன்னும் அதிகமாக கெட்ட பெயரைச் சம்பாதிக்க வேண்டிவரும் என்று அவர் நினைக்கின்றார். ஒரு நீண்டகால வேலைத் திட்டத்தில் காங்கிரஸ் கட்சியை மறுபடி ஒரு பலமுள்ள கட்சியாக கட்டி எழுப்புவதற்கு, காங்கிரஸ் எதிர்க் கட்சியில் இருப்பதுதான் நல்லது என்று அவர் சொல்லிவிட்டார். இப்போதைக்கு அவர் பேச்சைத் தட்டுமளவுக்கு காங்கிரஸ்காரருக்கு தைரியமில்லை. இதைவிட ஐக்கிய முன்னணியில் உள்ள கட்சிகள் பலவற்றுக்கும் கூட இருந்து தங்களுக்கு குழி பறித்து தங்கள் ஆட்சியைக் கவிழ்த்த காங்கிரசோடு கூட்டுச்சேர விரும்பவில்லை. சில பெரிய கட்சிகள் பி.ஜே.பி யை வரவிடாமல் தடுக்க காங்கிரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுக்கலாம் என தெரிவித்த போதிலும் இப்போதைக்கு காங்கிரஸ் ஐக்கிய முன்னணிக் கூட்டு—சாத்தியமில்லை என்ற நிலைதான் உள்ளது.**

**இந்திய அரசியலிலே முன்பெல்லாம், உத்தரப்பிரதேசம் தான், யார் பிரதமர், எந்தக் கட்சி ஆட்சியமைக்கும் என்பதைத் தீர்மானித்து வந்தது. ஆனால் இப்போது எப்படி ஆட்சியை கவிழ்ப்பது என்பதைத் தீர்மானிக்க, அதனுடைய முந்திய இடத்தை தமிழ்நாடு எடுத்துவிட்டது.**

**கடந்த தேர்தலில் தி.மு.க., த.மா.கா. கூட்டணி ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வருவதை தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. அது போதும் அந்த அரசை காங்கிரஸ் உத்தரப் பிரதேசம்) கவிழ்த்தபோதும் தி.மு.க. வே அதற்கு காரணமாக இருந்தது. தற்போது அ.தி.மு.க. கூட்டணி பாரதிய ஜனதா கட்சி ஆட்சியையும் வாஜ்பாய் பிரதமராக இருப்பதையும் தீர்மானிக்கும் கட்சியாக இருக்கிறது. இப்போது ஜெயலலிதாவின் பக்கம் வந்து இருப்பதால் அவரே அரசியல் கதாநாயகியாகத் திகழ்கிறார்.**

**பாரதிய ஜனதா அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து ஆதரவு தருவோம் ஆனால் ஆட்சியில் பங்கெடுக்க மாட்டோம் என்று ஜெயலலிதா சொல்லிவிட்டார். (பா.ம.க. வும், ம.தி.மு. கவும் பாரதிய ஜனதாவுக்கு ஆதரவு என்று எழுத்து மூலம் தெரிவித்துவிட்டன. பா.ம.க. அரசில் இணைந்தால் தலித் எழில்மலை மந்திரியாவார் என ராமதாஸ் அறிவித்துள்ளார்) அவர் மத்திய அரசில் பங்கெடுப்பதை விட மாநிலத்தில் தன்னை அவமானப்படுத்தி சிறையில் அடைத்த கருணாநிதியை பழிவாங்க வேண்டும் என்பதிலேயே அதிக விருப்பமுள்ளவராக இருக்கின்றார். பி.ஜே.பி அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு என்று சொல்வதே கருணாநிதி அரசைக் கலைக்க வேண்டும் என்று மறைமுகமாக வைக்கப்படும் ஒரு நிபந்தனைதான்.**

**இந்தத் தேர்தலில் அதிகம் பாதிக்கப்பட்டவர் கருணாநிதிதான். தி.மு.க. வை ஐக்கிய முன்னணி அரசிலிருந்து நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துத்தான் ஐக்கிய முன்னணிக்கான ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொண்டது. கருணாநிதியைக் காப்பாற்றுவதற்காகத்தான் முன்னாள் பிரதமர் குஜ்ரால் பதவிவிலகி பாராளுமன்றத்தைக் கலைத்து மறுதேர்தல் நடத்த ஜனாதிபதிக்கு சிபார்சு செய்திருந்தார். ஆனால் நடந்து முடிந்த தேர்தலில் தி.மு.க வால் அதாவது, கருணாநிதியால் வெற்றி பெறமுடியவில்லை. அவர் இப்போது கவனிப்பாரற்ற அரசியலை தீர்மானிக்கும் தகுதியை இழந்துவிட்ட மனிதராக மாறிவிட்டது மட்டுமல்லாது, தனது ஆட்சி கலைக்கப்படும் நாளை எதிர்நோக்கி இருக்கும் ஒரு மனிதராகவும் இருக்கின்றார்.**

**அநேகமாக இன்னும் ஒரு வார காலத்துக்குள் அத்தல் பிகாரி வாஜ்பாய் தான் பிரதமர் என்பது அறிவிக்கப்பட்டு விடும். அதற்கு அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் தனது பெரும் பான்மையை நிரூபிக்கும்படி அவர் ஜனாதிபதியால் கோரப்படலாம். தற்போது அ.தி.மு.க. கூட்டணியுடன் சேர்ந்து பாரதிய ஜனதாவுக்கு 252 இடங்கள் உள்ளன. வாஜ்பாய் தனது பெரும்பான்மையை நிரூபிக்க தன்னோடு இணைந்துக்கொள்ள இருக்கும் உதிரிக் கட்சிகளுக்கு பல விட்டுக்கொடுப்புக்களை செய்யவேண்டி இருக்கும்.**

**இந்திய அரசியலில் ஜனநாயகத்தை காக்க அரசியல் வாதிகள் 'பெரிய' காரியங்களை செய்வார்கள் என்பதால் எதையும் இதுதான் முடிவு என்று அறுதியிட்டுச்சொல்ல முடியாது. தனி ஒரு கட்சியின் நிலையான ஆட்சி இப்போதைக்கு இந்தியாவில் சாத்தியம் இல்லை என்பது கடந்த தேர்தலில் இந்தத் தேர்தலும் நிரூபணமாகிவிட்டதால் ஆட்களும் மாறலாம், ஆட்சிகளும் மாறலாம்; கூட்டுக்களும் மாறலாம். இப்போது உள்ள நிலை இதுதான்.**

*- கதிர்*

# வெளிவந்துவிட்டது!



*நேற்றைய விதை இன்றைய தரு!*
*இன்றைய தரு நாளைய கனி!!*

## வேகமாக விற்பனையாகின்றது




நாம் வணங்கும் தெய்வங்கள் வரிசையில்

# 'சிவபெருமான்'

**சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான்**

புலம் பெயர்ந்து அன்னிய மொழிகளில் கல்வி பயிலும்
இளம் சிறார்க்கு ரமோனாஸ் நிறவனத்தினர் அறிமுகம் செய்கிறார்கள்
ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளிலும்
தாய் மொழியான தமிழ் மொழியிலும் இப்போது கிடைக்கின்றது.

**கண்ணைப் பறிக்கும் ஓவியங்களுடன்**
**உலகெங்கும் விற்பனையாகின்றது!**

## கதை அழகு!
## படங்கள் அழகு!!
## புத்தகமோ கொள்ளை அழகு!!!

# வாங்கிவிட்டீர்களா?

இரண்டாவது பதிப்பாக வெளிவந்துவிட்டது

## சின்னப்பிள்ளையாரும் செம்மாங்கனியும்

**தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் ஆகிய மொழிகளில்**
**இப்பொழுது கிடைக்கிறது!**

**24 பக்கமும் முழு வண்ணத்தில் ஐரோப்பிய தரத்தில்!**
**உங்கள் பிரதிகளுக்கு முந்திக்கொண்டு ஏமாற்றத்தைத் தவிருங்கள்!**

**தொடர்புகளுக்கு:**

**லண்டன்:** 0181 518 6499
**ஜேர்மனி:** 0615 291 1624 0703 181 1641
**பிரான்ஸ்:** 01 60 22 48 73
01 42 05 71 49 (தமிழாலயம்)
**சுவிஸ்:** 011 322 82 74 (இந்து மன்றம்)
079 2094271 (சாயி ரேடேர்ஸ்)

## ஜேர்மனியில்

# வெளியீட்டு விழா!

**Commersbach குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில்**
**எதிர்வரும் 11.03.1998 புதன்கிழமை மகாமக விசேஷ பூசையைத் தொடர்ந்து மாலை 8.00 மணியளவில் இரு புத்தகங்களின் வெளியீட்டு விழா நடைபெறும்.**

தலைமை உரையும் ஆசியுரையும்:
சாமிநாத சர்மா அவர்கள்.
வெளியீட்டுரை: செந்தமிழ்க் கோடையிடி குமரன் அவர்கள்
விமர்சன உரை: திரு. விவேகானந்தன் B.A. (சூரிசி)
நன்றியுரை: திரு. எஸ். ரவீந்திரன் ரமோனாஸ்

அடுத்த தலைமுறையின் அறிவு வளர்ச்சியில்
ரமோனாஸ் நிறுவனத்தின் உலகளாவிய பணி

கலை நயம் மிக்க ஓவியங்களுடன் அதி உன்னத தரத்தில்
சங்கீத - நடன - மிருதங்க அரங்கேற்ற மற்றும் கலைவிழா
மலர்களைச் சிறந்த முறையில் தயாரித்து வழங்குவோம்

தொடர்புகளுக்கு:

**ரமோனாஸ்**
**வெளியீட்டகம்**




என்ன பிள்ளையள் விசயம் தெரியுமே....? உங்கின இரண்டு மூண்டு நாடுகள் தங்கட இருப்பில இருந்த பவுண் கொஞ்சத்தை வெளிச்சந்தையில விட்டாலும் விட்டினம், கழுதை தேஞ்சு கட்டெறும்பா போன கணக்கா அதின்ர விலையும் எல்லோ சரிஞ்சு போய்க்கொண்டிருக்கு போல கிடக்கு! இந்த இறக்கத்தல உங்கின பவுணுகளை வாங்கி பதுக்கி வைச்சிருந்தவையின்ர நிலையும் இலவுகாத்த கிளியின்ர கதையா போக, இதுக்கை வட்டிக்கு விடுறவையும் பொறுப்புக்குடுத்த நகையின்ர பெறுமதி குறைஞ்சுபோச்செண்டு கடன்காரரை விட்டுக் கலைக்கினமெண்டா பாருங்கோவன்.

அதெப்படித்தான் விழுந்துகொண்டு போனாலும், அதில இருக்கிற மோகம் எங்களை விட்டுப் போறதெண்டா நாய்வாலை நிமித்தினதுக்கு சரிதான் பாருங்கோ. இல்லாட்டி இந்த விலை இறக்கத்திலையும் இவ்வளவு நம்பிக்கையோட புதுசுபுதுசா கடை 'கோர்ட்"டுக்குப் போனாலும் சாட்சிக்கு போகாதையெண்டு சொல்லுறவையாக்கும். போனச்சு எனி நாய்வேசம் போட்டா குரைச்சுத்தானே ஆகவேணும்.

சரியெண்டு உங்கின விசாரிச்சு பெடியனை தேடிப்பிடிச்சுக் கேட்டா, அவனும் என்ன செய்யிறது? தமக்கையை முதல் கூட்டியாறனெண்ட ஏஜென்சிக்காரனும் காசை வேண்டிப்போட்டு ஏமாத்தினதால, வேறையொருத்தரை பிடிச்சுக் கூப்பிட்டது, கலியாணவீட்டுச் செலவெண்டு எக்கச்சக்கமா கடன் பட்டதும் இன்னும் குடுக்க வேண்டிக்கிடக்குதாம். அதாலதான் சொன்னதை செய்யமுடியேலை, வலுகெதியா குடுத்துப் போடுறன் எண்டுறான். அதுசரி மாப்பிள்ளையை ஒரேயடியா விலை குடுத்து வாங்கிறதை விட்டுட்டு இப்பிடி 'கிறடிட்"டுக்கு வாங்கிப்போட்டு கட்டி முடிக்காட்டி வித்தவை விட்டுவைப்பினமோ?

காய்ச்ச மரத்துக்கு கல்லெறி விழுகிறது சகசம்தானே. ஏதோ நீயும் அந்த நேரம் செய்யிறனெண்டு சொல்லிப்போட்டாய். இந்த பவுண் விலை வீழ்ச்சியோட எண்டாலும் சொன்னதை செய்துபோடு எண்டன். வேறை என்னத்தை நான் சொல்ல முடியும்.

'உண்பது நாழி, உடுப்பது நாலு முழம். எண்பது கோடி நினைத்து எண்ணுவன" எண்டு அந்த நாளையில ஔவையார் பாடி வைச்சதும் சரிதான் கண்டியளோ. அதுக்கா எங்கடை தேவையளை நிவர்த்தி செய்யிற

# என்ன விலை...? என்ன விலை...? சொன்னால் வாங்கலாம்...

யள் முளைச்சுக் கொண்டிருக்க முடியுமே? ஆனாலும் இந்த விலை வீழ்ச்சியில அதிகம் சந்தோசப்படுறவை யாரெண்டா சில அண்ணாமாரும், தம்பிமாரும்தான் எண்டா ஆச்சரியமில்லை!

**நாப்பதுபவுண் ஐம்பது பவுண் எண்டு நகையளை மட்டும் கேட்டு விக்கப்படுற மாப்பிள்ளையளை இப்போதைக்கு வாங்கிறது கொஞ்சம் சுலபம்தான். ஆனாலும் இந்தபவுண் வீழ்ச்சியைப் பாத்து அவையளும் தங்கட நி(வி)லையை மாத்தினா நாங்களும் என்ன செய்ய முடியும்?**

ஏனெண்டா தெரிஞ்ச பெடியனொருத்தன் தன்ர செலவில தமக்கையை கூப்பிட்டுக் கட்டிக்குடுத்தவன். அதெல்லாம் முடிஞ்சு வருசம் மூண்டுக்கு மேலையாகுது. அண்டைக்கு உங்கின போறவழியில பெடியன்ர தமக்கையை சந்திக்க முடிஞ்சுது. அப்பதான் பெடியன் எப்பிடியிருக்கிறான் எண்டு கேட்டு வைக்க, அவசொன்னா "அவன் தனக்கு கலியாணம் பேசேக்கை தாறன் எண்டு சொன்ன நகையில மிச்சம் இன்னும் தரேலையாம். இதால அவற்ரை ஆக்கள் புறுபுறுத்தபடி, நீங்களும் சம்பந்தம் பேசேக்கை பொறுப்பு நிண்டனியள், அவனிப்ப வீட்டுப் பக்கமும் வாறேல்லை, ரெலிபோனும் எடுக்கிறேலை. ஒருக்கா கண்டா, பேசின மிச்சம் எப்ப தருவானெண்டு விசாரிச்சு சொல்லுறியளோ" எண்டா. இது எனக்கு தேவையே? இதுக்குத்தான் துக்கு சீதனம் எண்ட பேரில இன்னொருத்தரை மொட்டையடிக்கிறது எந்த விதத்தில நியாயம் எண்டுநான் எனக்கு விளங்கேலை.

இப்படித்தான் எங்கட கலியாண வீடொண்டில வெள்ளைக்காரர் ஒருத்தரை சந்திக்கேக்கை, பொம்பிளை போட்டிருந்த நகையளைப் பாத்துட்டு 'நிறைய நகையள் போட்டிருக்கிறா... அன்பளிப்பா ஆரும் குடுத்ததோ" எண்டான் பாவி. அவையள் அவையள் விரும்பிக் குடுக்கிறதுதானே அன்பளிப்பு. இப்பிடி கட்டாயமாப் போடச்சொல்லுறதெல்லாம் எப்பிடி அன்பளிப்பெண்டு சொல்ல முடியும்? பின்ன நானும் 'இது அன்பளிப்பில்லை. தாய் தேப்பனோ, சகோதரங்களோ கட்டாயம் குடுக்கவேண்டிய சீதனம், இல்லாட்டி கலியாணமே நடக்காதெண்டு' எங்கட கலாச்சார சீரகேட்டில கொஞ்சத்தை விளக்கி வைச்சன். அவர் ஆச்சரியத்தோட கேக்கிறார் 'அப்ப இது இன்னொரு மனிசனோட உழைப்பை சுரண்டுற ஒரு அநாகரீகமான செயல் இல்லையா"வெண்டு. இதுக்கு நான் என்ன பதிலை சொல்லுறது? எத்தனை பேருடைய வாழ்க்கையே இதால சுரண்டப்பட்டிருக்கு. படிச்சுப்போட்டு எங்கட சமூகத்துக்கு வழிகாட்டியா இருக்க வேண்டியவையே தங்கட பட்டங்களைக் காட்டி இந்த விலையை ஏத்திக் கொண்டிருக்கினமெண்டு எங்கட கிரிசகேடுகளை எடுத்துச் சொன்னா, அவன் என்ன நினைப்பான் எண்டுபோட்டு கதையை வேறை பக்கம் திசை திருப்ப வேண்டியதாப் போச்சுதெண்டாப் பாருங்கோவன்.

எது எப்பிடியோ.... நாப்பதுபவுண், ஐம்பது பவுண் எண்டு நகையளை மட்டும் கேட்டு விக்கப்படுற மாப்பிள்ளையளை இப்போதைக்கு வாங்கிறது கொஞ்சம் சுலபம்தான். ஆனாலும் இந்தபவுண் வீழ்ச்சியைப் பாத்து அவையளும் தங்கட நி(வி)லையை மாத்தினா நாங்களும் என்ன செய்ய முடியும்?

**அருமைத்தம்பி**

## கொழும்பில் ஈழமுரசு ஏற்படுத்திய பரபரப்பு

*கடந்தவாரம் ஈழமுரசில் வெளிவந்த ஒரு செய்தி கொழும்பில் உள்ள பத்திரிகையாளர் மத்தியிலும், அரசியல்வாதிகள் மத்தியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.*

*கடந்த செவ்வாய்க்கிழமை மாலையில் ஈழமுரசு பாரிசில் வெளிவந்ததும் கொழும்பிலுள்ள பத்திரிகையாளர் ஒருவருடன் நெருக்கமான வாசகர் ஒருவர் அந்த செய்தியை இங்கிருந்து அங்கு தொலை நகலில் அனுப்பிவிட அந்தப் பத்திரிகையாளர் அதைத் தமது சக பத்திரிகையாளர்களுக்கு காண்பிக்க அது ஒரு பரபரப்பான 'செய்தி'யாகிவிட்டது.*

*யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகை அந்தச் செய்தியை தனது புதன்கிழமை வெளியீட்டில் பாரிஸ் ஈழமுரசில் வெளிவந்தது என்ற அடைமொழியுடன் தலைப்புச் செய்தியாக்கியது. கொழும்பிலிருந்து வெளியிடப்படும் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் அந்தச் செய்தியை மறுபதிப்புச் செய்தன.*

*சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளில் பத்தி எழுத்தாளர்கள் அந்தச் செய்தியை தங்களது பத்திக்குரிய ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டார்கள்.*


*அரசியல்வாதிகள் பலர் பத்திரிகையாளர்களுடன் தொடர்பு கொண்டு இந்தச் செய்தி உண்மையா என்று கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.*

*அப்படி பரபரப்பை உண்டாக்கிய செய்திதான் எது?*

*வேறொன்றுமில்லை...*

*பாரதிய ஜனதாக் கட்சியின் பொதுச்செயலாளர் திரு கோவிந்தாச்சாரி அவர்கள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருப் போம் என்றும், சிறீலங்கா தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவோம் என்றும் ஈழமுரசுக்குத் தெரிவித்த செய்தியே அது.*

## மரண அறிவித்தல்



தாயின் அரவணைப்பில் 23.03.69

இறைவனின் அரவணைப்பில் 21.02.98

### திரு. அருமைநாதர் டெஸ்மன்கிரி
(கொய்யாத்தோட்டம் - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புதுவீதி கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் சுவிஸ் சூரிச் மாநிலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அருமைநாதர் டெஸ்மன்கிரி 21.02.98 சனிக்கிழமை அகாலமரணமானார். அன்னார் காலம் சென்ற திரு. திருமதி அருமைநாதர்-திரேசா டெய்சி (இன்பம்) அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், திருமதி சேவியர் துரைநாயகம் சியாமளா(சுவிஸ்), டெவ்லின் தேவ் (தேவா -ஜேர்மனி), கஜீவ் றீகன் (இலங்கை), றோகான் சனா (சுவிஸ்), ஆகியோரின் சகோதரரும்; திரு சேவியர் துரைநாய்கம் அவர்களின் மைத்துனரும், சிரோமா, சிரோன் ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02.03.98 திங்கட்கிழமை சூரிச்சில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தாயக மண்ணில் பிறந்து தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரி பாசத்தில் வளர்ந்து அன்னியவன் நாட்டில் எம்மை பாதிவரை கூட்டி வந்து பாதியில் விட்டுச் சென்றீரே! உமது இழப்பினை இன்னும்தான் எம்மால் நம்ப முடியவில்லை! ஆனால் நடந்துதான் விட்டது.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*உமது திடீர் மறைவினால் அதிர்ச்சியுற்று வாடும் சகோதரர்கள், சகோதரி, மைத்துனர், மருமக்கள்.*

தகவல்:
மைத்துனர் - சேவியர் துரைநாயகம்
Rut, Vieux Chenes 7, 1700 Fribourg, Germany
Tel -079 -4491218.

# கஸ்தூரிசதங்கைஒலி நாட்டிய கலாலயத்தின் பத்தாவது ஆண்டுவிழா

## 147 மாணவர்கள் பங்கேற்ற நடனத்திருவிழா

சனிக்கிழமை 14.02.98 அன்று கஸ்தூரி சதங்கைஒலி நாட்டிய கலாலயம் தனது பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி நடன விழா ஒன்றை நடாத்தியது. கேர்ண நகரத்தின் பிஷபக் வீதியில் அமைந்துள்ள கலைமண்டபத்தில், தாயக மண்மீட்புப் போரில் விதையான மாவீரர்களுக்கு அமைதி வணக்கம் செலுத்தி, 'உலகத்தமிழர் இயக்கம் - யேர்மனி' யின் பொறுப்பாளர் காங்கேய மூர்த்தி அவர்கள் மங்கல விளக்கேற்றிவைக்க 'இறைவா உனக்கே முதல் வணக்கம்....' என்ற தெய்வீகப் பாடலுடன் விழா ஆரம்பமானது. முதற் பாடலின்போதே சபை அமைதியாகி, கலைக்குள் ஆழ்ந்த நிசப்தத்தைக் தாணக்கூடியதாய் இருந்தது.

யேர்மனியின் பல பாகங்களிலும் உள்ள சதங்கையொலி நாட்டியகலாலயத்தின் 147 நடன மாணவிகளும் 57 நடனங்களை நேர்த்தியாக வழங்கினர்.

சிறப்புவிருந்தினராக வருகை தந்திருந்த வணபிதா ஜெயசேகரம் அடிகளார் பேசும்போது, 'அதிகமான மாணவரைக் கொண்டுள்ளபோதும், அடிக்கடி அரங்கேற்றங்களைச் செய்யாது, தகுதி வாய்ந்த மாணவியருக்கு மட்டுமே அரங்கேற்றம் நடத்துவதும், கடின உழைப்பும், இன்னும் முன்னேறவேண்டும் என்ற ஆர்வமும்தான் சதங்கையொலி நாட்டியகலாலயத்தின் குருவான சாவித்திரி இமானுவேல் அவர்களின் வளர்ச்சிக்கும் திறமைக்கும் காரணம்' என்றார்.

அன்னமே.... என்ற பாடல், வலஜி ராகத்தில் மிதந்த போது இசையோடு அசைந்த சிலைகளாக உயிர் பெற்ற வர்ணம், நேர்த்தியையும் இறுக்கமான தாளக்கட்டுகளையும் உணர்வின் உருக்கமான பிரதிபலிப்பையும் முழுமையாகத் தந்து, பரதக் கலையின் ஆர்வலர்களை நிமிர்ந்து இருக்கச் செய்தது. இது மாணவியர்களின் நடனம் என்ற எல்லை கடந்து முழுமையான பரதம் என்னும் தன்மையைத் தொட்டு நின்றது.

காதலர்களின் மென்மையான அன்பின் தூய்மையான நெருக்கத்தை, கிராமியத் தனத்தோடு கூடிய கேரள நடனம் வெளிப்படுத்தியது.

பிருந்தாவன சாரங்கா ராகத்தில் ஆடப்பட்ட தில்லானா துரிதமான தாளத்தின் அவசரமான காலப்பிரமாணங்களைப் பதட்டமின்றி லாவகமாகச் செய்து, மாணவியர் பாராட்டைப் பெற்றனர்.

ஒரு முறை வந்து பார்த்தாயா?.... என்ற பாடலுக்கு பரதத்தின் தன்மை மாறாது நடனம் தந்தபோது, கண்களை அகலவிரித்து, பார்வையாளர்கள் அபிநயித்தது, ஆங்காங்கே தென்பட்டது, இது அந்த நடனத்தின் வெற்றி என்றே கூற வேண்டும். ஒரு முறை வந்து பார்த்தாயா? ....என்ற வரிகள் வந்த ஒவ்வொரு முறையும் வெவ்வேறு பாவனைகளைச் செய்து காதலின் ஏக்கத்தையும் ஊடலையும், இணைந்தபின் ஏற்பட்ட கூடலின் நாணத்தையும் தாளம் பிசகாது பரதத்தின் நியதி மாறாது கொடுத்த விதம், அதனைப் பயிற்றுவித்த ஆசிரியரின் திறமைக்கு ஒரு முத்திரையாகும்.

பல நடனங்களுக்குள் யேர்மனிய மாணவர்களும் தென்பட்ட போதும், ஒரு நடனத்தை இரு யேர்மனிய மாணவர்கள் தனித்து வழங்கினர். குழைவு குறைந்து விறைப்புத்தன்மை தென்பட்டது. இருந்தும் அவர்களது தாள சுத்தம் தெரிந்தது.

இறுதியாக இடைநிறுத்தம் எதுவுமின்றி, பத்து நடனங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டன. பத்தும், பத்து வித்தியாசமான நடவடிக்கைகளைக் கொண்டதாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

கேளுங்கள் கொடுக்கப்படும்... என்ற பாடலோடு இது ஆரம்பம் ஆனது. யேசுநாதரின் வாழ்க்கையை நமக்குப் போதித்த நாட்டிய நாடகம் போல் இந்தப் பாடல் உருவாக்கப்பட்டு இருந்தது. அர்த்தம் பொதிந்த நடனவடிவமைப்பு பிரமிப்பூட்டியது. யேசு மரணித்த போது பார்வையாளர்களின் கண்கள் குளமானதைக் காணக்கூடியதாக இருந்தது. உன்னை மறப்போமா... என்ற விடுதலைநடனம் தியாகி தீபனின் விடுதலைப்பணியைக் கண்ணுக்குள் கொண்டு வந்து நெஞ்சங்களைக் கனக்கச் செய்தது.

கேரள மோகினி நடனத்தின் வித்தியாசமான அலங்காரமும் தாளக்கட்டும் அசைவும் மாறுபட்ட அனுபவத்தை தந்தது.

மன்னவன் வந்தானடி.... என்ற பாடலுக்கு,மன்னவனே இல்லாமல் அவனை மேடையில் காட்டிய யுக்தி, கட்டியம் கூறி ஆடிய நடனக்கலைஞர்களின் வெற்றி என்றே கூற வேண்டும். சிலைகளாய் செதுக்கப்பட்ட பண்டைய தூண்களை அலங்கரித்த சிற்பங்களெல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. கொஞ்சும் சதங்கையொலி... என்ற நடனத்தில் சதங்கையொலிக்கு கால் பதித்து, தாளத்தின் நேர்த்தியைப் பிசினின்றித் தந்த நர்த்தகிகள், ஒலியின் அசைவைக் கலையிற் குழைத்து, கலையமுது ஊட்டினர் என்றே கூற வேண்டும்.

நீண்ட ஒரு ராகஆலாபனைக்கு நடனஜதிகளை உண்டு பண்ணி, துரிதமாகவும், கலை இழையோடவும் தந்தபோது, நடனத்தில் இத்தனை ஜாலம் புரியலாமா! என்று அதிசயத்தினர் பார்வையாளர்கள்.

நாதஸ்வர இசை, தவிலின் லயம் ஆகிய இசையின் உணர்வுகளுக்கு நடனம் எப்படி மெருகூட்டும் உயிரூட்டும் என்பதைக் காட்டியிருந்தார் இந்தக் கலாலயத்தின் குருவான சாவித்திரி இமானுவேல்.

கண்ணன் அமைத்த தனியிசைக்கு உருவான 'ஒற்றுமை சிறகடிப்பு' என்ற இசை நடனம். ஒரு கதையை எப்படி நடன வடிவத்துள் கொண்டு வருவது என்று போதித்த படைப்பாக அமைந்தது.

சிறந்த ஓவியரும் சிற்பியுமான சதீஷ் அவர்கள் வடிவமைத்த சதங்கையொலிச் சின்னம் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் அதனை வழங்கினார்.

700-க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் மண்டபத்தை நிறைக்க, விழா விறுவிறுப்பாக நடைபெற்றது. இடைவெளியின் போது சிற்றுண்டிகள் விற்பனையான பணம் 1200 டி.எம் புனர்வாழ்வுக்கழக யேர்மனிக் கிளையின் பிரச்சாரப்பொறுப்பாளர் சிவகணேசன் அவர்களிடம் வழங்கப்பட்டது. 10 வருடமாக அவரது நிகழ்ச்சிகளுக்கு அறிவிப்பாளராகப் பணியாற்றிய ரூபன் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.

சதங்கையொலி நாட்டிய கலாலயத்தின் நிர்வாகியும் குருவுமான சாவித்திரி இமானுவேல் அவர்கள் வழங்கிய நன்றியுரையில், 'ஏழு மாணவர்களுடன் ஆரம்பித்த எனது நடனப் பள்ளி, இன்று 10 வருடங்களின் பின் 150 இற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்டுள்ளது. எனது முன்னேற்றத்திற்கு விடுதலைப்புலிகள் அமைப்பே ஆர

ணம். அதன் உதவியினூடு நான் பல சிறந்த படைப்புகளைத் தந்துள்ளேன். இன்று நான் பலருக்குத் தெரியும் ஒரு படைப்பாளியாக இருப்பதற்கு அவர்களே காரணம். நான் இன்னும் படிக்க வேண்டியது ஏராளம்' என்றார்.

மொத்தத்தில் இந்த நிகழ்ச்சி நடன ஆர்வலர்களுக்கு ஒரு பெரிய விருந்து.

- கா.சிவநாதன்

உங்கள் அனைத்து விதமான
அச்சுத் தேவைகளுக்கும்
(மக்கள் கடை முன்பாக)
தமிழ் அச்சகம்
வெளிநாடுகளுக்கான
அச்சுவேலைகள்
குறைந்த விலை
வண்ண நிறங்களிலான
அச்சுவேலைகள்
சிறந்த தரம்
அனைத்து வேலைகளும் குறித்த தவணை
பன்னெடுங்காலமாய் அனைத்து உள்ளங்களின் நன்மதிப்பைப்பெற்ற
தமிழ் அச்சகம் புதிய நிர்வாகத்தில் சிறப்பு விலை கழிவுடன்
திங்கள் முதல் - சனி வரை 10.00 - 22.00 மணிவரை
60, Rue Louis Blanc, 75010 Paris - Tel & Fax: 01 42 09 60 64

# புகலிட நிகழ்வுகள்

## லண்டன் மரதனோட்டப் போட்டியில் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் 35 தமிழர்கள்

15.03.98 ஞாயிற்றுக்கிழமை Hasting இல் நடைபெறும் 13 மைல் தூர மரதன் ஓட்டப் போட்டியிலும், சித்திரை 26 இல் London இல் நடைபெறும் மரதன் ஓட்டப்போட்டியிலும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் சார்பில் 35 தமிழர்கள் பங்குபற்ற உள்ளனர்.

கடந்த ஆண்டு இப்போட்டியில் TRO வின் சார்பில் பங்குபற்றி 10 தமிழர்களால் சேர்க்கப்பட்ட 6820 பவுண்ஸ் பணம் தமிழீழப் பிரதேசத்தில் கல்வி வசதி இழந்து நிற்கும் சிறுவர்களுக்கு ஆரம்பப் பாடசாலைகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

இம்முறை சேர்க்கப்படும் நிதி, யுத்தத்தினால் அங்கவீனர்களான சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிக்க பயன்படுத்தப்படும் என தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரித்தானியக் கிளையினர் தெரிவித்துள்ளனர்.



தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சார்பில் Hesting லண்டன் மரதன் ஓட்டப்போட்டியில் பங்குபற்றி நிதி சேகரிக்கும் ஓட்ட வீரர்கள். இடமிருந்து வலம் (முன் வரிசை) அ.ஜெயசீலன், ஏ.ஜே. டெனடிற், க.பரணிதரன், வி.ஆனந்தசோதி, ம.சிவகுமாரன், ப.ஜெயந்தன், ப.வாணன், இடமிருந்து வலம் (பின்வரிசை) எஸ்.ஈஸ்வரநாதன், என்.புஸ்பநாதன், ரி.கயநாதன், என்.தர்மகுமார், எம்.இராமதாஸ், என்.தமிழழகன், ரி.ரவி, என்.கிருபானந்தன், கே.கலாவாணன், பி.பிரபாகரன், எம்.வசீகரன், ஆர்.யோகேந்திரன், ரி.திலீபன், கே.சுதர்சன், ஏ.கிருஷ்ணமூர்த்தி. மேலும் என்.பத்மநாதன், ரி.சசிகுமார், எஸ்.சச்சிதானந்தன், எஸ்.கேசவன், எம்.ராஜேந்திரன், பி.பிரதீபன், என்.செல்வரமேஸ், எம்.டிலீப்குமார், எஸ்.பவதீஸ்ரரன், ரி.குணரூபன், எஸ்.செல்வரட்ணம், எஸ்.முருகானந்தன், சி.சுரேஷன்.

## குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம்

### 1998-ம் ஆண்டுக்கான புதியநிர்வாகிகள்

பாரிசிலுள்ள குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் 1998-ம் ஆண்டுக்கான தனது புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்துள்ளது.

தலைவர்: திரு.ம.அன்ரன், செயலாளர்: திரு.ச.ரமணீதரன், பொருளாளர்: திரு.அ.புஸ்பராஜன், உபதலைவர்: திரு.அ.ஜென்றோ, உபசெயலாளர்: திரு.கி.கிறிஸ்ரியன் (சவிரியான்) விளையாட்டுத் தலைவர்: திரு.ப.ஜோனதாஸ், உதைபந்தாட்டப் பயிற்சியாளர்கள்: திரு.கி.தாஸியஸ், திரு.ஜே.றஸ்கின், மெய்வல்லுனர் பயிற்சியாளர்: திரு.எ.யூட்ஸ், ஆலோச்கர்கள்: திரு.சிறேசியன், திரு.கு.பீலிக்ஸ், கணக்காய்வாளர்: திரு.ஜெரா, நிதி சேகரிப்பாளர்கள்: திரு.பு.நிக்ஸனியஸ், திரு. குவாட்டஸ், திரு. யூட்சன், சம்மேளன பிரதிநிதிகள்: திரு.அ.ஜான்சன், திரு.ப.ஜோனதாஸ், நிர்வாக உறுப்பினர்: திரு.குமார், திரு.சந்திரன் (எட்லின்), திரு.பத்மநாதர், திரு.ம.ஜஸ்ரின், திரு.ஆனந்தன், திரு.மி.கிறிஸ்துராசா, கலைப் பொறுப்பாளர்: திரு.டாமியன் சூரி. உதவி: திரு.றோமன் அன்ரனி, போஷகர்கள்: திரு.எ.சாள்ஸ், (உரிமையாளர், பத்மா ஸ்ரோர்ஸ்), திரு.சக்திகுமார், (உரிமையாளர், சக்தி வீடியோ), திரு.சந்திரகுமார், (உரிமையாளர், குமார்ஸ்தாபனம்)

# பூவரசின் நூலகக் கண்காட்சி

ஜேர்மனியில் பிறேமனிலிருந்து வெளிவரும் பூவரசு சஞ்சிகையின் கலை இலக்கியப் பேரவை எதிர்வரும் 14,15,16 -ம் திகதிகளில் நூலகக் கண்காட்சி ஒன்றை நடாத்த உள்ளது. இதில் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள், சஞ்சிகைகள் பத்திரிகைகள் ஆகியவை வைக்கப்படவுள்ளன.

பிறேமன்-ரேனிவர் கலாச்சார நிலையத்தில் இக் கண்காட்சி இடம்பெறும். புலம் பெயர்ந்துவாழும் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் இக் கண்காட்சியில் முக்கிய இடத்தைப்பெறும். மேலும் இதுவரை வெளியான பூவரசு இதழ்களுடன், பூவரசுக்குக்கிடைத்த சஞ்சிகைகளையும் இக்கண்காட்சியில் காணலாம். இதன்மூலம் இலக்கியத்தை நேசிக்கும் உள்ளங்களுக்கு இலக்கிய அறிமுகத்தை ஏற்படுத்த பூவரசு முயற்சிக்கின்றது. இக்கண்காட்சியின்போது இராஜன் முருகவேல் எழுதிய 'யௌவனமில்லாத யதார்த்தங்கள்' என்ற சிறுகதைத்தொகுதியும் வெளியிட்டுவைக்கப்படும்.

பிறேமனிலிருந்து முதன்முதல் வெளிவரும் முத்துமாலை என்ற வீடியோப் பத்திரிகையும் இவரால் வெளியிட்டு வைக்கப் படவுள்ளது.

# சிறுவர்கள் தயாரித்த வீடியோ பத்திரிகை

ஜேர்மனியில் முதன் முதல் சிறுவர்களினால் தயாரிக்கப்படும் முத்துமாலை வீடியோ பத்திரிகை எதிர்வரும் 14-ம் திகதி முதன் வெளிவரவிருக்கின்றது. குகன், ஆனந், அசோக் அகிய மூவரும் இணைந்து தயாரிக்கும் இந்த வீடியோ பத்திரிகையில் பல்சுவை அம்சங்களும் நிறைந்திருக்கும்.

தாயக உணர்வுகளையும், உலகியல் விந்தைகளையும். இலக்கியப் படைப்புகளையும் தாங்கி இந்த வீடியோ மலர் வெளிவருகின்றது. நாடகங்கள், இசைக்கச்சேரிகள் என முத்தமிழையும் இதில்காணலாம்.

பிரபல எழுத்தாளர்களின் ஆக்கங்கள், இலக்கியச் சந்திப்புகள், உரையாடல்கள், பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள், சினிமா விமர்சனங்கள் ஆகியவையும் இம்மலரில் சங்கமிக்கும்.

மேலதிக விபரங்களுக்கு:
**MM Video Movies**
**J. Kulathasan**
**Amsterdamer Str-29,**
**28259 Germany**
**(Tel: *0421 - 589625*)**

# முன்ஸ்ரர் தமிழாலய விழா

(வீ.ஆர். வரதராஜா)

இங்கு வாழும் தமிழ் பிள்ளைகள் தங்கள் தாய் மொழி, கலை கலாச்சாரங்களில் ஆர்வமாக இருப்பதுகண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இவர்களுக்கு உதவி செய்ய நாம் தயாராக இருக்கிறோம் என முன்ஸ்ரர் மாநகர முதல்வர் திரு.கூவர் முன்ஸ்ரர் தமிழாலய விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஜேர்மனி உலகத் தமிழர் இயக்க கல்விப்பணியின் கீழ் இயங்கும் முன்ஸ்ரர் தமிழாலய விழா ஆரம்பமாகியது. மேற்படி கல்விப்பணிப் பொறுப்பாளர் திரு.இரா. நாகலிங்கம், முன்ஸ்ரர் மாநகர முதல்வர் ஆகியோர் மங்கல விளக்கேற்றினர்.

முன்ஸ்ரர் தமிழாலய நிர்வாகி திரு.இரா.இராசகுலம் வரவேற்புரை வழங்க கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. விடுதலைப் புலிகள் ஜேர்மனிப்பணியக நடன ஆசிரியையும் முன்ஸ்ரர் தமிழாலய நடன ஆசிரியையுமான செல்வி அற்புதராணி கந்தசாமியின் மாணவிகள் நடனங்களை வழங்கி இருந்தனர்.

நடன நிகழ்ச்சிகளை மாறி மாறி வழங்கி தமிழாலய விழாவை நடனமணிகள் சிறந்த கலை விழாவாக மாற்றினர். நடனங்கள் ஒவ்வொன்றும் சுறுசுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் இருந்தன.

ஆண்டு ஒன்று, ஆண்டு இரண்டு மாணவர்களின் அபிநயப் பாடல், ஆண்டு மூன்று மாணவர்களின் தமிழ்ப்பெரும் புலவர்கள் அறிமுகம், பாட்டு ஆகியவை இடம்பெற்றன. பாலர் வகுப்பு மாணவர்களின் பாட்டு, ஆண்டு நான்கு மாணவர்களின் குறுநாடகம் ஆகியவை சபையோரின் பாராட்டினைப் பெற்றய. 'புலம்பெயர் வாழ்வில் புகலிட தமிழர்கள் குற்றவாளிக் கூண்டில்' என்ற 'ஆண்டு ஐந்து' மாணவர்களால் நடாத்தப்பட்ட வழக்காடு மன்றம் சுறுசுறுப்பாக இருந்தது. 'ஒரு குழந்தையை ஒழுக்கமுள்ளவனாக உருவாக்குவது குடும்பமா? பாடசாலையா?' என்ற ஆண்டு 7 மாணவர்கள் நடாத்திய பட்டிமன்றம் சபையோரின் பாராட்டைப் பெற்றது.

நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் 'நிதர்சனம்' என்ற நாடகம் அமைந்தது. முன்ஸ்ரர் தமிழாலய மாணவர்களின் நடிப்பில் உருவான நாடகம் இது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்விப் பணிப்பொறுப்பாளர் திரு.இரா. நாகலிங்கம், முன்ஸ்ரர் தமிழாலயம் ஜேர்மனியில் கல்விப்பணி நடாத்தும் தமிழாலயங்களில் மூன்றாமிடத்தை வகிப்பதாகவும்,அடுத்த ஆண்டு முதலிடத்தை வகிக்குமென நம்புவதாகவும் மண்டபம் நிறைந்த கைதட்டலின் மத்தியில் தெரிவித்தார்.

'இங்கு எமது வாழ்வு நிரந்தரமல்ல. எமக்கென தமிழீழத்தாயகமே நிரந்தரமானது. அதனால் நாம் எமது பிள்ளைகளுக்கு தமிழ்மொழி, கலை - கலாச்சாரங்களை கற்பிக்க வேண்டும். நாளை எமது பிள்ளைகள் தாயகத்திற்குச் சென்று மொழி புரியாமல் தடுமாறக்கூடாது. இங்கு தமிழ் மொழி கற்பதால் பிள்ளைகள் ஜேர்மன் மொழி கற்கவும் இலகுவாகின்றது. 'உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்கள் தமது முகவரியைத் தொலைத்துவிடாமல் தமிழர்களாகவே இருக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.' என்றார் திரு.இரா நாகலிங்கம்.

இதனையடுத்து முன்ஸ்ரர் தமிழாலயம் பதினொரு ஆசிரியர்கள் கல்விப்பணிப் பொறுப்பாளரால் கௌரவிக்கப்பட்டனர். மேலும் சேவை புரிந்த இரண்டு முன்னாள் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். இறுதியில் ஆசிரியை ரொசலின் யோகநாதனின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் அனைத்தும் முடிவுற்றன.




# சுவிஸ் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு கல்விச் சேவையின் 3வது ஆண்டு பொதுக்கூட்டம்

சுவிஸ் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கல்விச் சேவையின் 3-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 16.02.98 17.40மணிக்கு சூரிச்சில் நடைபெற்றது. இதில் சுவிசில் இயங்கும் 54 பாடசாலைகளைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், ஆசிரியைகள் உட்பட பாடசாலை நடாத்துனர்களும் கலந்துகொண்டனர். அமைதி வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கூட்டத்தில் எமது சிறார்களின் நலன் கருதி பல ஆரோக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. கல்விச் சேவையினரால் முன் வைக்கப்பட்ட பல திட்டங்களுக்கு ஆசிரிய ஆசிரியைகள் தங்கள் கருத்துக்களையும் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் பாடப் புத்தகங்களில் ஏற்பட்ட சில தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டதோடு இனிமேல் அவ்வாறான தவறுகள் நடக்காது பார்த்துக் கொள்ளப்படும் என உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுக் கல்விச்சேவை நிர்வாகிகள் உறுதி கூறினர்.

இனி வருங்காலங்களில் கல்விச் சேவையினரால் வெளியிடப்படும் பாடப் புத்தகங்களோடு கு.வி அச்சகத்தினரால் வெளியாகும் புத்தகங்களை அடிப்படையாக வைத்து மாணவர்களுக்கு கல்வி புகட்டப்பட வேண்டும் எனவும் ஆசிரிய, ஆசிரியைகளுக்கு வேண்டுகோள் விடப்பட்டது.

அத்தோடு உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு சுவிஸ் கிளையினரால் நடாத்தப்படும் வருடாந்த பொதுப் பரீட்சையில் தற்போது தமிழ்ப்பாடம் மாத்திரமே நடாத்தப்படுகின்றது. அடுத்தாண்டு முதல் சைவ சமயம் கிறிஸ்தவ சமயப் பாடப் பரீட்சைகள் நடாத்தப்படும் என்றும், தமிழ் பேசும் முஸ்லீம் சமய சிறார்களின் நலன் கருதி அவர்களுக்கு பரீட்சை நடாத்துவதற்கான ஒழுங்குகளும் செய்யப்படும் என கல்விச் சேவையினர் தெரிவித்தனர். இனி வரும் காலங்களில் பரீட்சையில் பங்குபற்றும் மாணவ மாணவியர்க்கு சான்றிதழ்கள் வழங்கப்படமாட்டாது எனவும், புள்ளி விபரங்கள் தேர்ச்சி அறிக்கை மூலம் ஐரோப்பாவிலிருந்து வெளியாகும் தமிழ் ஏடுகள் மூலமும் தெரியப்படுத்தப்படும் எனவும் கூறப்பட்டது. தமிழ் பாடசாலை நிர்வாகிகளின் வேண்டுதலுக்கிணங்க புள்ளிகள் சுவிஸ்பாடசாலைகளின் அடிப்படையிலேயே இடப்பட்டு புள்ளி விபரங்கள் சுவிஸ் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் தேர்ச்சி அறிக்கையில் இடப்படும் எனவும் தெரிவித்தனர்.

இவற்றோடு விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப்போட்டிகள், பரதநாட்டியப் போட்டிகள், வயலின் போன்ற எமது பாரம்பரிய கலை கலாச்சாரப் போட்டிகளும் நடாத்தப்படும் எனக் கூறியதோடு, சுவிஸ் கிளையினரால் 13 வயதிற்கு மேற்பட்டோருக்கான விளையாட்டுப்போட்டிகள் நடாத்தப் படவுள்ளதாகவும், எமது இனத்தின் விடுதலையைக் கருத்தில் கொண்டு எமது எதிர்காலத் தூண்களான மாணவர்கள் மாணவரமைப்பில் சேரமுன் வர வேண்டும் எனவும் 13 வயதிற்கு மேற்பட்டோர் இதில் சேர்த்துக்கொள்ளப்படுவர் எனவும் இதற்கு ஆசிரிய ஆசிரியைகள் உட்பட பெற்றோரும் முன் வர வேண்டும் எனவும் மாணவரமைப்பு பொறுப்பாளர் கேட்டுக்கொண்டார்.

## நீங்களும் தொழிலதிபர் ஆகலாமே?

இவ்வாண்டின் நடுப்பகுதியில் எமது நிறுவனம் தமது சேவையினை இந்திய வர்த்தகச் சந்தையினை நோக்கி நகர்த்தவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

1959-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட எமது நிறுவனம், தற்போது சர்வதேச ரீதியில் 70 நாடுகளிலும் பிரதேசங்களிலும் தனது சேவையினை விஸ்தரித்துள்ளது. கடந்த வருடம் மட்டும் 6.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை வியாபார புரள்வாக ஈட்டியுள்ளது.

இப்போதுநாம் இந்தியாவிற்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் வியாபார இயக்குநர்களைத் தேடுகிறோம். உங்களுக்கு எமது முயற்சியில் ஆர்வமிருப்பின் அல்லது குறைந்த மூலதனத்துடன் புதிய தொழில் முயற்சி ஒன்றை நீங்கள் தொடங்க திட்டமிட்டாலோ உதவக் காத்திருக்கிறோம்.

தொடர்புகளுக்கு: **T.K.C. International**

**24 Allée du Clos Fleury, Résidence les Séquoias, 45000 Orleans, France.**
**Tel: (33) 02-38629083 / Fax: (33) 02-38770485**

# உலகக்கோப்பை உதைபந்தாட்டம் - 1998

FRANCE 98

## ஆர்ஜென்ரீனா

உதைபந்தாட்ட உலகில் முடிசூடா மன்னனாக விளங்கிய டியகோ மரதோனாவை பிரதிநிதித்துவப் படுத்திய நாடு என்ற முறையிலும், இன்னும் எத்தனையோ தலைசிறந்த வீரர்களை உருவாக்கிய நாடும், வட அமெரிக்காவில் உதைபந்தாட்டத்திற்கு புதுநடை எழுதியவைகளுள் ஒன்றுமான ஆர்ஜென்ரீனா பதினோராவது முறையாக உலகக்கிண்ண இறுதிச்சுற்றிற்கு தெரிவாகியுள்ளது. சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் வரிசைப் படுத்தலில் பதின்மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ள இந்நாடு, இம்முறை இறுதிச்சுற்றிற்கு தகுதி பெறுவதற்கு பெரும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டி இருந்தது.

1930, 1934, 1958, 1966, 1974, 1978, 1982, 1986, 1990, 1994-ம் ஆண்டுகளில் இறுதிச்சுற்றிற்குத் தெரிவாகிய இவர்கள், தமது நாட்டில் 1978-ம் ஆண்டு நடைபெற்ற பதினோராவது உலகக் கிண்ணச் சுற்றில் முதல் முறையாக 'உலகக் கோப்பை'யை வென்றெடுத்தனர். இவர்கள் 1986-ம் ஆண்டு மெக்சிக்கோவில் நடைபெற்ற பதின்மூன்றாவது உலகக்கிண்ணச் சுற்றிலும் வெற்றியீட்டினர். 1990-ம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற பதினான்காவது உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் மேற்கு ஜேர்மனியிடம் 1 - 0 என்ற அடிப்படையில் தோல்வி கண்டனர். இவ் இறுதிப்போட்டியில் குஸ்ரவோ டெசொற்றி (Gustavo dezotti)பெட்றோ மென்சோன் (Pedro menzon) ஆகிய இரு ஆர்ஜென்ரீனா வீரர்களும் ஆட்டத்தின் போது மத்தியஸ்தரால் வெளியேற்றப்பட்டமையே இத் தோல்விக்கு முக்கிய காரணமாகும்.

இவ் அணியின் பயிற்சியாளராக இருக்கும் 'டானியல் பசறெலா', 1978ம் ஆண்டு தமது நாட்டில் நடைபெற்ற பதினோராவது போட்டியில் உலகக் கிண்ணத்தை வெற்றிகொண்ட அணியின் தலைவராவர். 'சென்சினி', 'சமோற்', அயாலா போன்ற பாதுகாப்பு வீரர்களுடன் 'சிமியோன்', 'கலார்டோ', 'பற்றிஸ்ருற்றா' ஆகிய உலகின் சிறந்த தாக்குதல் வீரர்கள் இவ் அணியில் இடம்பெறுவது சிறப்பம்சம் ஆகும்.

1921, 1925, 1927, 1929, 1937, 1941, 1945, 1946, 1947, 1955, 1957, 1959, 1991, 1993ம் ஆண்டுகளில் தென் அமெரிக்க கிண்ணத்தை வெற்றிகொண்டவர்கள் என்ற பெருமைக்கும் இவர்கள் உரியவர்களாவர்.

— ஜே.ஜே. —



# சந்திரபோல் ஏற்றிய மேற்கிந்திய தீவுகளின் வெற்றி

ஆறு டெஸ்ட் போட்டிகளை உள்ளடக்கிய மேற்கிந் தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டித் தொடரில் நான்காவது டெஸ்ட் போட்டியை மிக இலகுவாக மேற்கிந்திய தீவுகள் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, அணித் தலைவர் லாறா, சந்திரபோல் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம்பெற்ற 93, 118 ஓட்டங்களால் சகல விக்கட்டுக்கள் இழப்பிற்கு 352 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.


பதிலுக்கு ஆடிய இங்கிலாந்து அணியினால், தனது முதலாவது இனிங்சில் 170 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. ராம்பிரகாஷ் ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களைப் பெற்றார்.

முதலாவது இனிங்சைப் போல் இரண்டாவது இனிங்சில் ஆட முடியாது போன மேற்கிந்திய தீவுகள், தனது இரண்டாவது இனிங்சில் 197 ஓட்டங்களையே பெற்றது.



இரண்டாவது இனிங்சை ஆட ஆரம்பித்த இங்கிலாந்து அணி, நீண்ட அனுபவத்தைக் கொண்ட பந்துவீச்சாளர்கள் அம்புறூஸ், வோர்ஸ், ஹூப்பர் ஆகியோரது பந்துவீச்சுக்குத் தாக்குப்பிடிக்க முடியாது 137 ஓட்டங்களையே பெற்று, 242 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

# சாம்பிராஸ் நூறு கிழமைகள் தொடர்ச்சியாக முதலிடத்தில்



ஆண்கள் டென்னிஸ் பிரிவில் சர்வதேச தரத்தில் முதன்மை வீரராக திகழ்பவர் அமெரிக்காவின் சாம்பிராஸ் என்பது நாம் அறிந்த விடயம். ஆனால், அவர் தொடர்ச்சியாக 100 கிழமைகள் முதலிடத்திலுள்ளார் என்றும் இவ்வாரத் தொடக்கத்திலிருந்து அறிய வேண்டியேற்பட்டது. இவ்வாறு 100 கிழமைகள் தொடர்ச்சியாக இருந்தவர்கள் வரிசையில் சாம்பிராஸ் மூன்றாவது வீரராவார். இதற்கு முன்பு 1974 இலிருந்து 1977 ஆண்டு வரை அமெரிக்காவின் ஜிம்மி கொனேர்ஸ் 160 கிழமைகளும், 1985 முதல் 1988 வரை செக் நாட்டின் இவான் லெண்டல் 157 கிழமைகளும் தொடர்ச்சியாக முதலிடத்திலிருந்தார்கள்.

அது மட்டுமன்றி இவான் லெண்டல் 270 கிழமைகளும், ஜிம்மி கொனேர்ஸ் 268 கிழமைகளும் சாம்பிராஸ் 218 கிழமைகளும் முதலிடத்தில் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# 100 டெஸ்ட் விளையாடிய வீரர்கள்

கிரிக்கட்டை பொறுத்தவரை சதம் எனப்படும் 100 எண்ணுக்கு மகுசோ தனி மகுசு. ஒரு வீரன் 100 ஓட்டங்களைப் பெற்றுவிட்டால் 'செஞ்சுரி வீரன்' என்று புனைபெயரே வைத்துவிடுவார்கள். பொறுமையாக நிதானத்துடன் சிறந்த முறையில் 100 ஆட்டங்களைத் தாண்டி தமக்கும் ஓர் புனைபெயர் வராதா என்று ஏங்கும் வீரர்கள் விபரம் வருமாறு:

| வீரர் | நாடு | விளையாடிய டெஸ்ட் | 1வது | 100வது |
|---|---|---|---|---|
| அலன் போர்டர் | அவுஸ்திரேலியா | 156 | 29.12.78 | 24.12.88 |
| கபில்தேவ் | இந்தியா | 131 | 16.10.78 | 15.11.89 |
| சுனில் கவஸ்கார் | இந்தியா | 125 | 06.03.71 | 17.10.84 |
| விவியன் ரிச்சர்ட்ஸ் | மேற்கிந்திய தீவுகள் | 125 | 22.11.74 | 18.11.88 |
| யாவிட் மியன்டாட் | பாகிஸ்தான் | 124 | 09.10.76 | 01.12.89 |
| கிறகாம் கூச் | இங்கிலாந்து | 118 | 10.07.75 | 29.01.93 |
| டேவிட் கவர் | இங்கிலாந்து | 117 | 01.06.78 | 21.07.88 |
| கெக்மன்ஸ் கெயின்ஸ் | மேற்கிந்திய தீவுகள் | 116 | 03.03.78 | 04.07.91 |
| டிலீப் வெங்கஸ்கார் | இந்தியா | 116 | 24.01.76 | 24.10.88 |
| கொலின் கௌறி | இங்கிலாந்து | 114 | 26.11.54 | 11.07.68 |
| கிளைவ் லொயிட் | மேற்கிந்திய தீவுகள் | 110 | 13.12.66 | 28.04.84 |
| ஜெஃப் போய்கொட் | இங்கிலாந்து | 108 | 04.06.64 | 02.07.81 |
| கோடன் கிறினீச் | மேற்கிந்திய தீவுகள் | 108 | 02.11.74 | 13.04.90 |
| டேவிட் பூன் | அவுஸ்திரேலியா | 107 | 23.11.84 | 21.04.95 |
| இயன் பொத்தம் | இங்கிலாந்து | 102 | 28.07.77 | 02.02.92 |
| ஸ்ரிவ் வோவ் | அவுஸ்திரேலியா | 101 | 26.12.85 | 02.01.98 |
| இயன் கிலி | அவுஸ்திரேலியா | 100 | 15.09.88 | 30.01.98 |

100 போட்டிகளை தாண்டிவிட்ட இந்த 17 வீரர்களுக்குள்ளும் சில சிறப்பான அம்சங்கள் உண்டு. அவற்றின் சிறப்புக்கள் இதோ:

- ★ முதலில் 100 போட்டிகளை எட்டியவர் கொலின் கௌறி.
- ★ கூடிய வயதில் 100 போட்டிகளைத் தாண்டியவர் ஜெஃப் போய்கொட் (40 வயது 254 நாட்கள்)
- ★ குறைந்த வயதில் தாண்டியவர் கபில்தேவ் (30 வயது 314 நாட்கள்)
- ★ நீண்டகாலம் எடுத்துக்கொண்டவர் கிளைவ் லொயிட் (17 வருடம் 137 நாட்கள்)
- ★ முதலாவது போட்டியிலும் 100வது போட்டியிலும் சதம் அடித்தவர்கள்: மியன்டாட், கிறினீச்.
- ★ முதலாவது போட்டியையும் 100வது போட்டியையும் ஒரே மைதானத்தில் ஆடியவர்கள்: அலன்போர்டர் (மெல்பேர்ண்), மியண்டாட் (லாகூர்)
- ★ குறுகிய காலத்தில் 100 போட்டிகளைச் சந்தித்தவர்: இயன் கிலி. அத்தோடு 100 போட்டிகளைத் தாண்டிய முதலாவது விக்கட் காப்பாளரும் இவரே.

தொகுப்பு: பொன். தாமோதரம்


# பாகிஸ்தான் வெற்றி



தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் எதிர்பார்க்க முடியாத முடிவாக பாகிஸ்தான் 29 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி சகல விக்கட்டுக்கள் இழப்புக்கு 259 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்க அணியினது ஆட்டமும் சோபிக்காத நிலையில் சகல விக்கட்டுக்கள் இழப்பிற்கு 232 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்சை ஆடிய பாகிஸ்தான் சகல விக்கட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களையே பெற்றுக்கொண்டது. எனினும் பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பெடுத்தாட்டக்காரர் சயிட் அன்வர் சிறப்பாக ஆடி 118 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

255 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆட ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, ஆரம்பத்திலிருந்தே விக்கட்டுக்களை இழக்கத் தொடங்கியது. ஆனால் விக்கட் காப்பாளர் 'புச்சர்' பலமாக முயற்சித்து 52 ஓட்டங்களைப் பெற்ற போதும், பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முஸ்சாட் 6 விக்கட்டுக்களை வீழ்த்தி தென்னாபிரிக்காவை 225 ஓடடட்ங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் பாகிஸ்தான் அணி வெற்றியைப் பெற்றுக்கொண்டது.




## பிரபலமான வணிகப் பெயர்களும் இலாப விகிதமும்

(2 வருட நிகரலாபம்)

| | |
|---|---|
| கொக்கோ கோலா | 71% |
| கொடேக் | -8% |
| ஜில்லட் | 101% |
| மக்டொனால்ட் | 3% |
| சொனி | 49% |
| வேர்ல்ட் டிஸ்னி | 78% |

(மேற்கூறிய நிறுவனங்களில் முதலிட்டவர்கள் மேற்குறிப்பிட்ட விகித இலாபத்தை ஈட்டியுள்ளனர்.)

## EL Niño வின் தாக்கம்

### பொருளாதார வரட்சியும் - வெள்ளமும்

பெருவின் வருடாந்த வளர்ச்சி வீதத்தில் 1% வீழ்ச்சி; உகண்டாவின் வீழ்ச்சி வீதம் 2%; தன்சானியா அவசர உதவியாக 45 மில்லியன் டொலர்களை உலக வங்கியிடம் கோருகின்றது. கலிபோர்னியாவில் மண்மூட்டை விற்பவர்களின் விற்பனை 500% வளர்ச்சிகண்டுள்ளது....

இவை அனைத்தும் உலகை அச்சுறுத்தும் EL Niño வின் தாக்கமாகும். பசுபிக் கடலின் மேற்பரப்பின் வெப்பம் அதிகரித்து அதன் தாக்கம் உலக வானிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. 15-ம் நூற்றாண்டில் பெரும் பகுதிகளில் ஸ்பானியர்கள் அவதானித்த இத்தகைய தாக்கம் 1950-ம் ஆண்டின் பின் 13 தடவைகள் உலகை உலுக்கி உள்ளது.

1982-ம் ஆண்டளவில் உலகை உலுக்கிய EL Niño வின் பொருளாதார இழப்பு 13 பில்லியன் டொலர்கள் ஆகும்.

தற்போது உருவாகியுள்ள EL Niño இன்னமும் சில மாதங்கள் நீடிக்கும் எனவும், இதன் பொருளாதார இழப்புகள் முன்னையதிலும் பார்க்க மோசமாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது.

இந்தோனேசியா - மலேசியா போன்ற ஆசிய நாடுகள் கடும் வரட்சிக்கு உள்ளாகி இதன் மூலம் விவசாயத்துறை இழப்புக்களை அடைந்துவருகின்றது. மூலதன நகர்வுகளினால் பாதிக்கப்பட்ட இந்நாடுகள் EL Niño வினது தாக்குதலினால் மோசமாகப் பாதிக்கப்படும் என எதிர்வு கூறப்படுகின்றது.

கிழக்கு மற்றும் மத்திய ஆபிரிக்காவில் பொருளாதாரம் EL Niño வினால் அச்சுறுத்தப்பட்டுவிட்டது. கடும் மழையும் வெள்ளமும் விவசாய உட்கட்டுமானத்தை அழித்துப் பல இலட்சம் மக்களின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துள்ளன.

500% அதிகரித்த மழை இப் பகுதிகளின் கைத்தொழில் உட்கட்டுமானத்தைச் சீர்குலைத்துள்ளது.

அமெரிக்கா கண்டத்தின் வடக்குக் கரையும், தெற்குக் கரையும் முரண்பட்ட காலநிலைகளுக்கு உள்ளாகி உள்ளன. பெரு, ஈக்குவடோர், மெக்சிக்கோ, அமெரிக்க பொருளாதாரங்கள் EL Niño வின் சேதத்திற்கு உள்ளாகி உள்ளன.

## ஜெனரல் மோட்டார் (ஐரோப்பா)

### ஒபல் ⇩ ($471 மில்லியன்)
### வக்ஸ்ஹோல் ⇩ $778

உலகின் மோட்டார் வாகன பலவான்கள் ஜெனரல் மோட்டாரின் ஐரோப்பிய பிரிவு, தன் இலாபத்தில் 5.4% ஐ 1997-ல் இழந்துள்ளது. இதன் 1997-ம் ஆண்டிற்கான மொத்த வருவாய் $24.11 பில்லியன்கள்.

இவ்வருடம் தமது புதிய Opel/Vauxhaul Astra-ல் சுமார் 500,000 வாகனங்கள் ஐரோப்பாவில் விற்பனையாகும் என கணிப்பிடும் ஜெனரல் மோட்டார், தனது இப் புதிய வாகனத்தை மார்ச் 20-ம் திகதி வெளியிடுகின்றது. இப் புதிய வாகனத்தைக் கண்டுபிடிக்க 2.3 பில்லியன் டொலர்களை நிறுவனம் செலவழித்துள்ளது. இந் நிறுவனத்தின் ஒபல் 17 மில்லியன் டொலர்கள் நட்டத்தைக் கடந்த வருடம் ஈட்டியது. ஒபலின் ஐரோப்பியச் சந்தை 11.6% ஆகும்.



புதிய ஆண்டிற்கான புதிய 'றோல்ஸ் றொய்ஸ்'

## தென்கொரியா:

### அசிங்கமாகிப்போன 'அதிசயம்'

(சென்றவாரத் தொடர்ச்சி)

எங்கு நிறுவனத்தின் தோல்வி, கொரியா மீது சர்வதேச சந்தை வைத்திருந்த நம்பிக்கையை பொய்க்க வைத்தது. கொரியாவுக்கான ஏற்றுமதி, இறக்குமதி கடன்களை வழங்க உலக வங்கிகள் தயாராகவில்லை.

கொரியாவின் நாணயம் 'பெறுமதி இழக்கும்' அபாயத்தை எதிர்கொண்டது. ஏனெனில் முதலீட்டாளர்கள் பலரும் தம் கொரிய நாணயங்களை டொலர்களுக்கு மாற்றிவிட விரும்பினர். (டொலருக்கான தேவை கூடி விநியோகம் அதற்கு ஏற்ப இல்லாவிட்டால், கொரிய நாணயத்தின் மதிப்பு வீழ்ந்து டொலரின் மதிப்பு கூடும் என்பது சந்தை விதி) கொரிய நாணயம் மதிப்பிழக்கத் தொடங்கியபோது கொரிய அரசு 10 பில்லியன் டொலர்களை தன் வெளிநாட்டு கையிருப்பில் இருந்து எடுத்து செலவழித்து தன் நாணயத்தை பாதுகாக்க முற்பட்டது.

(போதிய டொலர்களை உள்ளூர் சந்தைக்குள் விடுவதன் மூலம் விநியோக பற்றாக்குறையை தீர்க்கலாம் அல்லது உள்ளூர் நாணய விநியோகத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் உள்ளூர் நாணயங்கள் மதிப்பிழக்காது பாதுகாக்கலாம் என்பது சாதாரண சந்தை நடைமுறை)

ஆயினும் எந்த முதலீட்டாளரும் கொரியாவை நம்பத் தயாராகவில்லை. ஊக வியாபாரிகள் கொரியாவை மீள மீளத் தாக்கினர். 1997 டிசம்பரில் ஒரு டொலருக்கான won இன் பெறுமதி 844 ஆக இருந்து, 1500 ஆக வீழ்ச்சியடைந்தது.

(தொடரும்)

- ராஜா

## பில் கேட்சின் சாமர்த்தியம்

### - Spy Glass

Spy Glass ஒரு சிறிய இன்ரர்நெட் நிகழ்ச்சிக் கோவை நிறுவனம். 1994-ம் ஆண்டு அமெரிக்க இலிநொயிஸ் பல்கலைக்கழகம் தயாரித்த Mosaic எனும் 'இன்ரர்நெட்டிற்கான மூலமான நிகழ்ச்சிக் கோவையை' உத்தியோகபூர்வமாகத் தயாரிக்கும் அதிகாரத்தை இது பெற்றது.

இன்ரர்நெட் தகவல் புரட்சியினைச் சற்று தாமதமாக அவதானித்த பில் கேட்ஸ், உடனடியாக 100,000 டொலர்கள் பெறுமதியான உடன்பாடொன்றை Spy Glass இன் முன் வைத்தார். Mosaic இற்கான உரிமையைத் தருமாறு Spy Glass கேட்கப்பட்டது. 'நீங்கள் தராவிட்டால் நாங்கள் புதிதாக ஒன்றைத் தயாரிப்போம்; எமக்கு அது ஒரு பெரிய விடயமல்ல' என பில்கேட்ஸ் அச்சுறுத்தினார். ஆனாலும் பில்கேட்ஸிற்கு உடனடியாக Mosaic போன்றதொரு நிகழ்ச்சிக் கோவை தேவைப்பட்டது. இறுதியில் 2 மில்லியன் டொலர்களிற்கு Winuows 95 இல் Mosaic ஐ பாவிப்பதற்கான உரிமையை பில்கேட்ஸ் பெற்றார். பின்னர் 13.1 மில்லியன் டொலர்களிலும் Mosaic இன் உரிமைகளை Windows 3.1 மற்றும் தன் இன்ரர்நெட் தேவைகளுக்காக பில்கேட்ஸ் பெற்றார். Spy Glass தன் சந்தையை விரிவாக்கி 82 பிற நிறுவனங்களுக்கும் Mosaic இன் உரிமையை விற்றது. இதற்காக 20 மில்லியன் டொலர்களை Spy Glass பெற்றது.

1995 டிசம்பரில் வணிகர் பில் கேட்ஸ் தனது சொந்த நிகழ்ச்சிக் கோவையை வெளியிடுவதாக அறிவித்தார். Spy Glass தன் முதல் தோல்வியைச் சந்தித்தது. கேட்ஸின் மைக்ரோ சொவ்ட் விநியோகித்த இலவச இன்ரர் நெட் கோவை Spy Glass ஐ தோற்கடித்தது.

பில்கேட்ஸின் சாமர்த்தியத்துடன் தன்னால் போராட முடியாது என உணர்ந்த Spy Glass, தன் சந்தையை கேட்ஸின் பார்வை படாத பிற இலத்திரனியல் - கணினிக் கட்டுப்பாட்டு துறைகளுக்குள் கொண்டு சென்றது. இத் துறைக்கு 2001-ம் ஆண்டு 48 மில்லியன் டொலர்கள் சந்தை உள்ளதாக Spy Glass கணிப்பிடுகிறது.

'பில்கேட்ஸின் வியாபாரச் சாதுர்யத்தைப் பாராட்டுகிறோம். அவருடன் மோதுவதிலும்பார்க்க புதிய துறைகளை கண்டுபிடிப்பதே சிறந்தது' என்கிறது Spy Glass.

## இந்தியத் தேர்தல் முடிவுகளும் கைத்தொழில் அதிபர்களின் கவலையும்

இந்தியாவின் அடுத்த பிரதமர் யார்? என உலக சமூகம் எதிர்பார்த்திருக்கையில் குழப்பமான மக்களின் முடிவினால் இந்தியக் கைத்தொழில் அதிபர்கள் குழம்பிப் போய் உள்ளனர்.

ஸ்திரமான அரசு இந்தியாவின் பொருளாதார நலனுக்கு அவசியமானது. திட்டமிடல் - அமுல்படுத்தல் என்பவற்றுடன் ஸ்திரமான அரசு, ஊக வணிகர்களிற்கு இடம்கொடுக்காது. நாணயத்தின் பெறுமதியினை ஸ்திரமான அரசு பாதுகாக்கும் பலத்தினைக் கொண்டிருக்கும்.

இந்தியா இவ்வருடம் 8% வளர்ச்சியினை திட்டமிட்டது. ஆனால் ஸ்திரமற்ற அரசின் காரணமாக இது 5% ஆகவே இருக்கும் என மதிப்பிடப்படுகின்றது.


பா.ஜ.க. அல்லது காங்கிரஸ் என எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் இந்தியாவின் பொருளாதார கொள்கையில் மாற்றங்கள் ஏற்படாவிடினும், ஸ்திரமின்மை தவறான பொருளாதார சமிக்ஞையை உலகுக்கு அனுப்பும் எனக் கவலை கொள்கிறார், இந்தியாவின் பாரிய வீட்டுப் பாவனைப் பொருட்கள் உற்பத்தியாளர் திரு. கோட்ராஜ். இவரது கவலை தமது உற்பத்திக்கு ஏற்ற சந்தையை இந்தியாவிலும், உலக ரீதியாகவும் பெறுவதற்கே என இடதுசாரிகள் குற்றம் சாட்டுகின்றனர்.



*(கடந்த 02.03.98 திங்களன்று தேர்தல் முடிவுகளை எதிர்பார்த்துப் பங்குச் சந்தையில் இடம்பெற்ற இலாப அதிகரிப்பால் களிப்புறும் வணிகர்கள்)*

## நாணயமாற்று விகிதம்

| | $ | £ | DM | F Fr | S. Fr |
|---|---|---|---|---|---|
| பிராங்பேட் | 1.83 | 3.00 | — | 0.30 | 1.23 |
| சூரிச் | 1.48 | 2.44 | 0.81 | 0.24 | — |
| பாரிஸ் | 6.15 | 10.05 | 3.35 | — | 4.12 |
| லண்டன் | 0.61 | — | 0.33 | 0.10 | 0.41 |
| நியூயோர்க் | — | 1.64 | 0.55 | 0.16 | 0.67 |
| பம்பாய் | 39.40 | 64.50 | 21.51 | 6.41 | 26.15 |
| கொழும்பு | 61.70 | 101.00 | 33.69 | 10.03 | 41.42 |




வாணன் வாகன சேவை




உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

Tel: 01 42 52 06 80 / 01 48 05 21 63 / 06 09 29 88 35

சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்




| | |
|---|---|
| இந்தியா | 30 நிமிடம் |
| கனடா | 80 நிமிடம் |
| தாய்லாந்து | 25 நிமிடம் |
| ஹொங்கொங் | 45 நிமிடம் |
| பிரான்ஸ் | 135 நிமிடம் |
| இலங்கை | 30 நிமிடம் |
| சுவிஸ் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 28 நிமிடம் |
| சிங்கப்பூர் | 45 நிமிடம் |

| | |
|---|---|
| பிரித்தானியா | 100 நிமிடம் |
| அமெரிக்கா | 100 நிமிடம் |
| ஜேர்மனி | 75 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 32 நிமிடம் |
| அல்ஜீரியா | 50 நிமிடம் |
| மொரோக் | 50 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) 80 நிமிடம் | |

## இலங்கைக்கு 30 நிமிடங்கள்

தொடர்புகளுக்கு:

**Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14**

**GNANAM**
**Telecom Center**
195, Rue du Fg. Saint Denis.
75010 Paris, France.
Tel: 01 46 07 09 36
Fax: 01 46 07 00 14
**M°: La Chapelle / Gare du Nord**

பாரிஸ் 18-ல்
13, Rue de Suez,
75018 Paris.
Tel: 01 42 52 32 52
Fax: 01 42 52 34 52
M°: Château Rouge

பாரிஸ் 20-ல்
38, Rue de Belleville
75020 Paris.
Tel: 01 40 33 36 72
M°: Concourt

பாரிஸ் 11-ல்
175, Rue de St.Maur,
75011 Paris.
Tel: 01 43 38 22 98
M°: Belleville

பாரிஸ் 10-ல்
83, Rue du Fg. St.Denis
75010 Paris.
M°: Château d'eau

வெகு விரைவில்

சுவிஸ், லண்டனில்
எமது சேவை ஆரம்பமாகின்றது!

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

# வட அயர்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தை தொடரும்! மே 7-ல் சர்வசன வாக்கெடுப்பு

(லண்டன் மார்ச் 2)

வட அயர்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் திட்டமிட்டபடி தொடரும் என்றும், பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயர் IRA யுடன் அரசியல் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் பிரித்தானிய நிர்வாகத்திலுள்ள வட அயர்லாந்து அமைச்சர் மோமௌலம் B.B.Cக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் அயர்லாந்தில் இடம்பெற்ற 2 அரசியல் படுகொலைகளின் பின்னணியில் IRA இயக்கம் சம்பந்தப்பட்டிருப்பதாக பிரித்தானிய பொலிசார் சுமத்திய குற்றச்சாட்டை அடுத்து சின்பெயின் அமைப்பு சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக தள்ளி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் வடஅயர்லாந்து அமைச்சர் மோமௌலம், பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயர் நிச்சயம் சின்பெயின் அமைப்பைச் சந்தித்துப் பேசுவார். அதில் சந்தேகம் இல்லை. ஆனால் அது எங்கே எப்போது நடைபெறும் என்று சொல்வதற்கில்லை என்று உறுதிபடக் கூறியுள்ளார்.

பிரித்தானிய ஆட்சியின் கீழ் இயங்கிவரும் வட அயர்லாந்தை ஐரிஷ் குடியரசுடன் இணைப்பதற்கு 29 வருடமாக போராடி வரும் ஐரிஷ் கெரில்லாக்களை (IRA) யும் அதன் அரசியல் பிரிவான சின்பெயின் அமைப்பையும் தொடர்ந்து தள்ளி வைக்கவேண்டும் என்று வட அயர்லாந்திலுள்ள பெரிய புரட்டஸ்தாந்துக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

வட அயர்லாந்திலுள்ள புரட்டஸ்தாந்து மதத்தினர் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த ஐரிஷ் குடியரசுடன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்த விடயம் தொடர்பாக திட்டமிட்டபடி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றால் மேமாதம் 7-ம் திகதி சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று பிரித்தானியத் தரப்பில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## வடமராட்சி கிழக்கில்....

காயமடைந்த படையினரையும் தூக்கிக்கொண்டு தாளையடி முகாமிற்கே திரும்பிவிட்டனர்.

இப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பிடி மேலும் இறுக்கமடைந்துவருவதால் படையினர் முகாங்களிலேயே நிரந்தரமாக முடங்கநேரிடும் எனக் கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## கடற்படைக்கு....

றிக்கு அவர்கள் தமது கடற்கலங்களில் உபயோகிக்கும் 250 குதிரை வலு சக்தி கொண்ட மோட்டார் இயந்திரங்கள் பெரிதும் பங்களித்ததாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளதுடன் புலிகளின் இந்த சவாலினை கடற்படையினர் முறியடிப்பது இயலாது எனவும் குறிப்பிட்டுள்ளர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## அவுஸ்திரேலியாவில்....

தும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடையதும் கவி வரிகளுக்கு இசைவடிவம் கொடுக்கப்பட்டு மக்களுக்கு இன எழுச்சியை ஏற்படுத்தும் வகையில் திரு செல்லப்பா அவர்கள் பாடினார்.

பாடல்களுக்கு இடையே பல அரசியல் செய்திகளையும், சமூக, இன விழிப்பு செய்திகளையும் எடுத்துக்கூறினார். முழு நிகழ்ச்சிக்குமே சிகரம் வைத்தாற்போல தங்கமாலை கழுத்துக்களே கொஞ்சம் நில்லுங்கள்' என்ற பாடல் பாடி முடியும் போது உணர்ச்சி கொண்ட மூதாட்டியொருவர் தான் அணிந்திருந்த தங்கவளையலை கழற்றி விடுதலைப் போராட்டத்திற்கு காணிக்கையாக தந்தார். தொடர்ந்து ஐம்பதிற்கு மேற்பட்ட மக்கள் தாங்களாகவே முன்வந்து தமது சங்கிலிகள், வளையல்கள், மோதிரம் போன்றவற்றையும் போருக்கு காணிக்கையாக வழங்கினர்.

இந்நிகழ்ச்சியின்போது ஆளுக்கு ஒரு டொலர் நாளொன்றுக்கு கொடுப்போம் என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. நான்கு மணிநேரமாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் இறுதியில் 'நம்புங்கள் தமிழீழம் நாளைபிறக்கும்' என்ற பாடலை திரு தேனிசை செல்லப்பா பாட மக்கள் எழுந்து நின்று கைதட்டி சேர்ந்து பாடினர்.


பிராங்பேர்ட் மாநகரில்

ஆதவா ஆசியா சென்ரர்



தங்க மாளிகை

- ஜவுளியகம், நூலகம்
- விமானப் பயணச் சீட்டுக்கள்
- வீடியோ ஓடியோ விஷன்
- எவர் சில்வர் பாத்திரங்கள்
- மளிகைப் பொருட்கள்
- மரக்கறி வகைகள்
- கடலுணவுப் பொருட்கள்
- தொலைபேசி அட்டைகள்
- அன்பளிப்பு -அலங்காரப் பொருட்கள்

உங்கள் அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் மன நிறைவுடன் பூர்த்தி செய்ய நாடவேண்டிய ஒரே இடம்.

Adavaa Asiya Centar

Taunusstr. 19, 60329 Frankfurt/Main
Tel: 069/250361 + 250362 / Fax: 069/234045
Travels - 069/92919139

நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்


# சந்திரனில் உறை நிலையில் தண்ணீர் 'நாசா' விஞ்ஞானிகள் அறிவிப்பு

(நியூயோர்க் - மார்ச் 6)

பூமியின் துணைக்கோளான சந்திரனில் தண்ணீர் உறைந்த நிலையில் இருப்பதாக அமெரிக்க விண்வெளித்துறை ஆய்வு நிறுவனமான 'நாசா' விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

சந்திரனுடைய வட, தென் துருவங்களில் 1000 KM 2 பரப்பளவில் தண்ணீர் இறுக்கமான பனிக்கட்டியாக உறைந்த நிலையில் காணப்படுகிறது என சந்திரனை ஆய்வுசெய்வதற்காக தம்மால் அனுப்பப்பட்ட Space Craft Lunar அனுப்பிய தகவல்களில் இருந்து தெரிய வந்துள்ளதாக அறிவித்திருக்கும் 'நாசா', இத் தகவல் 100 வீதம் சரியானது என்று கூறமுடியாது, ஆனால் சரியானது என நம்புவதற்கான அதிகரித்த சாத்தியக்கூறுகள் உள்ளதெனவும் கூறியுள்ளது.

தற்போது சந்திரனைச் சுற்றி வந்து ஆய்வு வேலைகளில் ஈடுபட்டுவரும் Space Craft Luner-ல் பொருத்தப்பட்ட ஆய்வுக்கருவிகள் இந்த விடயத்தை நூற்றுக்கு நூறு வீதம் உண்மையானது என உறுதிப்படுத்துமளவுக்கு துல்லியமான செயற்பாட்டுத் திறன்கொண்டவை அல்லவென்றும் விரைவில் அந்தக் குறைபாடு நீக்கப்படும் என்றும் நாசா மேலும் கூறியுள்ளது.

1960-களின் நடுப்பகுதியிலிருந்தே சந்திரன் தொடர்பான ஆய்வுகள் அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் மேற்கொள்ளப்பட்டுவந்த போதிலும் 1996 வரை அங்கு தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளை யாரும் கண்டுபிடிக்கவில்லை.

தற்போது அங்கு தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டாலும் உயிரினங்கள் வாழக்கூடிய சாத்தியக்கூறு இல்லை என்றே வான்கோளியல் விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## முல்லைக் கரையோர....

இப் படகுகளில் இருந்த ஐந்து மீனவர்கள் காணாமல் போயுள்ளனர். இவர்கள் கள்ளப்பாடு, பொக்கணை கிராமங்களைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பித்த தாக்குதல்கள் மறுநாள் அதிகாலை 3 மணி வரை நீடித்தது. அடுக்கடுக்காக பீரங்கிக் குண்டுகள் கரையோரக் கிராமங்களுள் வீழ்ந்து வெடித்தன. இதனால் வீடுகள் சில தீப்பிடித்து எரிய ஆரம்பித்தன. சிறிதுநேர இடைவெளியின் பின் மீண்டும் சனிக்கிழமை காலை 7 மணியளவில் பீரங்கித் தாக்குதல்கள் தொடர்ந்தன.

சிறீலங்கா கடற்படையின் நாசகாரத்தால் கரையோரத்தில் வசிக்கும் மக்கள் தமது வீடுகளை விட்டு இரவோடு இரவாக பாதுகாப்புத் தேடி ஓடியுள்ளனர். இதேவேளை அம்பலவன் பொக்கணைப் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்றவர்கள் மீதும் கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்டனர். இதன் போது, கள்ளப்பாட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான செபமாலை இருவேந்திரன் ரவி (26), அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த நாலு பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப்பிள்ளை ஜோசப் (42) மயிலிட்டியைச் சொந்த இடமாகவும் அம்பலவன் பொக்கணையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட இரண்டு பிள்கைளின் தந்தையான அரிகரிதாசன் (29) ஆகிய மூவர் பலியாகியுள்ளனர். கடலில் குதித்த இரு மீனவர்கள், தேடிச் சென்ற மீனவர்களால் மீட்கப்பட்டனர். பல இலட்சக் கணக்கான ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் எரிந்து நாசமாய்ப் போயுள்ளதாயும் தெரிய வருகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## மருதானையில்....

தால் சில வாகனங்கள் பல அடி தூரம் தூக்கி வீசப்பட்டும், , சில தீப்பிடித்து எரிந்தும் சாம்பலாகியுள்ளன. அவ்விடத்திற்கு வந்த படையினர் பலியானவர்களையும் காயமடைந்தவர்களையும் அகற்றப் பெரும் சிரமமடைந்துள்ளனர்.


சேதமடைந்த வர்த்தக நிறுவனங்கள் யாவும் சிறீலங்கா அரச பொறியியற் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானவை. மாத வாடகையில் இவை வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இறந்தவர்களில் இரு பொலிசாரும் அடங்குவதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## வன்னிவிளான்குளம்....

யில் அமைந்துள்ள இக் கிராமமானது சிறீலங்காப் படைகளின் தாக்குதலுக்கு உள்ளாகிவருவதால் மல்லாவி பகுதிகளின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது.

மல்லாவி நகரில் வன்னிப் பிரதேசத்திற்கான நிர்வாக அமைப்புக்களும், சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களின் காரியாலயங்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

நூல்கள் தேவை

விரைவில் ஆரம்பமாக இருக்கும் ஈழமுரசு நூலகத்திற்கு தரமான நூல்கள் தேவை.
நூல்கள் அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் பணியகத்திற்கு நேரடியாகவோ
அல்லது தபாற் பொதி மூலமாகவோ அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அனைத்து தொடர்புகட்கும்:
புதன் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.30 மணி முதல் 17.30 மணி வரை
தொலைபேசி இலக்கம்: 0140376363
தொலைஎழுதி: 0140376464



ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஈழமுரசு பிரித்தானியா சந்தா விபரம்

தபாற் செலவுடன்:- 52 - வாரங்களுக்கு £60 (520Frs.)
26 - வாரங்களுக்கு £30 (260Frs.)

தொடர்புகளுக்கு:
ஜெயந்தன் - 09 56 90 81 45 / குணம் - Tel: 09 56 27 77 18

E.Mail - eelamurasu@aol.com

# மருதானையில் பாரிய குண்டுவெடிப்பு

கொழும்பு மத்தியில் மருதானைப்பகுதியில் கடந்த 5ம் திகதி நண்பகல் இடம்பெற்ற வாகனக் குண்டுவெடிப்பொன்று கொழும்பு நகரம் முழுவதையும் உலுக்கியுள்ளது.

இக்குண்டு வெடிப்பின் காரணமாக 38 பேர் பலியானார்கள், 256 பேர் காயமடைந்துள்ளனர். 61 வர்த்தக நிலையங்கள், 34 வாகனங்கள் என்பவையும் முற்றாக அழிந்துள்ளன. மருதானை வீதியில் உள்ள மேம்பாலமும் இடிந்து வீழ்ந்துள்ளது.

இக் குண்டு வெடிப்புச் சம்பவம்பற்றி தெரியவருவதாவது,

பகல் 12.30 மணியளவில் மாளிகாவத்தைக்கும் சங்கராஜ மாவத்தைக்கும் இடைப்பட்ட பகுதியில் தனியார் ஜீப் ஒன்றுடன் குளிரூட்டப்பட்ட தனியார் பேருந்து ஒன்று சிறிதளவாக மோதியதால் ஜீப்சாரதி, தனியார் பேருந்துச் சாரதியுடன் சர்ச்சையிலீடுபட்டுள்ளார். அவ்வேளை அவ்விடத்திற்குப் பொலிசார் வரவே பேருந்தை அதன்சாரதி மேற்கொண்டு செல்லுத்தவே பொலிசாரும், ஜீப்காரரும் அதனைத் துரத்திக் கொண்டு மருதானைப் புகையிரத நிலையத்திற்கு அண்மை வரை சென்றுள்ளனர். சிற்றூர்தியை நோக்கி பொலிசார் வர முயன்றவேளையிலேயே சிற்றூர்தி அதிபயங்கர வெடியோசையுடன் வெடித்துச் சிதறியுள்ளது. குண்டுவெடிப்பு நிகழ்ந்தவுடன் கொழும்பு நகருக்கான தொலைபேசி இணைப்புக்கள் செயலிழந்தன.

குண்டுவெடிப்புச் சம்பவத்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# வடமராட்சி கிழக்கில் புலிகள் தாக்குதல் முகாங்களுக்குள் படையினர் முடக்கம்

வடமராட்சி கிழக்கு தாளையடி முகாமிலிருந்து விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கைக்கெனப் புறப்பட்டுச் சென்ற சிறீலங்காப் படையினரை இடைமறித்துத் தாக்கிய விடுதலைப் புலிகள் அவர்களை மீண்டும் முகாமிற்குள்ளேயே முடக்கியுள்ளனர்.

கடந்த 3-ம் திகதி 1.30 மணியளவிலேயே இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது. விடுதலைப் புலிகளின் தளங்களைத் தேடி அழிக்கவெனச் சென்ற இராணுவத்தினரை இடைமறித்த விடுதலைப் புலிகள் தன்னியக்க ஆயுதங்களைக் கொண்டும் மோட்டார்களைக் கொண்டும் பலத்த தாக்குதலைத் தொடுத்தனர்.

புலிகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத படையினர், தமது தரப்பில் அதிக இழப்பு ஏற்பட்டமையை அடுத்து இறந்த,

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# முல்லைக் கரையோர கிராமங்கள் மீது பீரங்கிப் படகுகள் தாக்குதல்

சிறீலங்கா கடற்படையின் பீரங்கிப் படகுகளின் வெறித்தனமான பீரங்கித் தாக்குதல்களினால் முல்லை மாவட்டத்தின் கரையோரக் கிராமங்கள் பெருநாசம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 6-ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத் தாக்குதல்களுக்கு இரண்டு மீன்பிடிப் படகுகள் இலக்காகி மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# அவுஸ்திரேலியாவில் தேனிசை செல்லப்பாவின் 'சுதந்திர தரிசனம்'

தமிழீழ விடுதலைக்காக கடந்த பல ஆண்டுகளாக உலகெங்கும் சென்று எழுச்சி கீதங்கள் இசைத்து தமிழ் மக்களின் நெஞ்சங்களில் விடுதலைத்தீயை மூட்டிய 'கம்பீரக் குரலோன்' கலைமாமணி தேனிசை செல்லப்பா அவர்களின் இசை நிகழ்ச்சி கடந்த 08.03.98 அன்று மெல்பேர்ண் நகரில் நடைபெற்றது.

மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்துடன் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில், தேனிசை செல்லப்பாவுடன் இணைந்து அவரது மகன் 'இசைமாமணி' இளங்கோவன் அவர்களும் கலந்து கொண்டார். அணி செய் கலைஞர்களாக உள்ளூர் வாத்தியக் கலைஞர்கள் பங்குபற்றி நிகழ்ச்சியை மெருகூட்டினர். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# கடற்படைக்கு சவால்விடும் கடற்புலிகள்

பருத்தித்துறை கடற்பரப்பில் நடாத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் அண்மைய கடற்படை தொடரணி அழிப்புத் தாக்குதலின் பின் விளைவுகள் தற்போது சிறீலங்கா கடற்படை வட்டாரங்களில் கடுமையாக எதிரொலிக்கின்றன.

முன்னதாக இத் தாக்குதல் குறித்து ஆராயவென சிறீலங்கா கடற்படை தளபதி சிசில் திசரவினால் விசேட விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது. அவ் விசாரணைக் குழுவினர் தமது விசாரணையின் போது, பலம் வாய்ந்த இயந்திரவலுவினை கடற் படையினர் தாக்குதல் நடாத்தப்பட்ட வேளை கொண்டிருந்த போதிலும் மிக மோசமான பின்னடைவு அடைந்தது ஏன்? என்ற கேள்வியினை எழுப்பியுள்ளனர்.

இக் கடற் தொடரணிக்கு பாதுகாப்பாக சென்ற பீரங்கிப் படகுகள் ஒவ்வொன்றிலும் இரு 37 மி.மீ. துப்பாக்கிகள், நான்கு 22மி.மீ. துப்பாக்கிகள், 14.5 மி.மீ. சுடுகலன்கள், உட்பட பல தாக்குதல் கலன்கள் இருந்த போதிலும் விடுதலைப்புலிகளை சமாளிக்க முடியாமற் போனமைக்கு காரணமேதுமில்லை எனவும் அக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை இத்தாக்குதலில் கடற்புலிகள் பெற்ற வெற்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# வன்னிவிளான்குளம் மீது பீரங்கித் தாக்குதல்

(09.03.98)

இன்று மாங்குளத்திற்கு மேற்காக உள்ள வன்னி விளான் குளம் கிராமம் மீது சிறீலங்காவின் பீரங்கிகள், எறிகணைகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டன. இதனால் அப் பகுதிகளைச் சேர்ந்த 455 குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளன.

மாங்குளம் - மல்லாவி வீதி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# சோதனைக்கு வந்த படையணிகள் சிதறடிப்பு

மட்டக்களப்பு தம்பின்னை பகுதியில் வீதிச் சோதனைக்கென வந்த சிறீலங்கா இராணுவ அணியொன்றின் மீது விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்துத் தாக்குதலை மேற்கொண்டு அவ்வணியை சிதறடித்துள்ளனர்.

கடந்த 3-ம் திகதி காலை 7.15 மணியளவிலேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் 3 படையினர் கொல்லப்பட்டனர்.

சிதறடிக்கப்பட்ட இராணுவ அணி தமது ஆயுதங்களையும் கைவிட்டுப் பிரதான முகாமினை நோக்கி ஓடிவிட்டனர். இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில்

ஆச்சீஸ்

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள் மற்றும் பலசரக்கு வகைகளுக்கும், ஒறிஜினல் Pyramid CD, Audios and Video CD (D.V.D) மற்றும் பழைய, புதிய பாடல்கள் அடங்கிய எல்லாவிதமான CD களையும், இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள



Archie'S Tel: 0181-2053652

205, Edgware Road, Colindale-Nw 9.